CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆலவாய் அண்ணலின் அருள் விளையாடல்கள்



வெளியிடுவோர்
ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்
திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta



சொக்கரும், மீனாக்ஷியும்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின் வெள்ளிவிழா நினைவாக
சமர்ப்பிக்கப்பட்ட தங்க அம்பாரியில்

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
வடமொழியும் தென்தமிழும்
மறைகள் நான்கும் ஆனவன் காண்

ஆலவாய் அண்ணலின் அருள் விளையாடல்கள்



வெளியிடுவோர்:
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்
திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் குறிப்புகள்

நூலின் பெயர்	:	**ஆலவாய் அண்ணலின் அருள் விளையாடல்கள்**
நூலின் வகை	:	சைவ சமயம்
நூலாசிரியர்	:	திருமதி. சிவ. பார்வதி, மதுரை (பதிப்பாளர், உழவாரம் திங்களிதழ், மதுரை)
பதிப்பு	:	விளம்பி – வைகாசி – 15, 16, (29, 30-5-2018) செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை
நூலின் அளவு	:	1/8 டெம்மி
பக்கங்கள்	:	100
தாள்	:	130 ஜி.எஸ்.எம். ஆர்ட் பேப்பர்
படிகள்	:	1000/-
விலை	:	ரூ. 200/-
வெளியிடுவோர்	:	**ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்** சன்னதித் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 625 005.
படங்கள் உதவி	:	முகநூல் அன்பர்கள் – நண்பர்கள்
புத்தக அமைப்பு	:	**ஸ்ரீ கணநாத நாயனார் நூலகம்** திருச்சிராப்பள்ளி.
அச்சாக்கம்	:	**ஆர்.ஜி.பிரிண்டர்ஸ்** 30, சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி – 620 002. செல் : 0431-2700417, 98949 08437
பக்க வடிவமைப்பு	:	**பேமஸ் பிரிண்ட்ஸ்** 65, சங்கரன்பிள்ளை ரோடு, திருச்சிராப்பள்ளி – 620 002. செல் : 9600 433 081

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்

திருப்பரங்குன்றம்
மதுரை-624 005

இந்நூல்
திருப்பரங்குன்றம்
ஆண்டவர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,
இரண்டாவது ஸ்தானிகர்,
மதுரை, அருள்மிகு மீனாக்ஷிசுந்தரேசுவரர் திருக்கோயில், அர்ச்சகர்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய முதல்வர்

'சிவாகம சிரோமணி' 'சிஷ்ய வாத்ஸல்ய ஜலதி'

சிவஸ்ரீ க. ராஜா பட்டர்

அவர்களது திருவுளப்பாங்கின் வண்ணம்
மதுரை, தமிழிசைச் சங்கம்
இராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறும்

திருப்பரங்குன்றம்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின்
வெள்ளி விழா மலராக
வெளியிடப்பட்டது.

2018, மே மாதம், 29,30

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்

ஸ்ரீ ஸ்கந்த குரு வித்யாலயம்
கந்தன் பாதம் கனவிலும் துணை செய்யும்
ஓம்
S.K.M.S.S. வேத சிவாகம பாடசாலை டிரஸ்ட்

திருப்பரங்குன்றம்
மதுரை-624 005



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருளடக்கம்

பதிப்புரை

மதுரைக் காண்டம்

1.	இந்திரன் பழிதீர்த்த படலம்	07
2.	வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்	09
3.	திருநகரம் கண்ட படலம்	10
4.	தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்	11
5.	தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலம்	13
6.	வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்	15
7.	குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்	16
8.	அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்	17
9.	எழுகடல் அழைத்த படலம்	18
10.	மாயத்துவசனை அழைத்த படலம்	19
11.	உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம்	20
12.	உக்கிரபாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம்	21
13.	கடல் சுவற வேல்விட்ட படலம்	22
14.	இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்	24
15.	மேருவைச் செண்டால் அடித்த படலம்	26
16.	வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலம்	27
17.	மாணிக்கம் விற்ற படலம்	28
18.	வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்	30

கூடற் காண்டம்

19.	நான்மாடக் கூடலான படலம்	31
20.	எல்லாம் வல்ல சித்தரான படலம்	33
21.	கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்	35
22.	யானை எய்த படலம்	37
23.	விருத்த குமார பாலரான படலம்	39
24.	கால் மாறியாடின படலம்	41
25.	பழியஞ்சின படலம்	42
26.	மாபாதகம் தீர்த்த படலம்	44
27.	அங்கம் வெட்டின படலம்	46
28.	நாகமெய்த படலம்	47
29.	மாயப் பசுவை வதைத்த படலம்	49
30.	மெய்க்காட்டிட்ட படலம்	50
31.	உலவாக்கிழி அருளிய படலம்	51
32.	வளையல் விற்ற படலம்	52
33.	அட்டமா சித்தி உபதேசித்த படலம்	54

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

34. விடை இலச்சினை இட்ட படலம் 55
35. தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம் 56
36. இரசவாதம் செய்த படலம் 57
37. சோழனை மடுவில் வீட்டிய படலம் 59
38. உலவாக்கோட்டை அருளிய படலம் 60
39. மாமனாக வந்து வழக்குரைத்த படலம் 61
40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம் 62
41. விறகு விற்ற படலம் 64
42. திருமுகம் கொடுத்த படலம் 66
43. பலகை இட்ட படலம் 67
44. இசை வாது வென்ற படலம் 68
45. பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்த படலம் 70
46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் 71
47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம் 72
48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம் 73

திருவாலவாய்க் காண்டம்

49. திருவாலவாயான படலம் 75
50. சுந்தரப் பேரம்பு எய்த படலம் 76
51. சங்கப் பலகை கொடுத்த படலம் 78
52. தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம் 79
53. கீரனைக் கரையேற்றிய படலம் 81
54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் 82
55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம் 83
56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் 84
57. வலை வீசின படலம் 86
58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் 87
59. நரி பரியாக்கிய படலம் 89
60. பரி நரியாக்கிய படலம் 90
61. மண் சுமந்த படலம் 91
62. பாண்டியன் சுரந்தீர்த்த படலம் 93
63. சமணரைக் கழுவேற்றிய படலம் 95
64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் 96

அருச்சனைப் படலம்

நூற்பயன்

வாழ்த்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

"திருவாலவாய்க்கு இணையாம் ஒருதலமும், தெய்வமணஞ் செய்யப்பூத்த
மருவார் பொற்கமலநிகர் தீர்த்தமும், அத்தீர்த்தத்தின் மருங்கில் ஞான
உருவாகி உறை சோமசுந்தரன் போல் இகபரந்தந்து உலவா வீடு
தருவானும் முப்புவனத்திலும் இல்லை உண்மை இது சாற்றின் மன்னோ."

– திருவிளையாடற் புராணம்

எல்லாம்வல்ல இறைவன் குன்றமமர்ந்த குமரன் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் திருவருளாலும், அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணல் சொக்கநாதப் பெருமானின் திருவருளாலும், ஸ்ரீ காஞ்சீ மஹாஸ்வாமிகளின் அருளாசியாலும், அல்லூர் குலபதி சாம்பவஸ்ரீ வை.விச்வநாத சிவாசார்ய ஸ்வாமிகள் அவர்களால் கடந்த 1993-ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்ட நமது ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம் 25 ஆண்டுகளை மிகச்சிறப்பாக நிறைவு செய்துள்ளது.

இவ்வித்யாலயத்தின் மூலமாக பல்வேறு அறப்பணிகள் இதுவரை செய்யப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் ஒன்று நம் சமயத்தின் கருத்துக்களை விளக்குகின்ற நூல் வெளியீடுகளும் ஆகும். அவ்வழியில் 25-ஆம் ஆண்டு நிறைவு - வெள்ளிவிழாவை முன்னிட்டு, பல நூல்கள் வெளியிடத் திருவருள் கூட்டியுள்ளது. அந்நூல் வரிசைகளுள் ஸ்ரீமத் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தைத் தழுவி மதுரை திருமதி. சிவ.பார்வதி (பதிப்பாளர், உழவாரம் திங்களிதழ், மதுரை) அவர்கள் எழுதிய இந்த உரைநடை நூலும் ஒன்றாகும்.

வேதங்களும் காணாத பாதங்கள் மதுரையம்பதியின் வீதிகளிலே பதிய, மண்சுமந்தும், விறகுவிற்றும், மாணிக்கம் விற்றும் இன்னும் பலவாகிய அறுபத்திநான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தியருளிய அற்புதத் திருத்தலம். நாரைக்கு முக்தியளித்தும், பன்றிக்குப் பால்கொடுத்தும் அருள்செய்த மதுராபுரிநாயகனின் விருப்பத்தலம். மூர்த்தி, தலம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீர்த்தம் என்ற மூவகைச் சிறப்பும் பெற்ற புண்ணியத் திருத்தலம். பெருமான் முதன்முதலில் இலிங்கவடிவில் தோற்றம் கொண்டதால் "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்று நாவுக்கரசர் பெருமானால் போற்றிப் பாடப்பெற்ற திருத்தலம். கண்டவர்கள் அனைவரையும் சொக்கவைக்கும் சொக்கரும் அன்னையும் ஆட்சிபுரியும் உன்னதத் திருத்தலம் இத்திருவாலவாய் திருத்தலம்.

இத்தலத்தின் வரலாற்றையும், பெருமானின் திருவிளையாடல்களையும் அழகாக விளக்கும் இந்நூலை மக்கள் அனைவரும் படித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

இந்நூல் வெளியிடுவதற்கான பொருளுதவி செய்த காங்கேயம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவம் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாங்கள் முன்பு வெளியிட்ட நூலின் பிரதியை தந்துதவிய புலவர் நீ. சி. சுந்தரராமன் (செயலர், பன்னிரு திருமுறை மன்றம், மதுரை) அவர்களுக்கும், புராணத்தை உரைநடையில் எழுதியுதவிய திருமதி. சிவ. பார்வதி (பதிப்பாளர், உழவாரம் திங்களிதழ், மதுரை) அவர்களுக்கும், இந்நூலாக்கப் பணியில் உதவிய திருச்சிராப்பள்ளி, ஸ்ரீகணநாத நாயனார் நூலகப் போற்றுநர் ஸ்ரீ மு. ஜயக்குமார் அவர்களுக்கும், அனைவரையும் ஒருங்கிணைக்கும் பணிகளை பாங்குறச் செய்த திருப்பரங்குன்றம் ஸ்ரீ பொன். முத்துவிநாயக ஓதுவார் மூர்த்திகள் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேரன்புடன்,

ஸ்ரீஸத்குருநாதர் அவர்களின் அருளாணையின் வண்ணம்

சிவஸ்ரீ S.பாஸ்கர சிவம்

காரைக்குடி (லண்டன்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர்

திருவிளையாடற் புராணம்

காப்பு

சக்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சூத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

உமாதேவியாருக்கு சிவபெருமானால் அருளப்பட்ட சங்கர சங்கிதையை, முருகப்பெருமான் அகத்திய முனிவருக்கு அருளினார். அதனை அகத்தியர் பிற முனிவர்களுக்கு அருளினார். அச்சங்கிதையில் தலம், தீர்த்தம், மூர்த்தி விசேடம் பொருந்தியதும், முத்தி அளிக்கக் கூடியதுமான மதுரை குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தலத்தில் இறைவர் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்தார்.

மதுரைக் காண்டம்

1. இந்திரன் பழிதீர்த்த படலம்

போற்றிக் கலிவெண்பா

பூமேவு கற்பக நாடாளும் புரந்தரனார்
தீமை விருத்திரனைச் செற்ற பழி – போமாறு
பொற்கமலம் தோய்ந்து விமானமிசைப் பூசிக்க
நற்கருணை செய்த நலம் போற்றி.

இந்திரன் பழிதீர்த்தது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதல் யுகத்தில், தேவலோகத்தில் இந்திரன் கொலு வீற்றிருந்தான். தேவமாதர்கள் ஆடியும் பாடியும் அவனை மகிழ்வித்தனர். அப்போது தேவ குருவான பிரகஸ்பதி அங்கு வந்தார். இந்திரன் அவரை வணங்கி உபசரிக்கவில்லை. அவர் கோபம் கொண்டு போய்விட்டார். தேவலோகம் பொலிவிழந்தது. இந்திரன் தன் குருவை எங்கு தேடியும் காணவில்லை. பிரமதேவனிடம் சென்று தன் குறையை முறையிட்டான். பிரமன் 'உன் குரு கிடைக்கும்வரை அசுர குலத்தவனான துவட்டாவின் மகன் விசுவரூபனைக் குருவாகக் கொள்' என்றார். அக்குருவை நோக்கி இந்திரன் தனக்காக ஒரு வேள்வி செய்யுமாறு வேண்டினான். அவனும் தன் குலம் மேன்மை அடைய எண்ணி தேவகுலத்தை இழித்து ஒரு வேள்வி செய்தான். உடனே இந்திரன் தன் கையிலுள்ள வஜ்ராயுதத்தால் விசுவரூபனின் 3 தலைகளையும் வெட்டினான். 3 தலைகளும் 3 பறவைகளாகப் பறந்து ஓடின. அந்தக் கொலையினால் இந்திரனைப் பிரமகத்தி தோஷம் பற்றி வருத்தியது. அப்பாவத்தைத் தேவர்கள் மரம், மண், தண்ணீர், பெண்கள்பால் மாற்றி இந்திரனைக் காப்பாற்றினர்.

விசுவரூபனை இழந்த துவட்டா இந்திரனிடம் கோபம் கொண்டு அவனோடு போர் புரிய எண்ணி ஒரு வேள்வி செய்து, அதினின்றும் தோன்றிய விருத்தாசுரன் என்பவனை ஏவினான். இந்திரன் அவனிடம் போர் புரிய முடியாது போயிற்று. பின்னர் ததீசி முனிவரிடம் சென்று அவர் முதுகெலும்பைப் பெற்றுப் புதிதாய் ஒரு வஜ்ராயுதம் செய்து அதனால் விருத்திராசுரனைக் கொன்றான். அவனை மீண்டும் பிரமகத்தி தோஷம் பற்றியது.

பிறகு தன் குருவாகிய பிரகஸ்பதியைக் கண்டு வணங்கி அவரிடம் மன்னிப்புக் கேட்டு அவர் உபதேசப்படி பூவுலகம் சேர்ந்து பல தலங்களையும் தரிசித்தான். கடைசியாக மதுரை வந்து சேர்ந்து பொற்றாமரையில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளை விதிப்படி பூசித்துப் பாவம் நீங்கிப் பரிசுத்தனாக மாறித் தேவலோகம் சென்று இந்திராணியுடன் தேவலோக ஆட்சி புரிந்து வந்தான். எட்டு யானைகள் சுமக்கும்படியான ஒரு இந்திர விமானத்தை நிர்மாணித்து அதனுள் சோமசுந்தரக் கடவுளை எழுந்தருளச் செய்து பூசித்துப்பேறு பெற்றான்.

திருவிளையாடல் அம்மானை

தேனார் கடம்பவனத் தேசுதிகழ் சொக்கலிங்கம்
வானோரிறை பழியை மாற்றியதே அம்மானை
வானோரிறை பழியை மாற்றியதே ஆமாகில்
கானாறுந் தார்வேளைக் காயாதே அம்மானை
காயாதோ பூச்சொரியக் கண்டதரு அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ. வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... நற்றவத்தோர்
ஈசனார் சாத்துமெழில் மலரைக் கால் சிதைத்த
வாசவனார் வெள்ளானை மண்ணிழந்து-பூசனை செய்து
அல்லற் படுசாபம் தீர அருள் சுரந்த
மல்லற் கருணை வளம் போற்றி.

வெள்ளை யானை சாபம் தீர்த்தது

கோபத்திற்குப் பெயர் பெற்ற துர்வாச முனிவர் காசியில் ஒருமுறை சிவபூசை செய்தார். பூசை முடிவில் சிவன் சிரசிலிருந்து ஒரு தாமரை விழுந்தது. அதனைத் தன் இரு கரங்களில் ஏந்திக் கொண்டு தேவலோகம் சென்றார். அப்போது தேவேந்திரன் ஒரு அசுரனுடன் போர் புரிந்து வெற்றி பெற்றுக் கோலாகலமாகப் பவனி வருகின்றான். தேவர்கள் உயர்ந்த பொருள்களைத் தங்கள் கையுறையாகக் கொடுத்து அவனைப் பாராட்டினர். துர்வாச முனிவரும் தன்னிடமிருந்த சிவப்பிரசாதமான தாமரைப் பூவை அவனிடம் கொடுத்தார். அவன் அதனை அலட்சியமாக ஒரு கையில் வாங்கித் தன் யானையான ஐராவதத்தின் மத்தகத்தில் வைத்தான். யானையும் அதனைத் தன் துதிக்கையால் கீழே தள்ளிக் காலால் சிதைத்தது. துர்வாச முனிவர் கோபம் கொண்டார். இந்திரனைப் பார்த்து 'உன் தலை ஒரு பாண்டியனால் சிதறுண்டு போக' எனவும் 'வெள்ளை யானை காட்டானையாகுக' என்றும் சபித்தார்.

பிறகு இந்திரன் அம்முனிவரின் திருவடிகளில் வணங்கித் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். முனிவரும் மகிழ்ந்து 'உன் தலைக்கு வந்தது கிரீடமளவில் நிற்க' என்றும் 'காட்டானையாக 100 வருடம் அலைந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பின் தன் சுய வடிவத்தைப் பெறுக' என்றும் அருளிச் செய்தார். உடனே ஐராவதம் பூவுலகிற்கு வந்து பல காடுகளில் அலைந்து திரிந்து மதுரைக்குச் சமீபத்தில் வர அதற்குத் தன் பூர்வ நினைவு வந்தது. பொற்றாமரையில் நீராடிச் சோமசுந்தரப் பெருமானைப் பூசித்துத் தன் பழைய வெள்ளை யானை வடிவத்தைப் பெற்றுத் தேவலோகம் சென்று இந்திரனைச் சுமக்கும் கடமையை மேற்கொண்டது.

திருவிளையாடல் அம்மானை

பெரும்பணிபூண் டென்பணிமேல் பெற்ற சொக்கரன்பர்குழாம்
அரும்பணிசெய் விந்தைகடம் பாடவியில் அம்மானை
அரும்பணி செய் விந்தைகடம் பாடவியில் ஆமாகில்
இரும்பணிக்கங் குண்டோநல் வெள்ளி தங்கம் அம்மானை
வெள்ளிமா தங்கமுற்று மேலானது அம்மானை.

3. திருநகரம் கண்ட படலம்

போற்றிக் கலிவெண்பா

.... நல்வணிகன்
கண்டு வந்து கூறக் கனவினருள் சித்துருவம்
கொண்டு வந்து காடெறிந்து கோநகரம் – கண்டிடென்னக்
கொத்தறா நிம்பக் குலசேகரனை எதிர்
சித்தராய் ஆட்கொண்ட சீர் போற்றி.

திருநகரம் கண்டது

மதுரைக்குக் கிழக்கே உள்ள மவ்வூரிலிருந்து கொண்டு குலசேகர பாண்டியன் என்பான் பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். அவ்வூரில் வசித்து வாணிபம் செய்து வந்த ஒரு வணிகன் தனஞ்செயன் என்பவன், வாணிபம் செய்து விட்டுத் திரும்பும்போது, கடம்ப மரங்கள் நிறைந்த ஓர் இடத்தைக் கண்டு அங்கு இரவைக் கழிக்க எண்ணித் தங்கினான். அன்று சோமவாரம். சித்திரா பௌர்ணமி தினம். தேவேந்திரன் அங்கு எழுந்தருளியிருந்த சுயம்பு மூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுளை விதிப்படி பூசை செய்து தோத்திரம் செய்து வணங்கினான். இறைவன் அருளால் தனஞ்செயனும் அவற்றை எல்லாம் கண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மகிழ்ந்திருந்தான். பொழுது விடிந்தது. தேவர்கள் யாருமில்லை. அவ்விடம் பழைய நிலையிலிருந்ததைக் கண்டு வீடு திரும்பித் தன் மன்னனுக்கு இச்செய்தியைத் தெரிவித்தான். அன்றிரவு சுந்தரேசப் பெருமான் குலசேகரன் கனவில் சித்த வடிவுடன் எழுந்தருளிக் காட்சி அளித்து 'மன்னா! இக்காட்டைத் திருத்தி ஒரு நகரமாகச்செய்' எனப் பணித்தார். அரசன் விழித்தெழுந்தான். சிவபெருமான் செய்த திருவருளைப் பாராட்டினான். ஆட்களை அனுப்பிக் காட்டைத் திருத்தித் திருநகரமாக்கினான். சிற்பிகளைக் கொண்டு ஆகம விதிப்படி கோயிலை நிர்மாணம் செய்தான். அதற்குச் சாந்தி செய்ய எண்ணிப் பெருமானை வேண்டினான். கடவுளும் தன் சடையில் இருந்த அமிர்தத்தைக் கங்கை நீருடன் கலந்து தெளித்தார். அது மதுரமாக இருந்ததால் அந்நகருக்கு மதுரை எனப் பெயரிட்டான் அரசன். பிறகு குலசேகர பாண்டியன் தன் மகன் மலயத்துவச பாண்டியனுக்கு முடிசூட்டி இறையடியில் இரண்டறக் கலந்தான்.

திருவிளையாடல் அம்மானை

தொண்டர்பணி சொக்கேசர் சொல்லரிய மாதவர் சூழ்
வண்டமர் கடம்பவன வாசிகாண் அம்மானை
வண்டமர் கடம்பவன வாசியே ஆமாகில்
கண்டறியா ரோமடவார் காமநலம் அம்மானை
காமதுரை யென்றூர்முன் கண்டவர்காண் அம்மானை.

4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்

போற்றிக் கலிவெண்பா

.... பத்தி
மலயத்துவசன் மகம் தன்னில் மூன்று
முலையுத்தமியாய் முளைத்துக் – கலைமுழுதும்
கற்றுமுடி சூடிக் கயற்கண்ணி வெங்கலியைச்
செற்றுலகை யாண்டிருந்த சீர்போற்றி.

தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாண்டியன் தன் மனைவி காஞ்சனமாலையுடன் கூடிப் பாண்டி நாட்டை நீதியோடு ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்குக் குழந்தை இல்லை உடனே அசுவமேத யாகம் செய்தான். இந்திரன் அவனை நோக்கி 'அரசே! உனக்குக் குழந்தை வேண்டுமென்று விரும்பினால் இந்த யாகத்தை நிறுத்தி இதற்குப் பதிலாகப் புத்திரகாமேஷ்டி யாகம் செய்' என்று சொன்னான். அரசனும் அவ்வாறே வேதவித்துக்களைக் கொண்டு, விதிப்படிப் புத்திர காமேஷ்டி யாகத்தைச் செய்தான். அதுகாலை உலகமாதாவான அம்பிகை 3 வயதும் 3 தனங்களையுமுடைய ஒரு பெண் குழந்தை வடிவம் தாங்கி யாக குண்டத்திருந்து வெளிவந்து காஞ்சன மாலை மடிமீது அமர்ந்தது. அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். அரசனும் யாகத்தைப் பூர்த்தி செய்து அனைவருக்கும் தான தருமங்களைச் செய்தான்.

அரசன் குழந்தைக்கு 3 தனங்கள் இயற்கைக்கு மாறாக இருந்ததைக் கண்டு வருந்தினான். உடனே பரமேசுவரன் அசரீரியாகத் தோன்றிப் பின்வருமாறு சொல்லி மறைந்தார். 'அரசனே! வருந்தற்க! இக்குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிட்டுச் சகல வித்தைகளையும் கற்றுக் கொடுத்து முடிசூட்டுவாயாக. இக்குழந்தைக்கு நாயகன் வரும்போது ஒரு தனம் மறையும்' அரசனும் மனம் தேறி அவ்வாறே செய்து வந்தான். பரமேசுவரன் ஆணைப்படிக் குழந்தைக்குத் தடாதகை என்ற பெயரைச் சூட்டிச் சகல வித்தைகளையும் கற்பித்தான். குழந்தை வளர்ந்தது. ஒரு நல்ல நாளில் சுமதி என்ற அமைச்சரின் துணை கொண்டு குழந்தைக்கு மகுடம் சூட்டிப் பாண்டி நாட்டிற்கு அரசியாக்கினான். அம்மையாரும் தினம்தோறும் விடியற்காலையில் எழுந்து நீராடி நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு ஆலயம் சென்று சொக்கலிங்கப் பெருமானை வணங்கி அரண்மனைக்குத் திரும்பிச் சபையில் கொலு வீற்றிருந்து குடிமக்கள் குறைகளைக் கேட்டு அவர்களுக்கு நீதி வழங்குவாள். பகலுணவுக்குப் பின் சிறிது நேரம் பண்டிதர்களுடன் சாத்திரங்கள் பற்றி விவாதிப்பாள். சில நாட்கள் கழிந்தன. மலயத்துவச பாண்டியன் தன் ஆயுள் முடிய பூவுலகை நீத்து விண்ணுலகை அடைந்தான்.

அவருக்குச் சுமதியாகிய அமைச்சருடன் கூடி தடாதகைப் பிராட்டியார் இறுதிக் கடன்களைச் செய்து முடித்தார். நாட்டைக் கண்ணும் கருத்துமாய் நீதியுடன் ஆண்டு வந்தார். மக்கள் யாதொரு குறையுமின்றி நல்லொழுக்கத்துடனும், நேர்மையாகவும் அரசிக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள். கன்னியாயிருந்து அம்மை நாட்டை ஆண்டதால் பாண்டிநாட்டிற்குக் கன்னி நாடு என்ற பெயர் வழங்கலாயிற்று.

திருவிளையாடல் அம்மானை

திகழுமது ரைக்கரசு தென்னன்மல யத்துவசன்
மகளெனவே அங்கயற்கண் வந்துதித்தாள் அம்மானை
மகளெனவே அங்கயற்கண் வந்துதித்தாள் ஆமாகில்
பகையுடை வேந்தர்க்குப் பயமுண்டோ அம்மானை
பயந்தரித்தப் பாலிருப்பார் பத்தாவே அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. தடாதகைப் பிராட்டியார்திருமணப் படலம்

போற்றிக் கலிவெண்பா

.... கொற்றமணித்
தேரேறி எட்டுத் திசைவென்று நந்தி கணப்
போரேறி வென்றெதிர்க்கும் போதிலொரு – வாரேறு
கொங்கை மறைந்தமதிக் கொம்பை மணம் செய்து முடி
மங்கலம் செய்த வளம் போற்றி.

தடாதகைப் பிராட்டியார் திருமணம்

தடாதகைப் பிராட்டியார் மதுரையை நீதி தவறாமல் அரசாண்டு வந்தார். நாடு சுபிட்சமாக இருந்தது. மக்கள் யாதொரு குறையுமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அம்மையாருக்கு மணப்பருவம் வந்தது. தாய் காஞ்சனமாலை திருமணமாக வில்லையே என வருந்தினாள். ‘அன்னை நீ நினைந்த எண்ணம் ஆம் பொழுதாகும். வேறு பின்னை நீ இரங்கல்’ என ஆறுதல் கூறித் திக்கு விசயத்திற்குத் தன் அவையிலிருந்த சைன்யத்துடன் புறப்பட்டாள். மந்திரி பிரதானிகள், நால்வகைச் சேனைகள் சூழத் தடாதகைப் பிராட்டியார் தேரேறிச் சென்று எல்லா மன்னர்களையும் போரின்றி வென்றார். பின்னர்த் தேவலோகம் சென்று எல்லாத் தேவர்களையும் வெற்றி கொண்டார். கடைசியாக எம்பெருமான் எழுந்தருளியுள்ள கயிலை மலையை அணுகி அதனைத் தன் சேனைகளுடன் சூழ்ந்து கொண்டார். பிரதம கணங்கள் அம்மையார் சேனைகளுடன் போர் புரிய மாட்டாது தோல்வியடைந்தனர். பிறகு நந்திதேவர் வந்து எதிர்த்தார். அவரும் தோல்வி அடைந்தார். கடைசியாகச் சிவபெருமானே போர் புரிவதுபோல அம்மையார்முன் தோன்றினார். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். உடனே ஒரு தனம் மறைந்தது. அம்மையார் நாணமுற்று அவர் தன் நாயகர் என்று உணர்ந்து வில்லையும் அம்பையும் கீழே போட்டு விட்டு வெட்கி நின்றார்.

சிவபெருமான் அம்மையை நோக்கி ‘என்று தொட்டு நீ திக் விசயத்திற்குப் புறப்பட்டாயோ, அன்று முதல் நாமும் உன்னை விடாது பின்பற்றி வந்துள்ளோம். நீ நின் ஊருக்குத் திரும்புக. நாம் அடுத்த சோமவாரத்தன்று மதுரைக்கு வந்து உன்னைத் திருமணம் புரிந்து கொள்வோம்’ என்று சொல்லியருளினார். அம்மையாரும் தன் உயிரைக் கயிலாயத்தில் விட்டுவிட்டு மதுரைக்கு வருத்தத்துடன் திரும்பினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மந்திரிப் பிரதானிகள் அம்மையார் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை விரிவாகச் செய்தனர். திருமண அழைப்பும் அனுப்பப்பட்டது நகரத்தை மிக அழகாக அலங்கரித்தார்கள். ஒவ்வொரு வீட்டிலுமுள்ள பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டார்கள். திருமண மண்டபத்தையும் மிகச் சிறப்பாக மந்திரி சுமதி அமைத்தார்.

கயிலையிலிருந்து சிவபெருமான் சகலதேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், சிவகணங்கள் யாவரும் தன்னைச் சூழ்ந்து வரப் பவனியாக ரிஷபத்தின் மீதேறி மதுரை எல்லைக்கு வந்து சேர்ந்தார். இவர் வரவினைக் கணங்கள் சின்னங்களை ஒலித்து அறிவித்தனர். சுமதி இவரை சகல மரியாதைகளுடன் வரவேற்று நகர் வலம் வரச் செய்தான். அவர் அழகைக் கண்டு அனைவரும் மயங்கினர். வீதிகள் நெடுக இருபுறங்களிலும் பெண்கள் வரிசை வரிசையாக நின்று பாராட்டினர். பெருமானும் நகரத்தின் வாயிலில் வந்தார்.

காஞ்சன மாலை கணவனை இழந்தவள் ஆதலால் சில மங்கல மகளிருடன் அங்கு வந்து சிவபிரான் திருவடிகளைப் பூசித்தாள். பிறகு பின்வரும் விண்ணப்பத்தையும் சமர்ப்பித்தாள். 'அருமையாய் அடியேன் பெற்ற அணங்கினை வதுவை செய்து திருநகர்த் திருவும் கன்னித் தேயமும் கைக்கொண்டாள்க' என்றாள். சுவாமியும் புன்னகை புரிந்து மண்டபத்திற்கு வேதகோஷம் முழங்க எழுந்தருளித் தம் ஆசனத்தமர்ந்தார். அம்மையாரையும் சர்வ அலங்காரங்களுடன் லட்சுமி, சரஸ்வதி கைலாகு கொடுத்து அழைத்து வந்து சுவாமி பக்கத்தில் அமரச் செய்தனர். பிரமதேவர் வேதவிதிப்படித் திருமணச் சடங்குகளை எல்லாம் முறையாகச் செய்தார். பிறகு சோமசுந்தரக் கடவுள் அம்மையார் திருக்கழுத்தில் மங்கல நாண் சாத்திக் கைப்பற்றினார்.

மங்கலங்கள் நிகழ்ந்தன. வந்திருந்த அனைவருக்கும் சந்தன தாம்பூலம், தானங்கள் வழங்கப்பெற்றன. பெருமான் அரசர் இப்படிச் செய்ய வேண்டும் எனக் காட்ட வேண்டி மீனாட்சி தேவியாருடன் அண்மையிலுள்ள இம்மையிலும் நன்மை தருவார் கோயிலுக்குச் சென்று சிவபிரானை வழிபட்டுத் திரும்பித் தன் அரண்மனைக்கு வந்து மீனாட்சியிடம் இராஜ்யபாரத்தைப் பெற்றுக் கிரீடம் தரித்துச் சோமசுந்தர பாண்டியனாக வீற்றிருந்து அறுபத்தாயிரம் வருடம் பாண்டி நாட்டை நீதியுடன் அரசாண்டு வந்தார். மக்கள் மன நிறைவுடன் வாழ்ந்து வந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

திக்கெலாம் வென்றுதனச் சீர்பெற வெள் ளிங்கிரி சென்று
இக்கயற்கண் மாதிறைகொண் டிங்குவந்தாள் அம்மானை
இக்கயற்கண் மாதிறைகொண்டிங்கு வந்தாள் ஆமாகில்
மைக்குழற்கு வந்தான் மதிகுலனோ அம்மானை
மதிமேல் குலவான்கோ மான்மதுரைக்கு அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

போற்றிக் கலிவெண்பா

.... அங்கனக
மன்றாடல் வேட்டவிரு மாதவர்க்கு வெள்ளமன்றுள்
நின்றாடிக் காட்டும் நிலை போற்றி.

வெள்ளியம்பலம் திருக்கூத்தாடியது

மீனாட்சி சுந்தரேசர் திருமணத்தைச் சேவிக்க வந்த தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள் முதலானோர் விருந்துண்ணச் சென்றனர். அப்போது பதஞ்சலி, வியாக்ரபாதர் என்னும் இரு முனிவர்கள் சுவாமியைப் பார்த்து 'அடியேங்கள் சிதம்பரம் கனகசபையில் தாங்கள் செய்து கொண்டிருக்கும் பஞ்ச கிருத்திய ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டபிறகுதான் உண்பது வழக்கம்' என்றனர். உடனே பெருமானும் அவர்களுக்காகச் சந்நிதியில் ஒரு வெள்ளியம்பலத்தை நிறுவி அதில் தாம் தேவி காணத் திருநடம் புரிந்து காட்டினார். இரு முனிவர்களும் அதனைக் கண்டு தரிசித்துப் பெருமானை வணங்கி ஒரு வரம் தரும்படி வேண்டினர்.

1. எந்தையித் திருக்கூத்து என்றும் இந்நிலை நின்று யார்க்கும்
பந்த வெம்பாசம் நீங்கப் பரிந்தருள் செய்தி........................
2. அராமுனி யீதுவேண்டும் ஆதியெம் பெரும விந்த
நிராமய பரமானந்த நிருத்தம் நேர்கண்டோ ரெல்லாம்
தராதல மிசைவந்தெய்தாத் தனிக்கதி பெறுதல் வேண்டும்.

பின் இரு முனிவரும் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

சிதம்பரம் போல் வேள்விமன்றில் தென்மதுரைச் சுந்தரனைப்
பதஞ்சலிவேங் கைப்பாதர் பார்த்து நின்றார் அம்மானை
பதஞ்சலிவேங் கைப்பாதர் பார்த்து நின்றார் ஆமாகில்
கதம்பவனத் தண்ணல் செயும் காரணமேது அம்மானை
காரணத்தைக் கேட்கில் கனக்கூத்தே அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

போற்றிக் கலிவெண்பா

.... குன்றமென
முன்னமலை பசித்தீ மூளும் குறள் வீரற்கு
அன்னமலை யீந்த அருள் போற்றி.

குண்டோதரனுக்கு அன்னமிட்டது

திருமணத்திற்கு வருபவர்களுக்கு விருந்தளிக்க ஏராளமாகச் சமைக்கப் பெற்றிருந்த உணவு வகைகள் எல்லாம் இத்தனை பேர்கள் உண்டும் மாளாமலிருப்பதை ஏவலாளர் தேவியாரிடம் விண்ணப்பித்தனர். அம்மையாரும் தன் நாயகனிடம் சென்று வணங்கி ஒதுங்கிப் பின்வருமாறு விண்ணப்பித்தனர். 'சுவாமீ திருமணத்திற்குத் தங்களுடன் வந்த அனைவரும் உண்டபிறகும் கூட அடியேன் சமைக்கச் செய்ததில் ஒரு சிறிதளவு கூட செலவாகவில்லை. எல்லாம் மலை போல் குவிந்து கிடக்கின்றன. என்ன செய்வது?' என்றார். சுவாமியும் சிறிது நகைத்து 'அம்மையே! அளவிலாத நின் செல்வத்தின் பெருக்கினை நாமறிய விளைவு செய்தனை!' என்று சொல்லி அருகிலிருந்த குடை பிடிக்கும் குண்டோதரன் வயிற்றிடை வடவாமுகாக்னியை ஏவினார். அவனும் உடனே 'பசிக்கிறதே' என்று எழுந்தான். சுவாமி தன் தேவியாரைப் பார்த்துக் 'குடை பிடிக்கும் இக்குறியதான குறட்கு ஒரு பிடி சோறிடுமின்' என்றனர்.

சேடியர் அப்பூதத்தினை மடைப்பள்ளிக்கு அழைத்துப் போய் இலை போட்டு உணவு வகைகளைப் பரிமாறத் தொடங்கினர். அவ்வளவுதான். எவ்வளவு உணவு இலையில் வைத்தாலும் உடனே அது தீர்ந்து விடுகிறது. மடைத்தொழில் வல்லவர் அதிசயித்தனர். சேடியர் நடுங்கினர். பின்னர் குண்டோதரன் அங்கிருந்த சமைத்த உணவு வகைகளை எல்லாம் உண்டும் பசி தணியவில்லை. பிறகு சமைக்காதிருந்த உணவுகளை எல்லாம் உண்டும் பசி தணியவில்லை. உடனே தேவியார் சுவாமியிடம் இச்செய்தியைப் பயத்துடன் தெரிவித்தார். குண்டோதரனும் வந்து 'மலையெனக் குவிந்திருந்த அன்னம் உண்டும் என் பசி தீரவில்லை.

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
என்ன செய்யட்டும்?" என்று கதறினான்; புலம்பினான். பெருமூச்சு விட்டான். ஆவி சோர்ந்து அயர்ந்தான்.

திருவிளையாடல் அம்மானை

தென்மதுரை யார்மணத்தில் தேவி யமுதுதரத்
தன்னிகரில் குண்டோ தரனுண்டான் அம்மானை
தன்னிகரில் குண்டோ தரனுண்டான் ஆமாகில்
அன்னமலை யென்னமிகுந் தாக்குமோ அம்மானை
ஆக்க வல்லார் ஆக்குமலை யன்னமவள் அம்மானை.

8. அன்னக்குழியும் வையையும் அழைத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... பின்னுமவன்
வெய்யபசிக் கன்னக் குழியுநீர் வேட்கைக்கு
வையையும் தந்த வரம் போற்றி.

அன்னக்குழியும் வையையும் அழைத்தது

எவ்வளவு உண்டும் தன் பசி தணியாத குண்டோதரன் சிவபெருமான் முன் சென்று வணங்கி வருந்தினான். பெருமானும் அவன்மீது கருணை கூர்ந்து அன்னபூரணியை நினைத்தார். உடனே அங்கு நான்கு கிணறுகள் நிறையத் தயிரன்னம் நிறைந்து வழிந்தது. குண்டோதரன் அதனை எல்லாம் வாரி வாரி உண்டான். உடம்பெல்லாம் வயிறாகமாறிப் பசி தணிந்தது. தாகம் தீர அங்குள்ள நீர் நிலைகளிலுள்ள தண்ணீரை எல்லாம் குடித்தான். தாகம் தணியாமல் பெருமானை வேண்டினான். சோமசுந்தரக் கடவுளும் தன் திருமுடியிலிருந்து கங்கையை ஒரு ஆறாக வருமாறு பணித்தார். அது வையையாக மாறி வெள்ளத்துடன் ஓடி வந்தது. குண்டோதரனும் அந் நதியின் இரு பக்கங்களிலும் தன் இரு கரங்களை வைத்து அடக்கி அந்நீரைப் பருகினான் தாகமும் தணிந்தது. மகிழ்ந்து சிவபெருமானைப் பலவாறு துதித்து மகிழ்ந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவிளையாடல் அம்மானை

அன்னக் குழி மதுரை யாதிபர்குண் டோதரற்கா
அன்னக் குழி வையை யாறழைத்தார் அம்மானை
அன்னக் குழி வையை யாறழைத்தார் ஆமாகில்
அன்னவர்நஞ் சுண்டதறக்கொடிதே அம்மானை
அறக்கொடியார் வாழ்வார்க் கமுதுவிடம் அம்மானை.

9. எழுகடல் அழைத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... ஐயைதனை
ஈன்றாள் கடலாட வேண்ட எழு கடலும்
சான்றா வரநிறுத்தும் தாள் போற்றி.



ஏழுகடல் அழைத்தது

சோமசுந்தரக் கடவுள் பாண்டி நாட்டை ஆண்டு வந்தார். காஞ்சனமாலை விதவையாய் இருந்தபடியால் தான் நற்கதி அடைய விரும்பிப் பல விரதங்களை நோற்றாள். முனிவர்களை வணங்கிச் சிவபுராணங்களையும் கேட்டு வந்தாள்.

ஒருநாள் கௌதம முனிவர் தன் வீட்டிற்கு வந்தார். அவரை வணங்கி வரவேற்று உபசரித்துத் தான் நற்கதி அடைய ஒரு வழியைச் சொல்லியருளுமாறு வேண்டினாள். கௌதமரும் தவம் மூன்று வகைப்படும் என்றும் அவை மானசம், வாசிகம், காயிகம் என்றும் இவற்றுள் காயிகங்கள் சிறந்தவை என்றும், இவற்றுள்ளும் தீர்த்த நீராடுதல் மிகச் சிறப்புடையது என்றும், அதனுள்ளும் எல்லா நதிகளும் சென்று கலக்கும் கடல் நீராடுதல் மிக உத்தமம் என்றும் சொல்லிப் போனார். காஞ்சன மாலையும் கடல் நீராட விரும்பினாள். ஆனால் மதுரைக்கு அருகில் கடல் இல்லை. எனவே வருந்தினாள். தன் அன்னையார் விருப்பத்தைத் தன் நாயகனிடம் தேவி சென்று விண்ணப்பித்தாள்.

உடனே சிவபெருமானும் அவள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய எண்ணி எழுகடலையும் வருமாறு பணித்தார். அவ்வாறே ஏழு கடல்களும் ஏழு வகைப்பட்ட நிறங்களுடன் மதுரைக்குக் கிழக்கிலுள்ள ஒரு இடத்தில் வந்து தங்கின.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வண்டுறைதார்ச் சுந்தரனார் மாமிபுன லாடமங்கை
விண்டுகடலேழழைத்தார் மெய்மதுரைக்கு அம்மானை
விண்டுகடலேழழைத்தார் மெய்மதுரைக்கு ஆமாகில்
தெண்டிரையேழ் சுற்றுமன்றோ தீவினைச்சென்று அம்மானை
தீவினையேன் சுற்றும் எங்கோன் சிந்திக்கில் அம்மானை.

10. மலயத்துவசனை அழைத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வான்தாழ
வாழுமலயத்துவச மன்னனைக் கூய்த் தேவியொடும்
ஆழி படிவித்த அருள் போற்றி.

மலயத்துவசனை அழைத்தது

சோமசுந்தரக்கடவுளும் மீனாட்சி அம்மையாரும் அத்தீர்த்தத்தின் கரையில் அமர்ந்தார்கள். காஞ்சன மாலையும் வந்து கடல் நீராடும் விதியைக் கௌதமரை அழைத்துக் கேட்டார். அவரும் கணவன் கை, இல்லையேல் பிள்ளையின் கை அதுவுமின்றேல் பசுங்கன்றில் வாலைப்பற்றி நீராடல் முறை என்றார். காஞ்சனமாலைக்குக் கணவனும் மகனும் இல்லையே என்று வருந்தினாள். இதனை அறிந்த எம்பெருமான் இந்திரலோகத்தில் இருந்த மலயத்துவசன் பூவுலகிற்கு வருமாறு சங்கற்பம் செய்தார். அவனும் விமானமேறி எழுகடற்கு வந்து தன் தேவிபக்கம் நின்றான். காஞ்சனமாலையும் மகிழ்ச்சியுடன் மலயத்துவசன் கையைப் பற்றி மூழ்கினாள். எழுந்ததும் மலயத்துவசன் சிவசாரூபத்தைப்பெற்றான். இறைவன் அவர்கள் இருவரையும் சிவலோகம் சென்று சுகத்துடன் வாழப் பணித்தார். விமானம் மேலே சென்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மழைக்கடல் சென்றாடும் மாமிக்காச் சுந்தரன்சீர்
தழைக்கு மலயத்துவசனைத் தானழைத்தான் அம்மானை
தழைக்கு மலயத்துவசனைத் தானழைத்தான் ஆமாகில்
அழைப்பவதெவன் வானடைந்த அம்மானை அம்மானை
அம் மானைக் கையில்வைத்த அண்ணலன்றோ அம்மானை.

11. உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வேள்விவரு
வில்வளைக்கை நங்கை விறல்உக் கிரகுமரச்
செல்வனைப் பெற்ற திறம் போற்றி.

உக்கிரபாண்டியன் திருவவதாரம்

சோமசுந்தரக் கடவுளும் மீனாட்சி அம்மையாரும் பல்லாண்டுகள் பாண்டி நாட்டை ஆண்டு வந்தார்கள். ஒருநாள் அம்மையார் தன் நாயகனைப் பார்த்துத் தங்களுக்குப் பின் சந்திரவம்சம் விளங்குமாறு ஒரு சற்புத்திரனை அருள வேண்டும் என்று விண்ணப்பித்தார். சிவபெருமானும் அவ்வாறே ஆகட்டும் என்று சொல்லித் தம் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய முருகப்பெருமானையே 'கருப்பம் எய்தாது, அந்தமில் உயிரும் ஞாலமனைத்தையும் ஈன்ற தாயாம், சுந்தரவல்லி தன்பால் தோன்றுமாறு உள்ளம் செய்தான்'. மீனாட்சியம்மையாரும் சேடியர் விருப்பத்திற்கிணங்க கர்ப்பமுற்றவள் போல நடித்துக் காட்டினாள். மாதம்தோறும் வேதவிதிப்படி சடங்குகள் செய்யப் பெற்றன. கடைசியாக ஒரு சோமவாரம் திருவாதிரை கூடிய நன்னாளில் ஒரு திருக்குமரன் உதயம் செய்தான். பெருமானும் அக்குமரனுக்கு உக்கிரகுமாரன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குழந்தையும் வளர்பிறைச் சந்திரன் போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. உரிய காலங்களில் எல்லாச் சடங்குகளும் செய்யப்பெற்றன. கல்வி கேள்விகளிலும் வில்வித்தை, வாள்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றிலும் சிறந்துவிளங்கினார் உக்கிரகுமாரர். பெற்றோர் இம்மகனுக்குத் திருமணம் செய்து வைத்துப் பிறகு பட்டாபிஷேகம் செய்யலாம் என்று எண்ணி அமைச்சர்களுக்கும் இதனைத் தெரிவித்தார் சுந்தர பாண்டியார்.

திருவிளையாடல் அம்மானை

மக்கள்புகழ் சுந்தரப்பேர் மாமுடிதங் கத்தணிந்த
சொக்கனருள் உக்ரசுதன் வளர்ந்தான் அம்மானை
சொக்கனருள் உக்ரசுதன் வளர்ந்தான் ஆமாகில்
உக்கிரற்குத் தாயார் உயர்ந்தவரோ அம்மானை
உயர்ந்தமலை பெண்ணென் றோதுவார் அம்மானை.

12. உக்கிரபாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... செல்வனுக்கு
மன்றல் முடிந்து வளை, செண்டு வேல் கொடுத்து
வென்றி முடி சூட்டும் விறல் போற்றி.

உக்கிரபாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்தது

சோமசுந்தரக் கடவுள் தம் அமைச்சருடன் ஆலோசித்துத் தம்மகனுக்கு மணவூரிலுள்ள அரசன் சோமசேகரனின் அருமை மகள் காந்திமதி என்னும் நங்கையைத் திருமணம் செய்விக்கத் திருவுள்ளம் செய்தார்.

அன்றிரவில் சுந்தரேச பாண்டியர் சோமசேகரன் கனவில் எழுந்தருளி அவனைப் பார்த்து, 'உன் அருமை மகள் காந்திமதியை மதுரைக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அழைத்துக் கொண்டு போய்ச் சுந்தர பாண்டியனுக்குத் திருமகனான உக்கிர பாண்டியனுக்குத் திருமணஞ் செய்து கொடுப்பாயாக' என்று அருளி மறைந்தார். விழித்தெழுந்த சோமசேகரன் தான் கனவில் கண்ட காட்சியைச் சுற்றத்தாருக்கும், அமைச்சர் முதலாயினோருக்கும் தெரிவித்துத் தன் மகள் காந்திமதியைச் சர்வாலங்காரம் செய்து மதுரைக்கு அழைத்து வந்தான். சுந்தரேச பாண்டியர் சுற்றத்தாரும் இவர்களை எதிர்கொண்டு உபசரித்து மதுரைக்கு அழைத்துச் சென்றார்கள். ஒரு நல்ல நாளில் வேதவிதிப்படி சுந்தரேச பாண்டியர் முன்னிலையில் உக்கிர பாண்டியனுக்கும் காந்திமதிக்கும் திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தது. எல்லாச் சடங்குகளும் நிறைவுற்றன. நாட்கள் சில சென்றன.

ஒருநாள் சுந்தரேச பாண்டியர் தன் அருமை மைந்தனான உக்கிர பாண்டியனைத் தம் அருகில் அழைத்து, 'மைந்தா, கிழக்குத் திசைக் காவலான இந்திரனும், மழைக்கடவுளான வருணனும் உனக்குப் பகைவர்களாவார்கள். அசையாத மேருகிரியும் ஒரு சமயம் கர்வங்கொள்ளும். அப்போது இந்திரனது மகுடம் சிதறும்படி நீ இந்த வளைகொண்டு அவன் மகுடத்தைத் தள்ளுவாய், வருணன் மதுரையை அழிக்கக் கடலை ஏவுவான். அப்போது இந்த வேலால் அந்தக்கடலை வற்றச்செய்வாய். மேருமலையின் கர்வம் அடங்க அதனை இச்செண்டால் புடைப்பாய்' என்று கூறி அம்மூன்று பொருள்களையும் உக்கிரனிடம் கொடுத்தார். பின்னர் சுந்தரேசபாண்டியர், மீனாட்சியம்மையார் தம் பரிவாரங்கள் எல்லாம் பழைய வடிவங்கள் கொண்டு திருக்கோயிலுக்குள் சென்று மறைந்தனர். அரசபாரத்தை உக்கிரபாண்டியன் நன்கு நடத்தி வந்தார்.

திருவிளையாடல் அம்மானை

ஓர் மதுரைச் சுந்தரனார் உக்கிரனுக் கீந்தரசு
வீரமுறத் தாமளித்தார் வேல்வளை செண்டு அம்மானை
வீரமுறத் தாமளித்தார் வேல்வளை செண்டு ஆமாகில்
சார் விசயன் மோதத் தலைவிதியோ அம்மானை
தலைவிதிக்கு மாறுமருந் தார் முடிந்தார் அம்மானை.

13. கடல் சுவற வேல்விட்ட படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வன்றிறல்வேல்
வேலை சுவற விடுத்துஉக் கிரகுமரன்
ஞாலம் புரந்த நலம் போற்றி.

உக்கிரகுமாரபாண்டியர் நீதி தவறாமல் பாண்டிநாட்டை ஆண்டு வந்தார். சுபிட்சமாய் வாழ்ந்து வந்தார். இவர் 96 அசுவமேத யாகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்தார். இதனைக் கண்டு இந்திரன் பொறாமை கொண்டான். ஏனெனில் இன்னும் நான்கு யாகம்செய்தால் தன் பதவி பறிபோய்விடும் என்று பயந்தான். உடனே இந்திரன் இவர் யாகத்தைப் பூர்த்தி செய்யவிடாமல் வருணனை அழைத்துக் கடலை ஏவி மதுரையை அழிக்கும்படி ஆணை இட்டான். உக்கிரகுமாரரது பராக்கிரமத்தை அறியாத வருணனும் அவ்வாறே கடலைச் சென்று மதுரையை அழித்துவரப் பணித்தான். கடலும் கரைபுரண்டு மதுரையை நோக்கி வருகிறது. மக்கள் நடுங்கினர். பாண்டியனும் தன் குலதெய்வமாகிய சுந்தரேசப் பெருமானை வேண்டிக் கொண்டார். அரசன் கனவில் சுந்தரேசர் ஒரு சித்த வடிவத்துடன் எழுந்தருளி 'வழுதி உன் நகரழிக்க வருவது ஆழி, வல்லை நீ, எழுதி போதி வென்றிவேல் எறிந்து வாகை பெறுக' என்றார்.

உக்கிரர் விழித்தெழுந்து வெளியே சென்று கனவில் கடவுள் அருளிச் செய்தப்படித் தன் கைவேலைச் சுற்றி எறிந்தார். வேலின் வெப்பத்தால் கடல்நீர் வறண்டு விட்டது. இறைவனும் ஆகாய வீதியில் ரிஷபாரூடராய் உக்கிரகுமாரருக்குக் காட்சி கொடுத்தருளினார். அரசன் அவரைத் துதித்து வணங்கி மகிழ்ந்திருந்தார். மக்களும் ஊரழியும் அபாயத்தினின்றும் காக்கப்பட்டனர்.



கடல் சுவற வேல் விட்டது

திருவிளையாடல் அம்மானை

பையரவம் பூண்ட பதிமதுரைச் சொக்கேசர்
செய்யடிமை கொண்டார்மெய்ச் செல்வர்தமை அம்மானை
செய்யடிமை கொண்டார்மெய்ச் செல்வர்தமை ஆமாகில்
மெய்யர் செய்யத் தக்கமிக்க வேலையுண்டோ அம்மானை
வேலையின்மேல் வேலைவிடும் வேலைசொல்வார் அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வேல் வலக்கைச்
சேயனைய உக்ரன் திகிரியெறிந் திந்திரன் போர்
சாய முடிசிந்து சயம் போற்றி.



இந்திரன் முடிமேல் வளையெறிந்தது

உக்கிரகுமார பாண்டியன் அரசு செய்து வரும்பொழுது கிரகங்களின் நிலை தவறியிருந்ததால் நாட்டில் மழையில்லாமல் குடிமக்கள் பஞ்சத்தால் வாடி வருந்தினர். இதனை உணர்ந்த மூன்று தமிழ் வேந்தர்களும் சிவபெருமானுக்குச் சமமாகச் சொல்லப்படும் அகத்தியரிடம் சென்றுஅவரை வணங்கித் தங்கள் குறையைத் தெரிவித்தனர். அகத்திய முனிவரும் ஞான திருஷ்டியால் கிரகங்களின் நிலையை அறிந்து அவர்களைப் பார்த்து 'சூரியன் அங்காரகனுக்கு முன் செல்ல மழைக்கிரகமாகிய சுக்கிரன் பின் செல்வதால் நாட்டில் பன்னிரண்டு வருடங்களுக்கு மழை இல்லை. ஆதலால் தேவலோகம் சென்று இந்திரனை வேண்டினால் மழை கிடைக்கும்' என்றார். சேர, சோழ, பாண்டியரும் அகத்தியரை நோக்கி, 'நாங்கள் எவ்வாறு தேவலோகம் செல்ல முடியும்?' என்றனர். அதற்கு அவர் 'நீங்கள் சுந்தரேசப் பெருமானைக் குறித்துச் சோமவார விரதத்தினை அனுட்டியுங்கள். உங்களுக்குத் தேவலோகத்திற்கு ஆகாய வழியாகச் செல்லும் ஆற்றல் கிடைக்கும்' என்று அருளினார். இவ்விரதத்தை அநுட்டிக்கும் விவரத்தையும் கூறினார்.

மூவரும் மதுரையை அடைந்து பொற்றாமரையில் நீராடிச் சுந்தரேசப் பெருமானையும் மீனாட்சியையும் விதிப்படிச் சோமவார விரதமிருந்து ஆகாய வழியாகத் தேவலோகம் செல்லும் ஆற்றல் பெற்றனர். அதன்படி தேவலோகம் சென்றனர். இந்திரன் இவர்களை வரவேற்று உபசரித்தான். தன் எதிரில் 3 ஆசனங்களை வைத்து அமரச் சொன்னான். சேரனும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சோழனும் அமர பாண்டியன் அவ்வாறு அமராது இந்திரனுக்கருகில் அவனுக்குச் சமமான ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். இந்திரனுக்குக் கோபமும் பொறாமையும் வந்தது. அவனைக் கவனியாமல் மற்றஇரு மன்னரையும் வந்த காரியம் குறித்து வினவ, அவர்களும் தங்கள் நாட்டில் மழையில்லை என்றும் மழை பெய்ய உதவவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். இந்திரனும் அவ்வாறே செய்வதாக அவர்களுக்கு உறுதி கூறிப் பல மரியாதைகளையும் செய்து பூவுலகிற்கு அனுப்பினான்.

உக்கிரகுமார பாண்டியன் தன்னை ஒன்றும் கேளாமல் இருப்பதைக் கண்டு அவரை அவமதிக்க எண்ணிப் பலர் தூக்கிக் கொண்டு வந்த ஒரு இரும்பு மாலையைப் பூமாலை போல் கழுத்தில் இருத்திக் கொண்டான் உக்கிரகுமாரன். இந்திரன் வெட்கப்பட்டு அவரை நோக்கி இன்று முதல் உன் பெயர் ஆரந்தாங்கு பாண்டியன் என்று வழங்கட்டும் என்று சொன்னான். பாண்டியனும் இந்திரனை ஒன்றும் கேளாமல் தன் நாட்டிற்குத் திரும்பி விட்டார்.

இந்திரன் ஆணையால் சேரநாட்டிலும் சோழ நாட்டிலும் மழை பெய்தது. பஞ்சம் தீர்ந்தது. மக்கள் மகிழ்ச்சியுற்றனர். பாண்டிய நாட்டில் மழையில்லை. மன்னர் ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றபோது பொதிய மலையின் மேல் நான்கு மேகங்கள் தவழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டு அவற்றைப் பிடித்து சிறையிலடைத்தார்.

இதனால் கோபம் கொண்ட இந்திரன் தன் சேனையுடன் மதுரை வந்துபாண்டிய மன்னனுடன் போர் புரிந்தான். உக்கிரகுமாரன் எறிந்தவளை இந்திரன் முடி மீதிருந்த மகுடத்தைத் தள்ளியது. வெட்கத்தால் இந்திரன் தோற்றுத் தன் நாட்டிற்குப் போய்விட்டான். ஒற்றர் மூலம் பாண்டி மன்னனுக்கு ஓலை அனுப்பி மேகங்களைச் சிறையிலிருந்து விடுவித்து அனுப்பினால் மழை பெய்யச் செய்வதாகச் சொன்னான். பாண்டிய மன்னனும் இந்திரனை நம்பி மேகங்களைச் சிறையிலிருந்து விடுவிக்க மறுத்தார். ஒரு வேளாளன் இந்திரனுக்காகப் பிணை கொடுக்க அரசன் மேகங்களை விடுதலை செய்தான். நாட்டில் மழை பெய்தது. பஞ்சம்தீர்ந்தது. மக்கள் வளமாக வாழ்ந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

படிபுரந்த சொக்கர்வளை பாண்டியன்கை யால்விடுத்து
முடிதகர்த்தார் இந்திரனை முன்னாளில் அம்மானை
முடிதகர்த்தார் இந்திரனை முன்னாளில் ஆமாகில்
கொடிதவரைச் சேர்ந்துவிண்ணோர் கோவென்றது அம்மானை
கோவென்று சேர்ந்தாரைக் கொல்லியன்றோ அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

15. மேருவைச் செண்டால் அடித்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... ஆயவரி
வண்டலம்பு தார்க்குமரன் மேருமணி முடிமேல்
செண்டெறிந்து வைப்பெடுத்த சீர்போற்றி.



மேருவை செண்டால் அடித்தது

இந்திரனை வென்ற பிறகும் உக்கிர குமார பாண்டியர் அகத்தியர் உபதேசித்த சோமவார விரதத்தை விடாமல் அநுட்டித்து வந்தார். அதன் பலனாக அவர் மனைவி காந்திமதி கர்ப்பமுற்று நல்ல நேரத்தில் ஒரு ஆண் மகவைப் பெற்றார். அக்குழந்தைக்கு வேத விதிப்படி செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து அதற்கு வீரபாண்டியன் என்ற பெயரைச் சூட்டினார். சில நாட்கள் சென்றன. மீண்டும் கிரக நிலை மாறியது. நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. குடிமக்கள் வருந்தினர். அரசன் தங்கள் குலதெய்வமாகிய சுந்தரேச பாண்டியரிடம் தன் குறையைத் தெரிவித்தான்.

சோமசுந்தரக் கடவுள் அரசன் கனவில் தோன்றி, 'அரசனே நாட்டில் இப்போது மழை பெய்யாது. ஆதலால் மேருமலையின் பக்கத்தில் ஒரு குகையில் ஏராளமான செல்வம் இருக்கிறது. அம்மலையை உன்னிடமுள்ள செண்டு என்னும் ஆயுதத்தால் அடித்து அதன் கர்வத்தை அடக்கி வேண்டிய அளவு செல்வத்தைக் கொண்டு வந்து நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்கிக் கொள்வாய்' என்றார்.

அரசன் விழித்தெழுந்து தன் சேனைகளை அழைத்துக் கொண்டு பல்லாயிரம் காதங்களைக் கடந்து மேருமலையை அடைந்து அதன் அரசனை அழைத்தார். வரத் தாழ்த்தது. தன் செண்டால் அம்மலையின் சிகரத்தை அடித்தார். மேரு நிலை கலங்கியது. மேருத் தெய்வம் அவர் முன்தோன்றி 'அரசனே நான் தினமும் மீனாட்சி அம்மையாரையும் சோமசுந்தரப் பெருமானையும் வணங்கி வருவது வழக்கம். ஒரு பெண்ணிடம் கூடியிருந்ததால் வழிபடக் கால தாமதமாயிற்று. ஆதலால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உன் கரத்தால் அடிப்பட்டேன். பாவத்தைத் தீர்க்கத் தங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும்?' என்றது. பாண்டியன் தனக்குக் கடவுள் கனவில் அருளியதைக் கூற மேரு அங்கிருந்த குகையைக் காட்டியது. அரசன் அதனைத் திறந்து வேண்டிய அளவு பொன்னை எடுத்துக் கொண்டு குகையை மூடி முத்திரையிட்டுத் தன் ஊருக்குத் திரும்பினான். அச்செல்வத்தால் குடிமக்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து மகிழ்ச்சியுடன் அரசு செய்து வந்தான். ஒரு நல்ல நாளில் உக்கிர குமார பாண்டியன் தன் மகன் வீரபாண்டியனுக்குப் பட்டாபிஷேகம் செய்து சிவபெருமான் திருவடியை அடைந்தான்.

திருவிளையாடல் அம்மானை

நம்பன் மதுரேசன் நாடாளு மன்னவனால்
செம்பொன்மக மேருவைச் செண்டாலடித்தான் அம்மானை
செம்பொன்மக மேருவைச் செண்டாலடித்தான் ஆமாகில்
அம்புவியில் யார் யார் அடிபடார் அம்மானை
அடிக்கு வருந்தினர்மேல் அன்பரெலாம் அம்மானை.

16. வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... பண்டொரு நாள்
ஆற்றிய அந்தணருக் காதிமறைப் பொருளைத்
தேற விரித்த திறம் போற்றி.



வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்தது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதல்யுகத்தில் சிவபெருமான் திருவாக்கிலிருந்து பிரணவம் வந்தது. அதனின்று வேதங்கள் தோன்றின. நைமிசாரண்யத்தில் வசித்து வந்த கண்ணுவர், கர்க்கர் முதலியவர்கள் வேதங்களின் உண்மைப் பொருளை உணரமாட்டாமல் வருந்தினர். அப்போது அரபத்தர் என்ற பெரியவர் அவர்கள் முன் தோன்றி 'மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளின் விமானத்திற்குத் தெற்கில் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்திதான் உங்களுக்கு வேதப் பொருளை உணர்த்த வல்லவர். அங்கு சென்று அவரை வழிபட்டுய்யுங்கள்' என்றார். அவ்வாறே அந்த ரிஷிகள் மதுரை சென்று பெருமானை வணங்கிப்பின் தட்சிணாமூர்த்தியை வணங்கி வழிபட்டனர். அவரும் இவர்களுக்கு அருள்புரிய வேண்டி பதினாறு வயதுள்ள ஒரு அந்தண உருவத்துடன் வெளிவந்து அவர்கள் குறையைத் தீர்த்து வேதப் பொருளை உணர்த்தினார். பின்னர் அவர்களைச் சோமசுந்தரப்பெருமான் திருமுன் அழைத்துச் சென்று 'இம்மூர்த்தியின் திருவுருவமே வேதமாகும் வேதத்தின் பொருளும் இவ்விலிங்கமே. வேதமே இலிங்கம், இலிங்கமே வேதம். பேதம் ஒன்றுமில்லை. வேதத்தின் பொருள் ஒன்றே' என்று ஆசிர்வதித்துவிட்டு மறைந்தருளினார்.

திருவிளையாடல் அம்மானை

நான்கா ரணப்பொருளாய் நற்றவர்முன் உற்றகுரு
நான்கா ரணப்பொருளா நம்பு சொக்கன் அம்மானை
நான்கா ரணப்பொருளா நம்பு சொக்கன் ஆமாகில்
தான்குருவாய்ச் சுக்குவதேன் சாரமெலாம் அம்மானை
சாரங்கக் கையனன்றோ தன்னாமம் அம்மானை.

17. மாணிக்கம் விற்ற படலம்

போற்றிக் கலிவெண்பா

.... ஈறடைந்த
தென்னன் குமரன் திருமுடிக்கு வாணிபராய்
நன்மணிகள் விற்ற நலம் போற்றி.

மாணிக்கம் விற்றது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வீரபாண்டியன் நீதியுடன் ஆட்சி புரிந்தான். அவனுக்கு நெடுநாட்கள் கழித்து பட்டத்து அரசியின் வயிற்றில் ஒரு மகன் பிறந்தான். அரசனுக்குப் பல காமக் கிழத்திகள் இருந்தனர். அவர்கள் வயிற்றில் ஏராளமான மக்கள் தோன்றினர். ஒருசமயம் வீரபாண்டியன் வேட்டையாடச் செல்கையில் ஒரு புலிக்கு இரையாகி இறந்தான். அரசியும் அமைச்சர்களும் வருந்தினர்.

காமக் கிழத்தியரின் மக்கள் அரண்மனைக்குள் புகுந்து அரசனுடைய சகல செல்வங்களையும் விலையுயர்ந்த பொருள்களையும் மணிமகுடத்தையும் கவர்ந்து சென்று மறைந்தனர். மந்திரிப் பிரதானிகள் மன்னனுக்குச் செய்ய வேண்டிய ஈமச் சடங்குகளைச் செய்துவிட்டு மைந்தனுக்கு முடி சூட்ட எண்ணினர். முடியைத் தேடினர். அது களவு போய்விட்டதை அறிந்தனர். வேறு ஒரு புது மகுடத்தைச் செய்யலாம் என்று நினைத்தபோது விலையுயர்ந்த நவமணிகளும் களவு போனதை அறிந்து வருந்தி அரசன் மகனை அழைத்துக் கொண்டு சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட எண்ணினர். அப்போது சோமசுந்தரக் கடவுள் ஒரு நவரத்தின வியாபாரியாகத் தோன்றி அவர்கள் முன் வந்தார். வணிகர் இவர்களைப் பார்த்து 'ஏன் துன்பமாக உள்ளீர்கள்? என்ன செய்தி?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'எங்கள் அரசன் இறந்து விட்டான். அவன் மகன் இந்தச் சிறுவன். இவனுக்கு முடிசூட்ட எண்ணிப் பொக்கிஷ அறையைத் திறந்தோம். அதிலிருந்து யாவும் களவு போய்விட்டதை அறிந்து இறைவனிடம் விண்ணப்பிக்க எண்ணி கோயிலுக்கு வந்தோம்' என்றனர்.

வணிகராக வந்த இறைவன் அவர்களுக்கு ஆறுதல் கூறி 'என்னிடம் விலையுயர்ந்த நவமணிகள் உள்ளன. நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவற்றை உங்களுக்குத் தருகிறேன்' என்று கூறிக் கோயிலின் முன் ஒரு கரிய கம்பளத்தை விரித்து வடக்கு நோக்கி அமர்ந்து நடுவில் ஒரு மாணிக்கத்தை வைத்து எட்டுத் திக்குகளிலும் எட்டு மணிகளை வைத்து இறைவனைப் பூசித்தார். பின் அம்மணிகளின் வரலாறு,குணம், குற்றங்கள், யார் எந்த மணியை அணிய வேண்டும் அவற்றால் கிடைக்கும் பலன்கள் முதலியவற்றை விவரமாகச் சொன்னார். பின்னர் அமைச்சர்களைப் பார்த்து 'இம்மணிகளைக் கொண்டு புதியதொரு மகுடத்தை தயார் செய்து அதனை இந்தக் குமாரனுக்குச் சூட்டி அபிடேக பாண்டியன் என்று அழையுங்கள்' என்றார். அவ்வாறே அமைச்சர்களும் அரசகுமாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்தனர். காமக்கிழத்தியர் மக்கள் கவர்ந்து சென்ற சகல செல்வங்களும், மணி மகுடமும் உடனே கிடைத்தன. யாவரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

காணிக் கடவுள் சொக்கர் காவலன் காதலற்கா
மாணிக்கம் விற்றார் மதுரையிலே அம்மானை
மாணிக்கம் விற்றார் மதுரையிலே ஆமாகில்
பூணப் பணியுடையார் பொன்வில்லார் அம்மானை
பொன்னவையில் நட்டம் பொருந்தினரே அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... நன்னகர்மேல்
வென்றி வருணன் விடுத்த கடல்பருகத்
துன்றுமுகில் நான்கேவும் சூள் போற்றி.

வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் கூடிய சித்திரா பௌர்ணமி நாளில் ஆண்டுதோறும் இந்திரன் சோமசுந்தரக் கடவுளைப் பூசித்துத் திரும்புவது வழக்கம். அன்றுஒரு நாள் சோமசுந்தரக் கடவுளை அபிடேக பாண்டியன் சிறப்பாகப் பூசை செய்து கொண்டிருந்தான். இந்திரன் தான் அப்பூசையைக் காலம் தாழ்த்திப் பூசித்ததால் மன வருத்ததுடன் தேவலோகம் சென்றான். அப்போது வருணன் அங்கே வந்து இந்திரன் மனக்கவலை பற்றி விசாரித்தான். இந்திரன் நிகழ்ந்ததைச் சொன்னான். உடனே வருணன் செருக்கடைந்து 'அந்த லிங்கம் என்ன ஒரு மகா லிங்கமா? என்றான். அதற்கு இந்திரன் எனக்குத் துர்வாச முனிவரால் இடப்பட்ட சாபமும் ஐராவதத்தின் சாபமும் நீக்கிய லிங்கம்' என்றான். உடனே வருணன் 'தெய்வ மருத்துவர்களாலும் போக்க முடியாத என் வயிற்று நோயை அந்த லிங்கம் போக்குமா?' என்று கேட்டான். இந்திரன் 'நோய்க்கு மூல காரணமாகவுள்ள பிறவி நோயையே போக்க வல்லவர் அப்பெருமான். வயிற்றுவலி ஒரு பிரமாதமா? வேண்டுமானால் நீ அம்மூர்த்தியைச் சோதித்துப் பார்' என்றான்.

உடனே வருணன் தன் வயிற்று நோயைப் போக்கக் கருதிக் கடலை அழைத்து மதுரையை அழிக்குமாறு பணித்தான். கடலும் பிரளயம் போல் பொங்கி வந்தது. மக்கள் பயந்தனர். தங்கள் அரசனிடம் முறையிட அவனும் குலதெய்வமாகிய சுந்தரேசப் பெருமானிடம் முறையிட்டான்.

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உடனே சிவபெருமான் அவர்கள் பால் கருணை கொண்டு தன் சடையில் இருந்த நான்கு மேகங்களையும் அழைத்து கடலை உறிஞ்சி நகரைக் காக்குமாறு பணித்தார். அவ்வாறே மேகங்களும் கடலைப் பருகி வெள்ளத்தை வற்றச் செய்தன. மக்கள் இன்புற்றனர். வருணன் வெட்கப்பட்டு வருந்தினான். அரசன் இறைவனைத் துதித்து மகிழ்ந்தான்.

திருவிளையாடல் அம்மானை

தொண்டர் சனனக் கடலைத் தூர்க்கும் மதுரேசரருள்
கண்டறியா தேவும் கடல் வருணன் அம்மானை
கண்டறியா தேவும் கடல் வருணன் ஆமாகில்
அண்டிவற்று மோமுகிலால் ஆர்கலியும் அம்மானை
ஆர்கலியு மாற்றுமுகில் அன்றோசொக் கம்மானை.

மதுரைக் காண்டம் முற்றிற்று.

கூடற் காண்டம்

19. நான்மாடக் கூடலான படலம்

போற்றிக் கலிவெண்பா

.... கன்றியவன்
வான்மாரி யேழும் விடுப்ப மழைநான்கும் போய்
நான்மாடமான நலம் போற்றி.



நான்மாடக் கூடல் ஆனது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மதுரையை அழிக்க எண்ணிய வருணன் தன் எண்ணம் பலிக்கா போனதால் வெட்கமும் கோபமும் கொண்டான். தன்னிடமுள்ள ஏழு மேகங்களை ஏவிப் பேரூழிக் காலத்துப் பெய்யும் மழை போல மழையைப் பொழிந்து மதுரையை அழிக்க உத்தரவிட்டான். அம்மேகங்களும் கனத்த மழையைப் பொழிந்தன. எட்டுத் திசை யானைகளும் நடுங்கின. மக்கள் அலறினர். எங்கும் ஒரே இருள் மயம்.

இதனைக் கண்ட அபிடேக பாண்டியனும் மனம் வருந்தித் தம் குல தெய்வமாகிய சுந்தரேசப் பெருமானிடம் விண்ணப்பம் செய்தான். உடனே சிவப்பெருமான் தம் சடையிலிருந்த நான்கு மேகங்களையும் ஏவி மதுரையை வளைத்து நான்கு மாடங்களாகி அவ்வேழு மேகங்கள் பெய்யும் மழையைத் தடுத்து மக்களைக் காக்குமாறு பணித்தார். அவ்வாறே அந்நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகி மதுரையைக் காத்தன. அரசன், மந்திரிகள், குடிமக்கள் யாவரும் அக மகிழ்ந்தனர். வருணன் தன் குற்றத்தை உணர்ந்து வெட்கத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்தை அடைந்தான். உடனே அவனுக்குத் தீராதிருந்த வயிற்றுவலி தீர்ந்து விட்டது.

பின்னர் வருணன் தீர்த்தத்தில் நீராடிச் சோமசுந்தக் கடவுளை விதிப்படி பூசித்து வணங்கி அவர் முன் நின்றான். பரமனும் வருணனை நோக்கித் திருவருள் கூர்ந்து அவன் வேண்டிய சில வரங்களை வழங்கினார். வருணனும் தன்னுலகிற்குத் திரும்பிச் சென்றான்.

சிவபெருமானால் விடப்பட்ட நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்த காரணத்தால் மதுரைக்கு நான்மாடக்கூடல் என ஒரு பெயர் வழங்கலாயிற்று.

திருவிளையாடல் அம்மானை

கான்மாலைச் சொக்கர்கொடுங் கார்விலக்கி யூர்புரந்து
நான்மாடக் கூடலென்று நாட்டினர்பேர் அம்மானை
நான்மாடக் கூடலென்று நாட்டினர்பேர் ஆமாகில்
வான்மாரி கண்டு மலைக்குமோ அம்மானை
மலைக்கு மாரிக்கு மயங்கியவர் அம்மானை.

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

20. எல்லாம் வல்ல சித்தரான படலம்

போற்றிக் கலிவெண்பா

.... தேனிதழி
வைத்தமுடி மறைத்து மாடநகரெங் கெங்கும்
சித்தரா யாடியருள் சீர் போற்றி.



எல்லாம் வல்ல சித்தரானது

ஒரு சமயம் சோமசுந்தரக் கடவுள் மதுரை மாநகரில் உள்ள அனைவரும் இம்மை மறுமைப் பயன் பெற்றுய்ய வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு ஒரு சித்த வடிவம் மேற்கொண்டு தோன்றினார். இச்சித்தர் பெருமான் நகரின் ஒரு புறத்தில் இருப்பார். அங்கு ஒரு கூட்டம் கூடும். உடனே வேறொரு பக்கம் தோன்றுவார். அக்கூட்டம் அங்கு செல்லும். பிறகு பல இடங்களில் எல்லாம் சுற்றிச் சுற்றி பல அற்புதங்களை நிகழ்த்தினார்.

தூரத்திலுள்ள பொருள்களை எல்லாம் அருகே வரவழைத்துக் காட்டினார். அருகிலுள்ள பொருள்களைத் தூரத்தே செலுத்திக் காட்டினார். கிழவர்களைக் குழந்தைகளாக்கினார். குழந்தைகளைக் கிழவர்களாக மாற்றினார். ஆணைப் பெண்ணாக மாற்றினார். பெண்ணை ஆணாக மாற்றிக் காட்டினார். மலடியை மகப் பெறச் செய்தார். கூன், குருடு, செவிடு, நொண்டி இவைகளைச் சரியாக்கினார். நான்கு உலோகங்களையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

தங்கமாக்கினார். செல்வர் வீட்டிலிருந்த செல்வங்களை எல்லாம் வறியவர் வீடுகளில் சேர்ப்பித்தார். நண்பர்களைச் சண்டையிடும்படி செய்தார். காஞ்சிர மரத்தில் இனிய பழங்கள் வருமாறு பணித்தார். வைகை நீர் வெள்ளமாக வரவழைத்துக் காட்டினார். நல்ல குடிநீரை உவர்ப்பு நீராகவும் உவர்ப்பு நீரை நல்ல நீராகவும் மாற்றிக் காட்டினார். தன் கையிலிருந்த மாத்திரைக் கோலை ஆகாயத்தில் வீசி எறிந்து அதன் மீது இருந்து பல ஜாலங்களைச் செய்தார். ஆகாயத்திலிருந்து மேகங்களைப் பற்றித் தம் கரங்களால் பிழிந்து மழை பெய்யச் செய்தார்.

பகலில் காணும் பொருள்களை இரவில் காட்டியும் இரவில் காணும் பொருள்களைப் பகலில் காட்டியும் ஆடல் புரிந்தார். தொண்டு கிழவர்களை மாத்திரைக் கோலால் தடவி அவர்களைக் காளைகளாக மாற்றி அவர்களுக்கு இசைய வயதான பெண்களைக் குமரிகளாக மாற்றியும் காட்டினார்.

எழுத்து வாசனையே இல்லாதவர்கள் நாக்கில் திருநீறு தூவி அவர்களைப் பெரிய கல்விமான்களாக்கினார்.அரசன் தோட்டத்தி லிருந்த பல விதமான மரங்களை ஒன்றை ஒன்றாக மாற்றிக் காட்டினார். இன்னும் இவை போன்ற அளவில்லாத மாய வித்தைகளைச் செய்து திருவிளையாடல் புரிந்தார்.

கண்ட மக்கள், அரசன் வேலைக்காரர்கள் யாவரும் இதில் ஈடுபட்டுத் தம் தொழிலை மறந்தனர். இதனை அறிந்த அபிடேக பாண்டியன் தன் அமைச்சர்கள் சிலரை அனுப்பி அச்சித்தரை அழைத்துவரப் பணித்தான். அவர்களும் வந்து சித்தமூர்த்திகளை வணங்கி அரசன் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். சித்த மூர்த்தியும் 'அரசனால் ஆக வேண்டியது எனக்கு ஒன்றுமில்லை' என்று அரண்மனைக்குச் செல்ல மறுத்தார். இச்செய்தியை அமைச்சர்கள் அரசனுக்குச் சொல்ல அவனும் எல்லாவற்றையும் வெறுத்த துறவிகளுக்கு அரசனால் என்ன தேவைப்படும் என்று எண்ணி வாளாவிருந்தான்.

திருவிளையாடல் அம்மானை

திகைத்தவரைக் காக்கும் திருமதுரைச் சொக்கலிங்கர்
சகத்திலெல்லாம் வல்ல சித்தர் தாமானார் அம்மானை
சகத்திலெல்லாம் வல்ல சித்தர் தாமானார் ஆமாகில்
மகத்துவமோ கங்கையை வைத்தே சுமப்பது அம்மானை
வைப்பார்களிச் சுமைக்கும் வல்லவரென்று அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

போற்றிக் கலிவெண்பா

.... சித்தராய்
மன்னவன் கைக்கரும்பை வாங்கிக் கல்லானைக்குத்
தின்ன அளித்த திறம் போற்றி.

கல் யானைக்கு கரும்பு தந்தது

அபிடேக பாண்டியன் தான் அழைத்தும் சித்தர் அரண்மனைக்கு வராததால் தானே சென்று அவரைக் காண எண்ணி ஆலயத்திற்குச் சென்றான். இதனை அறிந்த சித்தரும், சிவபெருமான் வடக்குப் பிராகாரத்தில் வந்து அமர்ந்திருந்தார். தை மாத முதல்நாள் உத்தராயணப் புண்ணிய நாள். ஆகையால் பாண்டியன் ஆலயத்தில் பெருமானை வணங்கிவிட்டு வலமாக வரும்போது வடக்குப் பின்புறத்தில் அமர்ந்திருந்த சித்த மூர்த்தியைக் கண்டு வணங்கி உபசரித்து அவரை நோக்கி 'நீர் எந்த ஊர்? உம் பெயர் என்ன? உமக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டான். அதற்குச் சித்தர் 'எல்லா நாடும் எல்லா ஊரும் நமதே. ஆனாலும் இப்போது காசி, காஷ்மீரம் முதலிய தலங்களைத் தரிசித்துவிட்டு இம்மையில் நலனைக் கொடுக்கும் மதுரைப் பதியை வணங்க வந்தோம். பிச்சைப் பெருவாழ்வுடையோம். எல்லாச் சித்து வித்தைகளும் நாம் செய்வோம். வேண்டியவர்கள் மனம் மகிழ வேண்டியவற்றை எல்லாம் தருவோம். 64 கலைகளிலும் வல்லோம். நாங்கள் எல்லாம் வல்ல சித்தராவோம். உன்னிடம் நான் கேட்டுப்பெற வேண்டியதொன்று மில்லை ' எனச் சிரித்தார்.

இதனை அறிந்த அரசன் சிறிது கோபம் கொண்டான். அந்நேரத்தில் ஒரு உழவன் உயர்ந்து நீண்ட ஒரு கரும்போடு அப்பக்கமாக வந்தான். அரசனும் சித்தரின் கர்வத்தை அடக்குவது போல் எண்ணி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவரைப்பார்த்து 'சுவாமி நீர் எல்லாம் வல்ல சித்தர் என்பது உண்மையானால் இந்த விமானத்தைத் தாங்கி நிற்கும் இந்தக் கல்லானையை இக் கரும்பைத் தின்னுமாறு செய்தால் எல்லாம் வல்ல சித்தரும் நீரே, மதுரைப் பெருமானும் நீரே. உம்மனம் விரும்பியதை உமக்கு அளிப்பேன்' என்றான்.

சித்தர் சிறிது புன்னகை புரிந்து, 'மன்னா! நீ விரும்பியபடி இக்கல்லானை இக்கரும்பைத் தின்னும் பார்' என்று சொல்லிக் கடைக்கண்ணால் அக்கல்லானையை நோக்கினார். உடனே அக்கல்லானை உயிர்பெற்றுத் தன் துதிக்கையினால் அக் கரும்பை இழுத்துத் தன் வாயிலிட்டுக் கடித்து கரும்பின் சாற்றைப் பருகிச் சக்கையைக் கீழே எறிந்தது. அரசன் வியந்தான். அந்த யானையைச் சித்தர் மீண்டும் ஒருமுறை கடைக்கண்ணால் பார்த்தார். அது அரசன் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த முத்து மாலையைப் பறித்தது. அரசன் வேலையாட்கள் கோபம் கொண்டு சித்தரை அடிக்க வந்தார்கள். சித்தர் அவர்களை நோக்கி 'நில்' என்றார். எல்லாரும் செயலற்று ஓவியம் போல அசையாது நின்று விட்டார்கள். அரசன் தன் தவறினை உணர்ந்து சித்த மூர்த்திகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன்னை மன்னித்து அருளுமாறு வேண்டினான். சித்த மூர்த்தியும் அவன் பிரார்த்தனைக்கு மகிழ்ந்து முத்துமாலையைத் திரும்பிப் பெறுமாறு அருளி என்ன வேண்டுமென்று கேட்டார். அரசனும் சற்புத்திரன் வேண்டும் என அவ்வரத்தைக் கொடுத்து மறைந்தார். அரசனும் ஒரு சத்புத்திரனைப் பெற்றுச் சிறிது காலத்திற்குப் பின் மகனுக்கு முடிசூட்டி சிவனடியை அடைந்தான். அம்மகன் விக்கிரமபாண்டியன் பாண்டிநாட்டை நீதி தவறாமல் அரசு செய்து கொண்டிருந்தான்.

திருவிளையாடல் அம்மானை

கல்லாடர் சொல்லினிமை கண்ட சொக்கர் பாண்டியன்முன்
கல்லானை தின்னக் கரும்பு தந்தார் அம்மானை
கல்லானை தின்னக்கரும்பு தந்தார் ஆமாகில்
கல்லார்தோள் வேம்பன் கரும்பாமே அம்மானை
கரும்பொடுவேம் போர்வேளைக் காக்குமவர் அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

22. யானை எய்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... தென்னவன் மேல்
வெங்கமணர் விடுத்த களிற்றைநர
சிங்கசரம் தொட்டெய்த சீர் போற்றி.

யானை எய்தது

விக்ரம பாண்டியன் பாண்டி நாட்டைச் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தான். மக்கள் மன அமைதியுடன் ஒரு குறையுமின்றி வாழ்ந்தனர். அரசன் சைவ சமயத்தில் மிகவும் ஈடுபாடு உடையவனாக இருந்து மற்றச் சமயங்களை அடக்கி ஒடுக்கி வந்தான். இதனைக் கண்டு சமணர் பொறாமை கொண்டனர். அப்போது காஞ்சியிலிருந்து அரசாண்ட சோழ மன்னன் ஒருவன் சமணத்தை மேற்கொண்டு ஒழுகி வந்தான். அதனால் இரு மன்னருக்கும் பகை மூண்டது. பாண்டிய மன்னனை நேரில் எதிர்த்துப் போர் செய்யப் பயந்த சோழன் சூழ்ச்சியால் வெல்ல எண்ணினான். மதுரையைச் சுற்றி இருந்த எட்டு மலைகளான அஞ்சனம், கிரௌஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், அத்திகிரி, சையம், ஏமகூடம், விந்தம் ஆகியவற்றில் வாழும் சமணர் எண்ணாயிரம் பேரையும் அழைத்தான். அவர்களிடம் 'நீங்கள் ஒரு அபிசார வேள்வி செய்து பாண்டியனைக் கொல்ல வேண்டும் அப்படிச் செய்தால் என் ராஜ்ஜியத்தில் ஒரு பாதியைத் தருவேன்' என்றான்.

உடனே எண்ணாயிரவரும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய குழியை வெட்டி அதில் விஷக் கட்டைகளை இட்டு விஷ ஜந்துக்களின் கொழுப்பை நெய்யாகச் சொரிந்து பெரிய வேள்வி ஒன்றைச் செய்தார்கள். அந்த யாகத்தீயினால் அருகிலிருந்த சோலைகள் எல்லாம் எரிந்து சாம்பலாயின. நீர்நிலைகள் வறண்டன. உயிர்கள் மடிந்தன. யாக முடிவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குண்டத்திலிருந்து ஒரு பெரிய மதம் பொருந்திய யானை வெளி வந்தது. அடிகள்மார் அந்த யானையை ஏவி பாண்டியனைக் கொன்று வர ஆணையிட்டனர்.

யானையும் காஞ்சியிலிருந்து மதுரை செல்லும் வழியில் பல தீய செயல்களைப் புரிந்து கொண்டே சென்றது. மக்கள் நடுங்கி தங்கள் அரசனிடம் இச்செய்தியைத் தெரிவித்தார்கள். மன்னன் தன் குல தெய்வமாகிய சுந்தரேசப் பெருமானிடம் முறையிட்டான். இறைவன் ஆறுதல் கூறி, ' ஏ அரசனே, நாம் ஒரு வில்வீர வடிவத்துடன் வந்து சமணர் ஏவிய மதயானையைக் கொன்று உங்களைக் காப்பாற்றுவோம். பயப்படாதே. அதற்கு முன்னால் மதுரைக்குக் கிழக்கில் ஒரு அட்டாலை மண்டபத்தை நிர்மாணிப்பாயாக' என்று அருளினார்.

மன்னனும் அசரீரி கூறியபடி மதுரைக்குக் கீழ்த்திசையில் பதினாறு தூண்கள் கொண்ட ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டி முடித்தான். சிவபெருமானும் தான் ஒரு வில் வேடனாக மாறிக் கையில் வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு அம்மண்டபத்தில் வந்த தங்கி யானையின் வரவை எதிர்நோக்கி நின்றார். யானை வந்தவுடன் தன் வில்லில் நரசிம்மாஸ்திரத்தைப் பூட்டி எய்தார். யானையும் வீழ்ந்து இறந்தது. அதனுடன் வந்த சமணர்களை பாண்டிய சைன்யம் அடித்துத் துரத்தி விட்டது. விக்ரம பாண்டியன் சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நன்றி செலுத்தி 'பெருமானே தாங்கள் எங்கள் பொருட்டு இவ்விடத்திலேயே இவ்வில்வீர வடிவத்துடனேயே எப்போதும் தங்கியிருந்து எங்களைக் காத்தருள வேண்டும்' என்றான். பெருமானும் அவ்வாறே வரம்அருளினார். பின் இறைவனருளால் இராஜசேகரன் என்னும் ஒரு மைந்தனைப் பெற்று இன்பமாக வாழ்ந்தான்.

சிவபெருமான் ஏவிய நரசிம்மாஸ்திரம் நரசிம்ம ரூபமாக அங்கு மாறி எழுந்தருளியது. உரோமச முனிவரும் பிரகலாதனும் அதனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

திருவிளையாடல் அம்மானை

நின்றமது ரேசனுமை நேசன் பசு பாசன்
அன்றமணர் விட்டவலி யானை எய்தான் அம்மானை
அன்றமணர் விட்டவலி யானை எய்தான் ஆமாகில்
என்றவற்கேன் தொண்டருக்கு ளேதேளிமை அம்மானை
ஏகவெளி யானின் றிருப்பதுமுண்டு அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

23. விருத்த குமார பாலரான படலம்

போற்றிக் கலிவெண்பா

.... தொங்குதிரை
மூப்பிளைய காளை முலையுண் குழவியெனக்
கோப்பருவம் கொண்ட குணம் போற்றி.

விருத்த குமார பாலர் ஆனது

விக்கிரம பாண்டியன் அரசாட்சி செய்த காலத்தில் பாண்டி நாட்டில் விருபாக்கன் என்னும் அந்தணன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு வாழ்க்கைத் துணையாக வாய்த்தவள் சுபவிரதை என்பாள். இருவரும் இல்லறத்தைச் செவ்வனே நடத்தி வந்தனர். மகப்பேறில்லை. சிவபெருமானைக்குறித்து விரதம் காத்தனர். அவரருளால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குக் கௌரி என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். அக்குழந்தையும் தன் ஐந்தாவது வயதிலேயே தேவியிடம் அன்பு கொண்டு தந்தைபால் கௌரி மந்திரத்தைக் கேட்டுத் தெளிந்து ஜபித்து வந்தாள்.

கௌரிக்கு எட்டு வயது எட்டியது. திருமணம் செய்ய வேண்டும் என்று எண்ணிய வேளையில் ஒரு வைணவ பிரமசாரி பிச்சைக்காக அங்கு வந்தான். விருபாக்கனும் குலம், கோத்திரம், சூத்திரம், மரபு முதலிய ஒன்றையும் விசாரியாமலேயே தன் பெண் கௌரியை அவ்வைணவப் பிரமசாரிக்குத் திருமணம் செய்விக்க நிச்சயம்செய்து அவனுக்குக் கௌரியைத் தானம் செய்துவிட்டான். தாயும் சுற்றத்தாரும் பெரிதும் வருந்தினர். பின்னர் விசாரித்ததில் அவன் வைணவ சமயத்தான் என்ற ஒரு குறை தவிர மற்ற எல்லாம் ஒத்திருந்தன. வேத விதிப்படி விருபாக்கன் அவனுக்குக் கௌரியைத் திருமணம் செய்து வைத்துச் சகல வரிசைகளுடன் அவளை அவனுடன் அனுப்பி வைத்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பிச்சைக்கு வந்த வைணவன் பெரிய செல்வந்தன் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு சிறப்புடன் தன் வீட்டுக்கு வந்ததும் அவன் பெற்றோர் பெண் சிவவேடத்துடனும் சிவசிந்தனையுடனும் இருப்பதைக் கண்டு பொறாமை கொண்டு அவளைத் தனியே வைத்துக் குடும்பம் நடத்தினார்கள். ஒருநாள் அவர்கள் பக்கத்து ஊரில் நடைபெறும் தங்கள் உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு செல்ல வேண்டி கௌரி இருந்த வீட்டைப் பூட்டி விட்டு அயலூர் சென்றனர். கௌரி தன் வீட்டில் இருந்தபோது தினமும் சிவனடியார்களை உபசரிப்பது வழக்கம். அன்று யாரையும் காணாமல் தவித்துக் கொண்டிருந்தாள். அப்போது சிவபெருமானே ஒரு அடியார் போல் வந்து உணவைக் கேட்டார். கௌரி அவரைக் கண்டு மகிழ்ந்து 'வீடு பூட்டியுள்ளதே தங்களை நான் எப்படி உபசரிக்க முடியும்?' என்றாள். சிவபெருமான் 'நீ பூட்டைத் தொட்டால் அது தானாகத் திறக்கும். விரைவில் சமையல் செய்து என் பசியைப் போக்குவாய்' என்றார். அவ்வாறே கௌரியும் செய்து அடியாருக்கு நால்வகை உணவு அறுசுவையுடன் தயார் செய்து பசி போக்கினாள். உண்ட அடியார் மகிழ்வுடன் ஒரு வாலிபனாக மாறினார். இதனைக் கண்ட கௌரி நடுங்கினாள். அச்சமயம் அயலூர் சென்ற மாமன், மாமி முதலியோர் உள்ளே நுழைந்தனர். கௌரியைக் காக்க வந்த அடியார் ஒரு கைக்குழந்தையாக மாறித் தன் கால் விரலை வாயில் வைத்து அழுது கொண்டிருந்தார். பொல்லாத மாமன், மாமியார் கௌரியை நோக்கி 'இக்குழந்தை ஏது?' என்றனர். கௌரியும் 'அயல்வீட்டுத் தத்தனையன் மனைவி இங்கு வந்து இக்குழந்தையைச் சிறிது நேரம் பார்த்துக் கொள்ளுமாறு விட்டுச் சென்றனள்' என்றாள். பொறாமை கொண்ட அவர்கள் 'அவன் ஒரு சைவன், நமக்கு ஆகாதவன். ஆதலால் நீ அக்குழந்தையுடன் வெளியே போய்விடு' என்று துரத்தி விட்டனர்.

கௌரி அக்குழந்தையைக் கையிலேந்திக் கொண்டு தேவி மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே வெளியே வந்தாள். உடனே அக்குழந்தை மறைந்தது. ஆகாய வீதியில் பார்வதி பரமேசுவரன் ரிஷபாரூடராய்க் காட்சியளித்துக் குழந்தை கௌரிக்குத் தேவி சாரூபத்தினை அளித்துத் தம்முடன் கயிலைக்கு அழைத்துச் சென்றனர். தேவர்கள் பூமழை பொழிந்தனர். இதனைக் கண்டவர்கள் அதிசயித்தனர். பொறாமை கொண்ட மாமன் மாமியார் ஏமாந்து நின்றனர்.

திருவிளையாடல் அம்மானை

ஏர்மதுரை யார்விருத்த ரின்குமரர் பாலரெனப்
பேர்கவுரி கண்டுநின்ற பேரொளியார் அம்மானை
பேர்கவுரி கண்டுநின்ற பேரொளியார் ஆமாகில்
ஓர்விதியேன் காணான் ஒளியார் அம்மானை
ஒளியாரைக் காணாதார் விதியே அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

24. கால் மாறியாடின படலம்

போற்றிக் கலிவெண்பா

.... மாப்பெரியோர்
தேறுநடந் தன்னையொரு தென்னன் தனக்கிரங்கி
மாறிநடஞ் செய்த மலர் போற்றி.



கால் மாறி ஆடியது

விக்கிரம பாண்டியன் தன் மகனாகிய இராஜசேகர பாண்டியனுக்கு முடிசூட்டி ராஜ்ய பாரத்தை அவன் மீது சுமத்திவிட்டுச் சிலகாலம் கழித்துச் சுந்தரேசப் பெருமான் திருவடி நீழலில் இரண்டறக் கலந்தான்.

இராஜசேகரன் சிவபக்தியில் சிறந்து விளங்கியவன் ஆதலால் வெள்ளியம்பலத்தில் பரமேசுவரன் பதஞ்சலி, வியாக்கிரபாதர் முனிவர் பொருட்டு ஆடிக் காட்டிய பரதக் கலையை நீக்கி ஏனைய 63 கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். ஒருநாள் சோழ நாட்டிலிருந்து வந்த ஒரு புலவன் மன்னனைப் பார்த்து 'எங்கள் அரசனுக்கு 64 கலைகளும் வரும். உனக்குப் பரதக்கலை தெரியாதே' என்று பேசினான். இதனைக் கேட்டதும் இராஜசேகரபாண்டியன் பரதக்கலை வல்லவர்களை அழைத்து அதனையும் கற்கத் தொடங்கினான். தான் கற்கும் போது தனக்குக் கால்கள், கைகள், உடம்பு முதலியன துன்பம் அடைந்தன. 'வெள்ளியம்பலத்தில் ஆடும் நடராஜப் பெருமானுக்கும் இத்துன்பம் இருக்குமே' என்று எண்ணிய மன்னன் கோயிலை அடைந்தான்.

உலகிலுள்ள சகல உயிர்களும் இயங்க வேண்டுமானால் சிவபெருமான் ஆடிக் கொண்டே இருக்கவேண்டும். அவன் ஆட்டத்தை நிறுத்தினால் உயிர்கள் இயங்கா. ஆகவே ஆட்டத்தை நிறுத்தும்படி கேட்கக் கூடாது. ஆனால் ஆடும் போது உண்டாகும் துன்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்க மனம் வருத்தம் அடைகிறது. இதற்கு வேறொரு வழி உண்டு என்று எண்ணி ஒரு சிவராத்திரி தினத்தில் வெள்ளியம்பல வாணருக்குச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

சிறப்பாக பூசைகள் செய்வித்தான். பின் பெருமானை நோக்கி, 'என்பொருட்டுத் தேவரீர் தூக்கிய திருவடியை ஊன்றி, ஊன்றிய திருவடியைத் தூக்கிக் காலைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டுகிறேன். இன்றேல் நான் உயிர் துறப்பன்' என்றான். பெருமானும் அவ்வாறே காலை மாற்றியாடிக் காட்டினார். அரசன் ஆச்சரியத்துடன் பெருமானை வணங்கிப் பலவாறு துதித்தான். பின் என்றும் இவ்வாறே இருந்து அருள் புரிய வேண்டும் என வேண்டிப் பெற்று மகிழ்ந்தான்.

திருவிளையாடல் அம்மானை

பாடுபெறு மூன்று பதந் தூக்கி மேற்றூக்கி
ஆடுபதம் ஊன்று வெள்ளி யம்பலவன் அம்மானை
ஆடுபதம் ஊன்று வெள்ளி யம்பலவன் ஆமாகில்
காடாம் கடம்புடையான் காலாறோ அம்மானை
காலாறென் றேவழுதி கண்டனன்முன் அம்மானை.

25. பழியஞ்சின படலம்

போற்றிக் கலிவெண்பா

.... ஆறடைந்தோர்
வஞ்சி உயிரிழுப்ப நாடு மறப்பழியை
அஞ்சி வெளிசெய்த அறம் போற்றி.

பழியஞ்சியது

இராஜசேகர பாண்டியன் சிலநாட்கள் நாட்டை ஆண்டு பின் தன் மகனான குலோத்துங்க பாண்டியனுக்கு முடிசூட்டி இறைவன் திருவடி அடைந்தான். குலோத்துங்க பாண்டியன் சுந்தரேசப் பெருமானைத் தினமும் வழிபட்டு வந்தான். அவனுக்குப் பதினாயிரம் காமக்கிழத்தியர் உண்டு. இவர்களுக்கு ஒருத்திக்கு ஆறாக அறுபதினாயிரம் பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுள் ஒரு மகன் நல்ல பராக்கிரமம் உடையவனாய் விளங்கினான். அவன் பெயர் அநந்தகுண பாண்டியன். அவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அரசனுக்குரிய அனைத்து வித்தைகளையும் கற்றுத் தேர்ந்தான். அவன் அரசாண்ட போது ஒரு நிகழ்ச்சி நடந்தது.

திருப்பத்தூரில் வசித்து வந்த ஒரு அந்தணன் தன் மனைவியுடனும் ஒரு குழந்தையுடனும் தன் மாமன் வீட்டிற்கு மதுரை நோக்கி வந்தான். வழியில் அவன் மனைவிக்குத் தாகம் ஏற்பட்டுத் தண்ணீர் வேண்டு மென்றாள். அந்தணனும் மனைவியையும் குழந்தையையும் ஒரு ஆல மரத்தடியின் நீழலில் விட்டுவிட்டு தண்ணீர் கொண்டுவரச் சென்றான். அச்சமயம் அந்த மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தஒரு அம்பு காற்றால் அடிக்கப்பட்டுக் கீழேயிருந்த அப்பெண் வயிற்றில் பாய அவள் இறந்தாள். தண்ணீர் கொண்டுவரச் சென்ற அந்தணன் வந்து தன் மனைவி உயிர் நீத்ததை அறிந்தான். சுற்றிலும் பார்த்தான். பக்கத்தில் வேறொரு மரத்தடியில் ஒரு வேடன்கையில் வில்லும் அம்பும் உடையவனாக வெயிற்கு ஒதுங்கியிருப்பதைக் கண்டான். கண்டதும் இவன்தான் தன் மனைவியைக் கொன்றிருக்க வேண்டும் என்று எண்ணிப் பிணத்தை முதுகிலிட்டுக் குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு அவ்வேடனுடன் அரசனிடம் சென்றான்.

அரசனும் நிகழ்ந்த செய்தியைக் கேட்டு உணர்ந்தான். அந்தணன் சொன்னதைக் கேட்டுக்கொண்டு வேடனை நோக்கி அந்தணன் மனைவியை யார் கொன்றார்? என்று கேட்டார். அதற்கு அவ்வேடன் ஐயா நான் கொல்லவில்லை. கொன்றவரையும் கண்டிலேன் என்றான். பிறகு மந்திரிகள் அவ்வேடனைத் தண்டித்தாகிலும் இது நடந்த செய்தியை அறிய வேண்டும் என்றனர். வேடனைத் தண்டித்தார்கள். வேடனோ ஒரே மாதிரியாகவே நான் கொல்லவில்லை. கொன்றவரையும் பார்க்கவில்லை என்றான்.

அரசன் அந்தணனை நோக்கித்தன் மனைவியின் உடலை எரித்துவிட்டு வருமாறு பணித்து வேடனைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்தான். இச் சம்பவம் எப்படி நடந்திருக்கக்கூடும் என்று எண்ணி எண்ணி ஒரு முடிவும் செய்ய முடியாமல் மன்னன் வருந்தித் தன் குலதெய்வமாகிய சுந்தரேசப் பெருமானிடம் சென்று வணங்கிச் செய்தியைச் சொல்லி இந்த வழக்கில் ஒரு சுமுகமான தீர்ப்பு தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அப்போது அசரீரி வாக்கு ஒன்று அரசனுக்குக் கேட்டது. 'மதுரை நகருக்கு வெளியே செட்டித் தெருவில் ஒரு திருமணம் நடக்கிறது . நீ அந்த அந்தணனுடன் அங்கு சென்று மறைவாயிரு. அங்கு உன் மனதிலுள்ள ஐயம் தெளியும்' என்றது.

அவ்வாறே அரசன் அந்தணனுடன் மாறுவேடம் தாங்கி அன்றிரவு அந்த வீட்டில் ஒதுங்கியிருந்தான். அங்கு நடக்கவுள்ள திருமணத்தில் மணமகன் ஆயுள் முடிவதால் யமதூதர்கள் வந்து தங்கிப் பின்வருமாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

பேசிக் கொண்டனர். இறைவன் அருளால் அப்பேச்சு இவர்களுக்கு மட்டும் கேட்டது. அதாவது, 'இவன் உயிரைக் கொணருமாறு நமது தலைவன் கட்டளையிட்டான் இவனுக்கோ ஒரு வியாதியுமில்லை. எவ்வாறு இம்மணமகன் உயிரைக் கவர்வது?' என்றான் ஒருவன். அதற்கு மற்றவன், 'அன்று மரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு அம்பைக் காற்றால் விழச் செய்து கீழேயிருந்த பார்ப்பனியின் உயிரை எவ்வாறு கவர்ந்தோம்? அது போல திருமணம் நடக்கும்போது மேளம் அடிப்பார்கள். அப்போது தாழ்வாரத்தில் கட்டியுள்ள மாட்டினை அவிழ்த்து விடுகிறேன். அது சென்று மணமகன் மார்பில் முட்டச் செய்வோம். பிறகு அவன் உயிரை நாம் கொண்டு போகலாம்" என்றான்.

திருமணவேளை வந்தது. யமதூதன் மாட்டை அவிழ்த்துவிட்டான். அது மணையிலிருந்த மணமகனை மார்பில் தாக்கியது. தூதர் அவன் உயிரைக் கொண்டு போனார்கள். இவற்றை கேட்டும் கண்டுமிருந்த அரசன் தன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்று அந்தணனுக்கு வேறு திருமணம் செய்து கொள்ளப் பண உதவி செய்து அனுப்பினான். வேடனைச் சிறையிலிருந்து அழைத்து வரச்செய்து அவன் நிரபராதி என்ற நிலையில் அவனுக்கு நிரம்பப் பணம் கொடுத்து அனுப்பிய குலோத்துங்க பாண்டியன் கோயிலுக்குப் போய்ச் சுந்தரேசப் பெருமானுக்கு நன்றி தெரிவித்து வணங்கி அரசாட்சியைச் செவ்வனே நடத்தி வந்தான்.

திருவிளையாடல் அம்மானை

வழிக்கொண்ட வேதனில்லாள் மாண்டவகை பாண்டியற்குப்
பழிக்கஞ்சிச் சொக்கருண்மை பண்டுரைத்தார் அம்மானை
பழிக்கஞ்சிச் சொக்கருண்மை பண்டுரைத்தார் ஆமாகில்
அழிக்கும் தொழிலவர்க்கே தச்சமையம் அம்மானை
அச்சமைய மின்றி யழித்தறியர் அம்மானை.

26. மாபாதகம் தீர்த்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வஞ்சமனத்
தாயைப் புணர்ந்தமகன் தந்தைதனை வதைத்த
தீயபழி தீர்த்தவருள் சீர் போற்றி.

வடநாட்டில் அவந்தி என்றொரு நகரில் வேதங்களில் வல்லவனான ஓர் அந்தணன் இருந்தான். அவன் மனைவி மிக்க அழகுடையவளாக இருந்தாள். இவர்களுக்கு ஒரு கொடிய பாவியான பிள்ளை பிறந்தான். இவன் தீய குணமுடையவனாய்த் தீய காரியங்களையே செய்து கொண்டிருந்தான். மிகுந்த காமப்பித்துடையான். தன் தாயையே விரும்பி அவள் உடலுறவைக் கொண்டான். இச்செய்தியை அறிந்த தந்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மகனைக் கண்டித்தான். தனக்கிருந்த காம மயக்கத்தால் தந்தையைக் கொலை செய்துவிட்டுத் தன் தாயை அழைத்துக் கொண்டு வெளியூர் சென்று நன்றாய் வாழலாம். என்று எண்ணிச்சென்றான். செல்லும் வழியில் கள்வர்கள் இவனை அடித்து உடன் வந்த அழகிய தாயைக் கவர்ந்து கொண்டார்கள். உடனே இவனைப் பிரமகத்தி தோஷம் பற்றிக் கொண்டது. எங்கெங்கோ அலைந்தான். தோஷம் நீங்க வழியின்றித் தவித்தான். பல ஊர்களைக் கடந்துபோய் மதுரையை அடைந்தான். பிரமகத்தியும் இவனை விடாது தொடர்ந்து வந்தது. நல்ல காலம் இவனுக்குக் கிட்டியது.



மாபாதகம் தீர்த்தது

அவனுக்கு அருள்புரிய வேண்டிச் சுந்தரேசப் பெருமான் ஒரு வேட வடிவம் தாங்கி, வேட்டுவப் பெண் வடிவம் தாங்கிய மீனாட்சியுடன் கிழக்குக்கோபுர வாயில் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார். வரும் அந்தணனை மீனாட்சியார் திருநோக்க அவன் பாபம் சற்றுக் குறைந்தது. சுந்தரேசப் பெருமான் கருணையுள்ளம் படைத்த அவனை நோக்கி 'அந்தணனே நீ தினம் விடியல்எழுந்து கோயிலுள்ள நிர்மால்யத் தொட்டியில் ஸ்நானம் செய்து, ஆலயத்தை 108 முறை அங்கப்பிரதட்சணம் செய்து பசுக்களுக்கு அறுகம்புல் கொடுத்துதவிப் பின் சிவனடியார்களுக்குச் சேவை செய்து ஆலயத்தில் உள்ள மூர்த்திகளை மும்முறை வணங்கிக் கையேந்திப் பிச்சையெடுத்து ஒருவேளை உண்' என்றார். அவனும் அவ்வாறே செய்து வந்தான். பிரமகத்தி தோஷம் நீங்கியது. புனிதன் ஆனான். சிவபெருமானை வணங்கி வடமொழியில் பல தோத்திரங்களைச் செய்தான். இன்புற்றான்.

திருவிளையாடல் அம்மானை

ஆபாவி அன்னையைத் தோய்ந் தப்பனைக் கொன்றோன் கொடிய
மாபாதகந் தீர்த்த வள்ளல் சொக்கர் அம்மானை
மாபாதகந் தீர்த்த வள்ளல் சொக்கர் ஆமாகில்
சாபமலை யாயவர்பால் சார்ந்ததே அம்மானை
சாராதோ சத்தியந்தப் பாகநின்றால் அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

27. அங்கம் வெட்டின படலம்

போற்றிக் கலிவெண்பா

.... தாயனைய
**ஆசான் மனைவிதன்மேல் ஆசைவைத்த மாணவனைக்
கூசாமல் கொன்ற கொலை போற்றி.**

அங்கம் வெட்டியது

குலோத்துங்க பாண்டியன் காலத்தில் வேற்றூரிலிருந்து ஒரு முதியவன் மதுரைக்கு வந்து ஓர் இடத்தை அமர்த்திக் கொண்டு மாணவர்களுக்கு வாள் வித்தை பயிற்சி தந்து அந்த வருவாயில் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி மகா பதிவிரதை. அவனிடம் வித்தை பயின்றவர்கள் பலர் அவர்களுள் ஒருவன் சித்தன். அவன் வித்தையில் தேர்ந்தவன். ஆயினும் தீய ஒழுக்கமுடையவன். தன் ஆசிரியனுக்கு மாறாகத் தான் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தித் தானும் அவனைப் போலவே பல மாணவர்களைத் தயார் செய்தான். வருவாயும் அதிகரித்தது. ஆசை பேராசையாக மாறியது. ஆசிரியரை விரட்டி விட்டால் தனக்கு நல்ல ஊதியம் கிடைக்கும் என்று எண்ணி ஆசிரியரின் மாணவர்களையும் தன்னிடம் அழைத்துக் கொண்டான். அத்துடன் நில்லாமல் ஆசிரியரின் மனைவியைச் சேர விரும்பி அவளிடம் தகாத வார்த்தைகள் பேசி கையைப் பிடித்து இழுத்தான். அவள் தன் கற்பின் திறத்தால் அவனிடமிருந்து தப்பித் தன் கணவனிடமும் இதனைச் சொல்லாமல் உயிர்க்குயிரான சுந்தரேசப் பெருமானிடம் சென்று விண்ணப்பித்தாள். கூடல் நாதனும் இவளைக் காக்கவும் தீயவனைத் தண்டிக்கவும் எண்ணி ஆசிரியன் வேடம் தாங்கி சித்தனிடம் சென்று, 'சித்தா காளையாகிய நீயும் மூப்படைந்த நானும் வாள் சண்டை செய்து நமது வலிமைகளை அளந்து காண்போம். நாளை வா' என்றான். சித்தனும் சம்மதித்தான்.

அதன்படியே சித்தனும் ஆசிரியன் வேடம் தாங்கிய சோமசுந்தரக் கடவுளும் சொன்ன இடத்தில் சந்தித்தனர். இருபக்கமும் உள்ள பல

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாணவர்கள் இவர்கள் வாள்போரைக் காணத் திரளாகக் கூடி விட்டார்கள். வெகு நேரம் வரை போர் நடந்தது. பிறகு சிவபெருமான் அங்கு கூடியிருந்த யாவரும் கேட்குமாறு 'உன் ஆசான் மனைவியை நினைத்த நெஞ்சையும், பேசிய நாக்கையும் அந்தம்மாளைத் தொட்ட கையையும் கண்ட கண்களையும் காத்துக் கொள்' என்று கூறிக் கூறி அந்தந்த உறுப்புகளையெல்லாம் வாளால் துண்டித்துக் கடைசியில் அவன் தலையை வெட்டித் தள்ளி விட்டு மறைந்தார்.

ஆசிரியரைக் காணாத மாணவர்கள் அவர் வீட்டிற்குச் சென்று அம்மையாரைப் பார்த்து 'சற்றுமுன் நம் ஆசிரியர் போர்க்களத்தில் சித்தனுடன் போர் செய்து அவன் தலையை வெட்டினார். பிறகு அவரை அங்குக் காணவில்லையே' என்று கேட்டனர். அதற்கு அம்மையார் 'அவர் கோயிலுக்குப் போனார்' என்றாள். வந்தவர் சிவபெருமான். அவர் மறைந்து கோயிலுக்குப் போனார் என்பது பொருள். தன் கணவன் சுவாமி தரிசனம் செய்ய வழக்கம் போலக் கோயிலுக்குச் சென்றார் என்று ஒரு பொருள். உடனே மாணவர்கள் கோயிலுக்குப் போய் நிகழ்ந்ததை அப்படியே சொன்னார்கள். ஆசிரியனும் வியந்து இது சுந்தரேசப் பெருமான் திருவிளையாடல் என்று எண்ணிப் பெருமானிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவர் மனைவியும் அப்போது சித்தன் செய்தியைத் தான் பெருமானுக்கு விண்ணப்பித்ததாகவும் கூறினாள்.

இருவரும் கடவுளை வாழ்த்தினர். அரசனும் ஆசிரியனுக்கு எளியவராகச் சுந்தரேசப் பெருமான் வெளி வந்ததைப் பார்த்துத் துதித்து மகிழ்ந்தான். ஆசிரியருக்குத் தக்க மரியாதைகளைச் செய்து கௌரவித்தார்.

திருவிளையாடல் அம்மானை

கொத்தலங்கற் சொக்கர் குருமனைவிக் காசைவைத்த
சித்தனங்கம் வெட்டிச் செயித்தனர்காண் அம்மானை
சித்தனங்கம் வெட்டிச் செயித்தனரே ஆமாகில்
உத்தமமா னார்கைக் குயர்வாளேது அம்மானை
உயர்வா ளொருபாக முண்டழகா அம்மானை.

28. நாகமெய்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... மாசமணர்
வில்வித்தை செய்துவிடு வன்னஞ்ச வாளரவைக்
கொல்வித்த நல்லகுணம் போற்றி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



நாகம் எய்தது

குலோத்துங்க பாண்டியனுக்குப் பின் அநந்தகுண பாண்டியன் அரசனாகி ராஜ்ய பாரம் செய்து வந்தான். அவன் சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராட்சங்களிடத்துப் பெரிதும் மதிப்பு வைத்தும் பஞ்சாட்சர மந்திரமே மந்திரங்களுள் சிறந்தது என்று எண்ணியும் தனித்தும் அன்பு வைத்து இருந்தான். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற முதுமொழிப்படி பாண்டிய நாட்டில் சைவ சமயம் விளங்கியது. குடிமக்கள் அனைவரும் சைவராக இருந்தனர்.

இதனைக் கண்ட மதுரையைச் சுற்றியுள்ள எட்டு மலைகளில் வாழும் எண்ணாயிரம் சமண அடிகள்மார் மதுரையை அழிக்க எண்ணி ஒரு பெரிய அபிசார வேள்வி செய்தனர். அதிலிருந்து ஒரு பெரிய விஷப் பாம்பு

வடிவத்துடன் ஒரு அசுரன் வெளி வந்தான். சமணர்கள் அவனை மதுரையை அழிக்க ஏவினர். அசுரனும் சீறிக் கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டு மதுரைக்குச் சமீபத்தில் வந்தான். இதனை அறிந்த பாண்டியன் சுந்தரேசப் பெருமான் திருவருள் துணை கொண்டு தம்மை நோக்கி வரும் பாம்பை அழிக்க ஒரு அஸ்திரத்தை ஏவினான். பாம்பு இரு துண்டுகளாகி அழிந்தது. இறக்கும் போது அப்பாம்பு விஷத்தைக் கக்கி இறந்தது. இதனால் நகர மக்கள் யாவரும் மயக்கம் அடைந்து செயலின்றி இருந்தனர். பாண்டியன் வருந்தி இறைவனை வேண்டினான். அவ்வேண்டுகோளுக்கிணங்கித் தம் தலையிலிருந்த பிறைச் சந்திரனிருந்து சிறிது அமுதத்தை எறிந்தார். மக்கள் யாவரும் மயக்கம் நீங்கி எழுந்தனர். அரசன் மகிழ்ந்து பெருமானைத் தோத்திரம் செய்தான்.

திருவிளையாடல் அம்மானை

வென்றிமரு வாரசனி வெள்ளிமன்று ளானமணர்
கொன்றிடவிடும் பாம்புதனை யெய்தான் அம்மானை
கொன்றிடவிடும் பாம்புதனை யெய்தான் ஆமாகில்
சென்று செவ்வா யெய்தவன் கண்டிங்களோ அம்மானை
திங்களுமெய் தான்கனலும் செங்கதிரோடு அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

29. மாயப் பசுவை வதைத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வல்லமணர்
சவரிய கோட்டாவை வரவிடுப்புக் கொல்லேற்றால்
வீரியம் சாய்த்த விறல் போற்றி.

மாயப் பசுவை வதைத்தது

மதுரை நகரிலுள்ளார் நாகம் ஒழிந்தது கண்டு மகிழ்ச்சியுடன் இருந்தனர். அரசனும் நீதி தவறாமல் அரசாண்டு வந்தான். ஆனால் மானமிழந்த சமணர்கள் பெரிதும் வெட்கமடைந்து அதனிடமிருந்து ஒரு பசு வடிவத்துடன் ஒரு அசுரனை எழுப்பி மதுரையை அழிக்க ஏவினார்கள். மிகுந்த ஆவேசத்துடன் அப்பசு மதுரையை நோக்கி வந்தது.

குடிமக்கள் பயந்தனர். அரசனும் முன்போலவே சுந்தரேசப் பெருமானை அணுகி முறையிட்டான். சிவபெருமானும், தன் முன் உள்ள ரிஷப தேவரை அழைத்து நீ போய் அந்த மாயப் பசுவை வென்று வா என்றார். ரிஷபமும் பசுவுடன் போர் புரியாமல் தன் அழகிய வடிவத்தைக் காட்டியது. அப்பசு ரிஷபத்தின் அழகில் ஈடுபட்டு வீரியத்தைச் சிந்தி விழுந்து இறந்தது. பசுமலை என்ற மலையாக மாறியது. ரிஷபமும் தன் உடலை ரிஷபமலை என்ற பெயரில் விட்டுச் சென்று இறைவனை அடைந்தது.

இராமபிரான் சீதையைத் தேடிக் கொண்டு இலங்கைக்குச் செல்லும் வழியில் ரிஷப மலையில் தங்கி, அகத்திய முனிவர் உபதேசப்படி மதுரைப் பெருமானையும் அன்னை மீனாட்சியையும் வணங்கி வழிபட்டுத் தன் யாத்திரையைத் தொடங்கினார். இராமன் இராவணனை அழித்து விட்டு அவன் தம்பி விபீஷணனை அந்நாட்டிற்கு அரசனாக்கி அயோத்திக்குத் திரும்பும் போது மதுரையில் தங்கிச் சுந்தரேசப்பெருமானை வழிபட்டு அயோத்திக்குச் சென்றார்.

Center for Shaiva Studies. Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருவிளையாடல் அம்மானை

தாயைப் போல் வான்மதுரை தன்னை அழிக்க வந்த
மாயப் பசுவை வதை செய்தான் அம்மானை
மாயப் பசுவை வதை செய்தான் ஆமாகில்
வேயொப்பார் தோளிபங்கன் மெய்க்கோவே அம்மானை
மெய்க்கோவும் பொய்க்கோவை வெல்லாதோ அம்மானை.

30. மெய்க்காட்டிட்ட படலம்

போற்றிக் கலிவெண்பா

.... தாரணியில்
வெந்திறல்வேள் மீனவன்முன் மெய்க்காட்டிட்டன் புடைய
மந்திரியைக் காத்த வளம் போற்றி.



மெய்க்காட்டியது

அநந்தகுண பாண்டியன் தன் பிள்ளையாகிய குலபூஷண பாண்டியனுக்கு முடிசூட்டி அரசனாக்கிவிட்டு இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தின்புற்றான்.

அப்போது சேதிராயன் என்னும் வேடர்கள் தலைவன் பாண்டிய அரசனுடன் போர் தொடங்குவதை அறிந்த மன்னன் தன் பொக்கிஷத்தைத் திறந்து சுந்தர சாமந்தன் என்னும் சேனைத் தலைவனிடம் 'நீ வேண்டிய செல்வத்தை எடுத்துக் கொண்டு பல சேனைகளைச் சேர்த்துக் கொண்டு நம் சைன்யத்தைப் பலப்படுத்தவும்' என்றான். ஆனால் சுந்தர சாமந்தன் ஏராளமான செல்வத்தைக் கோயில் திருப்பணிகள் செய்தான். சேனைக்காக ஓலை எழுதியனுப்புவதாகப் பாவனை செய்தான். அரசனும் ஒருநாள் திடீரென்று சேனைத் தலைவனைப் பார்த்து, 'நாளை காலை நீ வரவழைக்க எண்ணிய சேனைகளை எல்லாம் காட்ட வேண்டும்' என்று உத்தரவிட்டான்.

சுந்தரசாமந்தன் தன் தெய்வமாகிய சுந்தரேசப் பெருமானிடம் தன் நிலையைத் தெரிவித்து நாளைக் காலைக்குள் சேனையை எப்படி வரவழைத்து அரசனுக்குக் காட்டுவது என ஏங்கினான். பெருமான் இவனைக் காப்பாற்ற எண்ணி, சிவகணங்களை எல்லாம் போர் வீரர்களா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மாற்றித் தான் ஒரு குதிரை மேலேறிக் கொண்டு சேனைகளை நடத்திக் கொண்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார். சேனை வெள்ளத்தைக் கண்ட பாண்டியன் மிக்க மகிழ்ச்சியுடைந்தான். சுந்தர சாமந்தன் தன் கையில் ஒரு பிரம்பைக் கொண்டு பலவூர்களிலிருந்து இச்சேனா வீரர் வந்துள்ளனர் என்று பெயருடன் சொல்லிக் காட்டினான். தனியாக நிற்கும் போர்வீரர் யார்? என்று கேட்க அவரைத்தான் அறிய முடியாது என்ற சாமந்தன் கூறினான். அரசன் அவரைத் தன் அருகில் அழைத்துப் பல மரியாதைகளைச் செய்தான். இறைவனும் அவற்றை ஏற்றுக் கொண்டார். குதிரைகளின் 5 விதமான கதிகளை நடத்திக் காட்டினார், சிவபெருமான். அப்போது ஒரு தூதுவன் ஓடோடி வந்து வேட்டைக்குச் சென்ற சேதிராயன் புலியால் கொல்லப்பட்டான்என்று தெரிவிக்க அரசன் மகிழ்ந்து சாமந்தனைப் பார்த்து 'நீ வரவழைத்த சேனைகளை அவரவர் ஊருக்குத் திரும்பிப் போகும்படி சொல்' என்றான். சுவாமியும் வீரர்களும் மறைந்தனர். சுந்தரசாமந்தனும் இறைவனுக்கு நன்றி கூறினான்.

திருவிளையாடல் அம்மானை

வாழுமது ரேசரன்பு மந்திரிகளை மன்னவன்முன்
ஏழுலகோர் போற்ற மெய்க்காட்டிட்டனர் காண் அம்மானை
ஏழுலகோர் போற்ற மெய்க்காட்டிட்டனரே ஆமாகில்
சூழ்பகை யன்று வந்தான் தோற்றானோ அம்மானை
தோற்றானை விட்டாரோ சுற்றினார் அம்மானை.

31. உலவாக்கிழி அருளிய படலம்

போற்றிக் கலிவெண்பா

.... நொந்திரந்த
கொற்கையர்கோ வேந்தன் குறையிரப்பச் சித்தராய்ப்
பொற் குவை தந்த புகழ் போற்றி.

உலவாக்கிழி அருளியது

Center for Shaiva Studies , Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

குலபூஷண பாண்டியன் நீதி தவறாமல் நாட்டை ஆண்டு வந்தான். நாடு மிகவும் சுபிட்சமாக இருந்தது. எனவே அரசன் தன் நாட்டில் வாழும் அந்தணர்களை மதிக்கவில்லை. அவர்கள் தங்கள் கடமையான யாகங்களைச் செய்யவில்லை. அதனால் மழைவளம் குறைந்தது. மக்கள் பஞ்சத்தால் வாடினர். சில அந்தணர்கள் நாட்டை விட்டு வெளியேறி வேற்றூருக்குச் சென்று வாழத் தொடங்கினர்.

இந்நிலையில் அரசன் மிகவும் மனம் நொந்து சோமசுந்தரக் கடவுளிடம் சென்று தன் குறையை முறையிட்டான். பெருமானும் அவன் கனவில் தோன்றி, 'அரசனே, நீ நல்லமுறையில் தான் அரசாட்சி புரிகிறாய்.

அதில் ஒன்றும் குறைவில்லை. ஆயினும் நீ அந்தணர்களை வெறுத்தாய். யாகங்கள் நடக்கவில்லை. அதனால் மழைவளம் குறைந்து நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. இனி நீ அவர்களை நன்கு மதித்து அரசாள்வாய். அதுவரை உன் குடிமக்கள் நன்கு வாழும் பொருட்டு ஒருஉலவாக் கிழியைத் தருகிறோம். அந்த உலவாக் கிழியிலிருந்து எத்தனை பொன் எடுத்தாலும் குறையாது பெருகிக் கொண்டிருக்கும்' என்று சொல்லி அதனை அரசனிடம் கொடுத்தார்.

பாண்டிய மன்னன் அதனைப் பெற்று அதனையே இறைவனாகப் பாவித்துத் தன் சிம்மாசனத்தில் அக்கிழியை வைத்து அலங்காரம் தூபதீபம் முதலிய உபசாரங்களைச் செய்து வேண்டிய பொன்னை எடுத்து நாட்டிலுள்ள அந்தணர்களுக்கு வழங்கினான். கூடலில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தான். பாண்டியநாடு முன்பிருந்த நிலையைப் பெற்று மக்கள் நன்கு வாழ்ந்தார்கள். வெளியில் சென்றவர்கள்மீண்டும் நாட்டிற்குள் வந்து சுகமாக வாழ்ந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

அலரா யிரந்தார் அணி மதுரைச் சொக்கர் தென்னற்கு
உலவாக் கிழிப் பொன் உதவினார் அம்மானை
உலவாக் கிழிப் பொன் உதவினரே ஆமாகில்
தலையால் இரந்தார்க்குத் தனமேதோ அம்மானை
தனமொருபக் கத்துவந்து சார்ந்தமுதல் அம்மானை.

32. வளையல் விற்ற படலம்

போற்றிக் கலிவெண்பா

.... காற்குவளை
மையேற்ற வாட்கண் வணிகமட வார்க்கு வளை
கையேற்றி மாலேற்றுங் கை போற்றி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வளையல் விற்றது

முன்னொரு சமயம் தாருகாவனத்து முனிவர்களின் மனைவியர் கற்பை அளந்து காட்டச் சிவபெருமான் திருவுளம் கொண்டார். பிட்சாடன வடிவத்துடன் பெருமான் தாருகா வனத்திற்கு எழுந்தருளி வந்தார். கையில் உடுக்கையுடன் கால்களில் சிலம்புகளையும் அணிந்து வந்தார். பிச்சையிடுவதற்கு வெளியில் வந்த பெண்கள் அவரைக் கண்டு மையல் கொண்டு மயங்கி நின்றனர். இந்நிலையைக் கண்ட ரிஷிகள் மதுரை மாநகரில் வணிகக் குலப் பெண்களாகப் பிறக்கும்படி அவர்களைச் சபித்தனர். அப்பெண்கள் தங்களுக்கு எப்போது இச்சாபம் தீரும் என்று கேட்க அவர்கள், மதுரைச் சோமசுந்தரக் கடவுள் உங்கள் முன் வந்து கைகளைத் தொட்டு வளையல் இடுவார். அப்போது இச்சாபம் நீங்கும் என்றனர்.

ரிஷிபத்தினிகள் அனைவரும் மதுரையில் செட்டிப் பெண்களாகப் பிறந்து வளர்ந்தார்கள். சிவபெருமானும் அவர்கள் சாபம் நீங்க ஒரு வளையல் வியாபாரியாக வணிகர் தெருவில் வந்து வளையல்களின் பெருமையை விளக்கி அவர்கள் கைகளைத் தொட்டு வளையல்கள் இட்டு மறைந்தார். பரமன் கைபட்டதால் அவ்வணிகப் பெண்கள் அனைவரும் கர்ப்பமுற்று உரிய காலத்தில் நன்மக்கள் பலரைப் பெற்றுப் பின் சிவலோகம் சென்றார்கள்.

திருவிளையாடல் அம்மானை

நீடுகயற் கண்ணியங்கி னின்ற சொக்க ரன்பு வைத்துத்
தேடு மவரவர்தம் சிந்தையுற்றார் அம்மானை
தேடு மவரவர்தம் சிந்தையுற்றார் ஆமாகில்
கூடுவிட்டுக் கூடு சென்று கொள்வாரோ அம்மானை
கொள்ளவளை விற்றுமறு கூடு சென்றார் அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

33. அட்டமா சித்தி உபதேசித்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... மைதீரப்
பட்டமங்கைப் பாறையுரு நீத்தாறு பைந்தொடியார்க்கு
அட்டசித்தி யீந்த அருள் போற்றி.

அட்டமா சித்தி உபதேசித்தது

ஒரு சமயம் பரமேசுவரன் கயிலையில் ஒரு ஆலமர நிழல் பார்வதி தேவியுடன் அமர்ந்திருந்தார். பரமன் முனிவர்களுக்கும் சிவகணங்களுக்கும் சில அறவுரைகளை உபதேசித்துக் கொண்டிருந்தார். அப்போது சரவணப் பொய்கையில் முருகப்பெருமானுக்குப் பால் ஊட்டி வளர்த்த இயக்கிமார் அறுவரும் சிவபெருமானை வணங்கி அட்டமா சித்திகளை உபதேசிக்குமாறு வேண்டினர். பரமன் அப்பெண்களைப் பார்த்து, 'நீங்கள் பார்வதி அம்மையாரைச் சிந்தித்தால் அவை சித்திக்கும்' என்று அட்டசித்திகளையும் உபதேசித்தார். அவர்கள் ஊழ்வினை காரணத்தால் அவற்றை மறந்து விட்டனர். சிவபெருமான் கோபம் கொண்டு அவர்களைப் பட்டமங்கையில் ஆயிரம் வருடம் பாறையாய் இருக்கும்படி சபித்தார். அவர்கள் இச்சாபம் எப்போது தீரும் என்று கேட்டதற்கு ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு தான் அவர்களுக்கு அருள்வதாகக் கூறினார். காலம் கழிந்தது. சோமசுந்தரக் கடவுள் ஓர் ஆசாரியனாக எழுந்தருளிப் பட்டமங்கையிலுள்ள கற்களைப் பார்த்தார். சாபம்நீங்கி அனைவரும்

பழைய பெண் வடிவங்களைப் பெற்றனர். சிவபெருமான் அவர்களுக்கு அட்டமா சித்திகளை உபதேசித்தார். அவர்களும் பழைய நிலைபெற்றுக் கயிலையை அடைந்தார்கள்.

திருவிளையாடல் அம்மானை

திருத்து மதுரைக்கடவுள் செவ்வேட்கு மென் முலைப்பால்
அருத்து மடவார்க் களித்தார் அட்டசித்தி அம்மானை
அருத்து மடவார்க் களித்தார் அட்டசித்தி ஆமாகில்
கருத்தில ரென்றேன் செய்தார் கற்சாபம் அம்மனை
கற்சாபம் கைமேலாங் கர்த்தர்காண் அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

34. விடை இலச்சினை இட்ட படலம்

போற்றிக் கலிவெண்பா

.... கட்டவிழார்த்
தாராற் கறையிரவில் தாழ்திறந்து காப்படைத்துச்
சீரார் விடைபொறித்த சீர் போற்றி.

விடை இலச்சினை இட்டது

தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தில் காடு வெட்டிய சோழன், சிவபக்தியில் சிறந்து விளங்கினான். மதுரையில் சுந்தரேசப் பெருமான் இயற்றியருளிய திருவிளையாடல்களைப் பற்றிக் கேள்விப்பட்டான். மதுரைக்குச் சென்று சுந்தரேசப் பெருமானையும், மீனாட்சி அம்மையாரையும் தரிசிக்க எண்ணினான். பாண்டிய அரசன் தனக்குப் பகைவனானபடியால் அங்கு செல்ல இயலாதவனாய் வருந்தினான். ஒரு நள்ளிரவு பரமன் அவன் கனவில் தோன்றி, 'ஐயனே நீ உன் உருவத்தை மாற்றிக் கொண்டு மதுரைக்கு வா' என்று அருள் புரிந்தார். அது போலவே காடு வெட்டிய சோழன் வேறு உருவத்துடன் நள்ளிரவில் தனியாக மதுரைக்கு வந்தான். ஆனால் வைகை நதி வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்தது. அதை எப்படித் தாண்டுவது என்று எண்ணி மனம் வருந்தினான். உடனே சுந்தரேசப் பெருமான் ஒரு சித்த வடிவத்தைத் தாங்கிக் கொண்டு அவன் முன்வந்து, வெள்ளத்தை வற்றச் செய்து, அவனை அழைத்துக் கொண்டு போய்ப் பொற்றாமரையில் நீராடச் செய்து பிறகு சித்தி விநாயகர், மீனாட்சியம்மையார், சுந்தரேசப் பெருமான் முதலியோர்களைத் தரிசிக்கச் செய்து வடக்கு வாசல் வழியாய் அவனைச் செல்லுமாறு பணித்து வாயிற்கதவில் ரிஷப முத்திரையை இட்டுமறைந்தார்.

மறுநாள் காலையில் கோயில் வாசல்களிலெல்லாம் மீன்முத்திரை முன்னாள் இரவு இட்டு நீங்கியது போலக் காட்சியளித்தன. ஆனால் வடக்குவாசல் மட்டும் ரிஷப முத்திரையைக் கண்ட காவலாளன் அரசனுக்கு விண்ணப்பம் செய்தான். அரசன் கனவில் பெருமான் தோன்றி அவனுக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

நிகழ்ந்ததைச் சொன்னார். அரசன் ஐயம் நீங்கியது. மகிழ்ச்சியடைந்து இத்திருவிளையாடலை அனைவர்க்கும் தெரிவித்து விட்டுத் தன் மகன் இராஜேந்திர பாண்டியனுக்கு முடிசூட்டிச் சிவபெருமான் திருவடி நீழலையடைந்தான்.

திருவிளையாடல் அம்மானை

புவிபுகழ் சொக்கேசரெதிர் போயழைத்துச் செம்பியனை
நவமதிலு ளாக்கியருள் நல்கிவிட்டார் அம்மானை
நவமதிலு ளாக்கியருள் நல்கிவிட்டார் ஆமாகில்
கவினிடப முத்திரையேன் காப்பினிட்டார் அம்மானை
காப்பருவ மீனமுறக் காண்பாரோ அம்மானை.

35. தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... ஆரானை
மூண்டுவரும் தென்னன் முனைப்போர்க்குத் தண்ணீர் தந்து
ஆண்ட கருணை அறம் போற்றி.


தண்ணீர்ப் பந்தல் வைத்தது

இராசேந்திர பாண்டியன் அரசாட்சி நன்கு நடைபெற்றது. காடு வெட்டிய சோழன் பரமன் அருளால் வெளிப்படையாகவே அடிக்கடி மதுரை சென்று சுந்தரேசப் பெருமானையும் மீனாட்சியம்மையாரையும் தரிசித்து வந்தான். பாண்டிய மன்னனுக்குக் காடு வெட்டிய சோழன் தன் மகளைக் கலியாணம் செய்து வைத்தால் பகை நீங்கி விடும் என்று எண்ணினான். இச்செய்தியைப் பாண்டியனுக்குத் தெரிவித்தான். அவனும் இசைந்தான். ஆனால் இராஜேந்திரன் தம்பி இராஜசிங்கன் அண்ணனுக்குப் பேசிய மணப்பெண்ணைத் தான் மணம் செய்து கொண்டு சோழனுடன் வாழ்ந்து வந்தான். நாட்கள் சில கழிந்தன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருநாள் காடு வெட்டிய சோழன் தன் மருமகனுடன் மதுரையின் மீது படையெடுத்தான். இருபுறச் சைன்யங்களும் கடுமையாகப் போர் புரிந்தன. உச்சி நேரம் வந்தது. தண்ணீர்த் தாகத்தால் சேனைகள் களைத்துப் போயின. பரமேசுவரன் தன் பக்தனான இராஜேந்திரன் சேனையின் மத்தியில் ஒரு தண்ணீர்ப் பந்தலுடன் வந்து சேர்ந்தார். பாண்டியன் சேனைகட்கு எல்லாம் தண்ணீர் கொடுத்து அவர்கள் நீர் வேட்கையைத் தணிப்பித்தார். அவர்கள் களைத்திருந்த சோழன் படையுடன் போராடி வெற்றி பெற்றனர்.

உடனே பாண்டியன் சேனாவீரர் சோழ அரசனையும் இராஜசிங்கனையம் சிறைப்படுத்தி இராஜேந்திரன் அவைக்கு அழைத்து வந்தனர். அரசன் அவ்விருவரையும் தன் குல தெய்வமாகிய சுந்தரேசப் பெருமான் திருமுன் கொண்டு வந்து நிறுத்திப் பெருமானை வேண்டினான். இறைவனும் 'அறவன் நீயல்லயோ உன்னகத்தினுக்கு இசைந்தது செய்கென்றார்' இராஜேந்திரன் அவர்களுக்குச் சில மரியாதைகள் செய்து உபசரித்து அனுப்பினான். தம்பிக்கும் சிலமரியாதைகள்செய்து முடித்துத் தன் நாட்டை நீதி தவறாமல் ஆண்டு வந்தான்.

திருவிளையாடல் அம்மானை

சொன்னமதில் சூழ்மதுரைச் சொக்கர் தண்ணீர்ப் பந்தர் வைத்துத்
தென்னவன்சே னைத்தாகந் தீர்த்தனர்காண் அம்மானை
தென்னவன்சே னைத்தாகந் தீர்த்தனர்காண் ஆமாகில்
பொன்னருளேன் செய்யார்புலிக் கொடியாற்கு அம்மானை
புலியாங் கொடியவனைப் போற்றுவார் அம்மானை.

36. இரசவாதம் செய்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... ஈண்டயன்மால்
வன்மனத்துக்கெட்டான் வடிவெடுத்துப் பொன்னனையாள்
நன்மனையிற் சென்ற நடைபோற்றி.

பாண்டி நாட்டிலுள்ள 14 பாடல் பெற்ற தலங்களுக்குள்ளே ஒன்று திருப்பூவணம். இங்கு பொன்னனையாள் என்ற ஒருஉருத்திர கணிகை - பரமன் கோயில் நாட்டியம் செய்யும் தொழிலை உடையவள் - வாழ்ந்து வந்தாள். தினமும் சூரியன் உதயமாகுமுன் எழுந்து நீராடிக் கோயிலுக்குச் சென்று ஆடல், பாடல் நிகழ்த்துவாள். தினமும் சிவனடியார்களுக்கு அன்னமளித்து அவர்கள் உண்டபின் தான் உண்பாள். இவளது அடியார் பக்தியை உலகிற்கு அறிவிக்கும் பொருட்டுப் பூவண நாதர் திருவுளம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata
கொண்டார். ஆண்டவன் அவள் உள்ளத்தில் ஒரு விருப்பத்தை உண்டாக்கினார். அதாவது கோயிலுக்கு ஒரு சோமாஸ்கந்த மூர்த்தியைப் பொன்னால் செய்து பிரதிஷ்டை செய்ய உண்டான எண்ணம். தினமும் தனக்குக் கிடைக்கும் பொருள் அத்தனையும் அடியார்பால் செலவாய்விடுகிறது. பணமே மிச்சப்படவில்லை. மூர்த்தியைத் தான் நினைத்தபடி எவ்வாறு செய்வது என்று ஏங்கினாள். ஆனாலும் சோமாஸ்கந்த மூர்த்தியை மெழுகால் செய்து வைத்தாள். அதனைப் பூர்த்தி செய்ய பொன் இல்லை.

சிவபெருமான் ஒரு சித்த வடிவம் தாங்கி அவள் வீட்டிற்கு வந்தார். வந்தவர் வீட்டினுள் சென்று அவள் அளிக்கும் உணவை உண்ணாமல் எதிர் வீட்டில் அமர்ந்திருந்தார். இதனைப்பார்த்த தோழி தன் எஜமானியான பொன்னனையாளிடம் தெரிவித்தாள். அவள் வெளியே வந்து சித்தரை வரவேற்றாள். அவள் முகம் வாடியிருக்கும் காரணத்தைக் கேட்ட சித்தரிடம் தன் எண்ணத்தைக் கூறி வருந்தினாள். உடனே சிவபெருமான் அவளை நோக்கி, 'பெண்ணே உன் வீட்டிலுள்ள செம்பு, பித்தளை, ஈயம், வெள்ளிப் பாத்திரங்கள் அத்தனையும் கொண்டு வா. நான் அவற்றைப் புடம்போட்டுப் பொன்னாகச் செய்து தருகிறேன். அந்தத் தங்கத்தினால் நீ நினைத்தபடி சோமாஸ்கந்த மூர்த்தியை வார்ப்பித்துக் கோயிலில் பிரதிஷ்டை செய்' என்றார். அதன்படியே செய்ய, சித்தரும் திருநீறு தூவி புடம் போட மறுநாள் காலை அனைத்தும் பொன்னாக மாறியது. பொன்னனையாள் தன் எண்ணப்படி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம், திருவிழா முதலியன செய்து சிலநாள் கழித்து இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தாள். (பொன்னால் செய்த மூர்த்தியைக் கண்ட அவள் அதன் அழகில் ஈடுபட்டு, கன்னத்தைத் தடவி முத்தம் தந்தாள். அந்த நகக்குறியை இன்றும் பெருமான் கன்னத்தில் காணலாம்).

இரசவாதம் செய்தது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஈசர் சொக்கர் பூவணத்தி லேயிருந்த பொன்னனையார்
மாசிலர்க்கன் போடுங்காண் வாதத்தார் அம்மானை
மாசிலர்க்கன் போடுங்காண் வாதத்தார் ஆமாகில்
பேசுவதேன் ஐயமறப் பித்தரென்றே அம்மானை
பித்தரென்பார் ஐயரென்றும் பேசுவார் அம்மானை.

37. சோழனை மடுவில் வீட்டிய படலம்

போற்றிக் கலிவெண்பா

.................................தென்னனெதிர்
ஆயிரம் வம்பரிக்கோர் ஆடவனை யோடையினில்
வீய வலம்திரிந்த வேல் போற்றி.

சோழனை மடுவில் வீட்டியது

இராசேந்திர பாண்டியனுக்குப் பின் பல பாண்டியர் ஆண்டனர். சுந்தரேச பாத சேகரன் ஆண்டபோது படைபலத்தை மிகவும் குறைத்துக் கொண்டு எஞ்சிய பொருளைச் சிவாலய திருப்பணியில் செலவு செய்தான். இதனை அறிந்த ஆயிரம்பரிக்கொருவன் என்ற சோழன் பாண்டிநாட்டின் மீது படையெடுத்து வந்தான். இரு சேனைகளும் போர் செய்தன. பாண்டிய மன்னன் தன் குலதெய்வமாகிய சுந்தரேசப்பெருமானை வேண்டிக் கொண்டான். அவரும் ஒரு போர்வீரனைப் போல வேடம் தாங்கிப் பாண்டியன் சைன்யத்தில் தோன்றினார். முடிவில் ஆயிரம்பரிக்கொருவன் தோற்று ஓடினான். அவன் பின் பாண்டியனும் ஓடினான். அவன் திரும்பிப் பார்த்தபோது போர்வீரனைக் காணவில்லை. மீண்டும் வந்து போர் புரிந்தான். பாண்டியன் திரும்பி ஓடியபோது ஒரு மடுவில் வீழ்ந்தான். அவனைத் துரத்திய சோழனும் மடுவில் வீழ்ந்தான். சோழன் இறந்தான். பாண்டியன் வெளியேறினான். சிவகைங்கர்யங்கள் பல செய்து இன்பமாய் வாழ்ந்து வந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

ஊழ்வினைதீர்த் தன்பர் உயிர்க்குயிராய் நின்றோங்கி
வாழ்கடவு ளார்தென் மதுரேசர் அம்மானை
வாழ்கடவு ளார்தென் மதுரேசர் ஆமாகில்
கீழ்மடுவில் வீழ்த்ததென்ன கிள்ளிதனை அம்மானை
கிள்ளிவலி கண்டுபொறுக் கின்றதரிது அம்மானை.

38. உலவாக்கோட்டை அருளிய படலம்

போற்றிக் கலிவெண்பா

.... தூயவளம்
ஒல்கும் அடியார்க்கு உலவாத் தனிக்கோட்டை
நல்கும் கருணை நலம் போற்றி.

உலவாக்கோட்டை அருளியது

மதுரையில் வாய்மை குன்றா வேளாளர் குலத்தில் அடியார்க்கு நல்லான் தன் மனைவி தருமசீலையுடன் சிவபக்தியில் சிறந்து விளங்கினான். அடியார்களுக்குத் தினமும் மாகேசுர பூசை செய்து வந்தான். அவனது பக்தியின் உண்மை நிலையை உலகிற்கு உணர்த்த விரும்பிய ஈசன் வறுமையை வழங்கினான். செல்வம் குறைந்த போதிலும் மனம் சுருங்காமல் கடன் வாங்கியும் மாகேசுர பூசையைச் செய்து வந்தான். கடனும் கிடைக்காமல் போக இறைவன் திருவுளம் பற்றினார்.

அடியார்க்கு நல்லான் தன் மனைவியுடன் கோயிலுக்குச் சென்று பெருமானை வேண்டிப் பின் உயிர் துறப்பது என்ற முடிவுடன் திருக்கோயிலுக்குச் சென்றான். அங்கு இறைவன் அசரீரியாக எழுந்தருளி 'அஞ்சாதே வேளாண் தலைவ! உன் வீட்டில் ஒரு உலவாக் கோட்டையை உண்டாக்கினோம். அதில் எடுக்குந்தோறும் குறையாத நெல் கிடைக்கும்' என்றருளினார். இருவரும் கடவுளை வணங்கி உத்தரவு பெற்று வீடு திரும்பினர். ஆண்டவன் கூறியபடி வீட்டில் ஒரு உலவாக் கோட்டை இருந்தது. அந்த நெல் கோட்டையைப் பூசித்து வேண்டிய அளவு தினமும் எடுத்துத் தம் திருத்தொண்டாகிய அடியார்க்கு மாகேசுர பூசையை விடாது செய்து வந்து கடைசியில் இருவரும் சிவலோகம் அடைந்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அன்னமளியென்று நல்லார்க்கு அன்றுலவாக் கோட்டை நெல்லைத்
துன்னு பயிரிட்டார் போல் சொக்கர் தந்தார் அம்மானை
துன்னு பயிரிட்டார் போல் சொக்கர் தந்தார் ஆமாகில்
செந்நெல் இட்டால் வேண்டாமோ செய்யாளும் அம்மானை
செய்யாலே வல்லவர் தாம் தேடவல்லார் அம்மானை.

39. மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... நல்வணிகன்
மாமனென வந்து வழக்குரைத்து ஞாதியர்பால்
சேமநிதி வாங்கியருள் சீர் போற்றி.

மாமனாக வந்து வழக்குரையாடியது

மதுரையில் தனபதி என்னும் ஒரு வணிகன் இருந்தான். அவன் மனைவி சுசீலை என்பாள். இவர்களுக்குக் குழந்தையில்லை. எனவே, வணிகன் தன் தங்கை வயிற்றில் பிறந்த பிள்ளையைச் சுவீகாரம் செய்து கொண்டு வாழ்ந்தனன். ஆயினும் தன் மனைவிபால் வைத்த ஆசையால் தனபதி தன் தங்கையுடன் அடிக்கடி போர் செய்தான். அவள் மனம் நொந்து தன் அண்ணனைப் பார்த்து, 'பிள்ளையில்லாப் பாவி! என் மகனால் அன்றோ நீ நற்கதி அடைவாய். உனக்கேன் இந்த செருக்கு?' என்றாள். மனமுடைந்த வணிகன் தன் சொத்துக்களை யெல்லாம் தன் மருமகனுக்கு எழுதி வைத்துவிட்டுக் காட்டிற்குத் தன் மனைவியுடன் சென்றுவிட்டான்.

அவனது பங்காளிகள், பையன் சிறுவனாதலால் சொத்துக்களை எல்லாம் அபகரித்துக் கொண்டார்கள். பையன் மீதிருந்த நகைகளையும் கவர்ந்து கொண்டனர். அவன் தங்கை தனியாக இருந்ததாலும் பையன் மிகச்சிறுவன் ஆதலாலும் தன் பங்காளிகளை எதிர்த்து வழக்காட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வசதியில்லை. ஆதலால் அவள் கோயிலுக்குச் சென்று சுந்தரேசப் பெருமானை வணங்கி அவரிடம் தன் குறையை முறையிட்டாள். அவரும் கருணை கூர்ந்து, 'ஏ பெண்ணே! நாளை காலை பங்காளிகளை அரச சபைக்கு அழைத்து வா. நாம் வந்து உன் வழக்கைத் தீர்க்கிறோம்' என்று அசரீரியாக மொழிந்தார்.

அதுபோலவே காலையில் அரச சபை கூடியது. பங்காளிகளும் சபைக்கு வந்தனர். அப்போது சுந்தரேசப் பெருமான் தனபதி போல் வேடங்கொண்டு அழுது கொண்டே சபைக்கு வந்த தங்கையையும் தனயனையும் தழுவிக் கொண்டு 'நகைகளைக் காணோமே' என்று புலம்பி வருந்தினான். சபையார் இரு தரப்பினரையும் விசாரித்துச் சீர்தூக்கி தனபதி வழக்கு சரி என்று தீர்ப்புக் கூறினர். பங்காளிகள் இவர் தனபதி அல்லர் என்றனர். பெருமான் நகைத்து ஒவ்வொருவரையும் பார்த்து நீ இன்னான், தந்தை பெயர்,தாயார் பெயர், உனக்குச் சொத்துக்கள் இவ்வளவு என்று விவரங்களைச் சரியாகக் கூறினார். பங்காளிகள் வழக்குத் தோல்வியடைந்தது. இங்கிருந்தால் அரசர் நம்மைத் தண்டிப்பார் என்று எண்ணி நழுவத் தொடங்கினர். உடனே அரசன் ஏவலாளர்கள் அவர்களை வெளியே விடாமல் தடுத்தான். அபகரித்த சொத்துக்களை அரசன் பெற்று தனபதி வளர்ப்பு மகனுக்குச் சொந்தம் என்று தீர்ப்புக் கூற பரமன் மறைந்தார். அனைவரும் ஆச்சரியமடைந்தனர். அவளும் தன் மகனுடன் கோயிலுக்குச் சென்று பெருமானை வணங்கிச் சுகமாக வாழ்ந்தாள். சுந்தரேச பாதசேகர பாண்டியன் அச்சிறுவனுக்குப் பல மரியாதைகளைச் செய்தான். திருக்கோயிலையும் புதுப்பித்தான்.

திருவிளையாடல் அம்மானை

சோமனணி வோர் மதுரைச் சொக்கர் வணிகக் குழந்தை
மாமனென வந்து வழக்குரைத்தார் அம்மானை
மாமனென வந்து வழக்குரைத்தார் ஆமாகில்
ஆமகவை யேன்கறிகொண்டாரறிவோடு அம்மானை
அறிவுமயக் கந்தனைப் பெற்றார் செய்யார் அம்மானை.

40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்

போற்றிக் கலிவெண்பா

.... கோமகனை
ஆட்டிய வன்பழிதீர்த் தாண்டச் சிவலோகம்
காட்டி யருள் கருணைக் கண்போற்றி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வரகுணனுக்குச் சிவலோகம் காட்டியது

சுந்தரேச பாதசேகர பாண்டியனுக்குப் பின் வரகுண பாண்டியன் நாட்டை அரசாண்டு வந்தான். அரசன் வழக்கம் போல் ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாடச்சென்று நாட்டிற்குத் திரும்பியதுபோது வழியில் படுத்திருந்த ஓர் அந்தணனை இவன் ஏறி வந்த குதிரை மிதித்து அவன் இறந்தான். பாவத்திற்குப் பல பிராயச்சித்தங்கள் செய்தான். பழிநீங்கவில்லை. வேறொரு நாள் வரகுணன் ஒரு சோழன் மீது படையெடுத்து அவனை முதுகு காட்டி ஓடச்செய்தான். அவன் திருவிடைமருதூர்க் கோயில் வழியாக ஓடினான். அவனைத் துரத்தி வந்த வரகுணனும் கோயிலுக்குள்ளே சென்றான். அவனைப் பிடித்திருந்த பிரம்மகத்தி கோயில் கீழை வாசலில் நின்று விட்டது. வரகுணனை மேற்கு வழியாகப் போகும்படி ஆண்டவன் அருள் புரிந்தார். அவனும் மதுரையை அடைந்து பல தான தருமங்களைச் செய்து வாழ்ந்தான்.

சிவபக்தியில் சிறந்த வரகுணன் ஒரு நாள் மீனாட்சி சுந்தரேசப் பெருமானிடம் தான் கயிலையைக் காணவேண்டும் என்று தெரிவித்தான். ஆண்டவன் நந்தி தேவரை அழைத்துப் பாண்டியனுக்குச் சிவலோகத்தைக் காண்பிக்கப் பணித்தார். நந்தி தேவரும் சிவபெருமான் ஆணைப்படி அநேக உலகங்களை காட்டிக் கடைசியாகக் கயிலாய மலையை அணுகினார். முன்னர் வழியில் உள்ள பிரமலோகம், விஷ்ணுலோகம், உருத்திரலோகம் முதலியவற்றைக் காட்டிக் கொண்டே வந்து கடைசியில் சிவலோகத்தில் பார்வதி பரமேசுவரர் முன் விடுத்தார். வரகுணன் மிக மகிழ்ச்சியடைந்து ஆண்டவனைப் பலவாறு தோத்திரம் செய்தான். உடனே சிவலோகம் மறைந்து பழையபடி மதுரையாகவே மாறியது. அரசன் மிகமிக மகிழ்ச்சி அடைந்தான். அதுமுதல் மதுரைப் பதியும் 'பூலோக சிவலோகம்' என வழங்கப் பெற்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அரியமரர் சூழ்மதுரை யங்கே வரகுணனுக்கு
அரிய சிவலோகங் காட்டண்ணல் சொக்கன் அம்மானை
அரிய சிவலோகங் காட்டண்ணல் சொக்கன் ஆமாகில்
அரியயன்மே லானபொருள் ஆகுமே அம்மானை
ஆகுமேல் அப்பொருட்டு மப்பன்காண் அம்மானை.

41. விறகு விற்ற படலம்

போற்றிக் கலிவெண்பா

.... பாட்டிசைக்குப்
பாண னடிமையெனப் பாடி விறகெடுத்த
நாணமிலாத நடை போற்றி.

விறகு விற்றது

வரகுண பாண்டியன் ஆட்சியில் வடநாட்டிலிருந்து யாழ் வாசிப்பதில் வல்லவனான ஏமநாதன் என்ற ஒரு சங்கீதப் புலவன் மதுரைக்கு வந்து அரசவையில் அரசன் முன் யாழ் வாசித்துத் தன் திறமையைக் காட்டினான். அரசனும் மிக மகிழ்ந்து பல சன்மானங்களை அவனுக்கு நல்கினான். ஏமநாதன் தன் மாணவர்கள் மதுரை நகர் சுற்றிலும் யாழ் வாசித்து மிகச் செருக்குற்றார்கள். இதனை அறிந்த வரகுணன் தன் ஆஸ்தான வித்துவானான பாணபத்திரனை வரவழைத்து 'ஏமநாதனுடன் யாழ் வாசித்து அவனைத் தோல்வியடையச் செய்வாயா' என்றான். அதற்குப் பாணபத்திரன் அரசனைப் பார்த்து 'அரசே சுந்தரேசப் பெருமான் திருவருளாலும் தங்கள் தயவாலும் நான் யாழ் வாசித்து அவனை வெல்ல முயற்சி செய்யக்கூடும்' என்று அடக்கமாகப் பதில் சொன்னான். மன்னனும் 'அவ்வாறே நாளை பாடுவாயாக' என்று விடையளித்து அனுப்பினான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அன்றிரவு மதுரை மாநகர் முழுவதிலும் ஏமநாதனின் மாணவர்கள் யாழ் வாசித்துத் திரிந்தார்கள். சங்கீதம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அதனைக் கண்டு பாணபத்திரன் 'மாணவர்கள் வித்தையே இவ்வாறு இருக்கிறதே? ஏமநாதன் வித்தை எவ்வாறிருக்குமோ! அவனுடன் பாடி அவனை வெல்வது எப்படி? என ஏங்கிச் சுந்தரேசப் பெருமான் சந்நிதிக்குச் சென்று பெருமானை வணங்கி அருள் செய்யுமாறு வேண்டி வீடு திரும்பினான். பெருமானும் அருள் புரியத் திருவுளம் கொண்டார்.

அழுக்கடைந்த ஒரு துணியைத் தரித்துக் கொண்டு, தலையில் ஒரு விறகுச் சுமையைத் தாங்கி, இளைத்து வற்றிய சரீரத்துடன், தோளில் ஒரு பழைய உபயோகமில்லாத யாழைத் தொங்க விட்டுக் கொண்டு தெருக்களின் வழியாக 'விறகு வாங்கலையோ விறகு' என்று கூவிக் கொண்டே பல தெருக்களைக் கடந்து ஏமநாதன் தங்கியிருந்த வீட்டின் திண்ணையில் விறகுச் சுமையை இறக்கி கையிலிருந்த யாழைச் சுருதி கூட்டிப் பாடத் தொடங்கினார். இதனைச் செவியுற்ற ஏமநாதன் வெளியே வந்து விறகாளைப் பார்த்து அவன் யாழ் வல்லமையைப் பார்த்து அவன் யார் என்று கேட்டான். அதற்கு விறகாள் 'ஐயா நான் பாணபத்திரன் அடிமை. அவனிடம் பயிலும் மாணவர்கள் பலர். அவர்களுள் ஒருவன் யான். நான் மிகவும் வயோதிகனானதால் நீ இசைக்கு லாயக்கு இல்லை என்று என்னைத் தள்ளிவிட்டான். ஆதலால் நான் என் வயிறு வளர்க்க விறகாளானேன்' என்றார்.

ஏமநாதன் உடனே அவரைப் பார்த்து மீண்டும் ஒருமுறை முன்பாடிய பாடலை இசைக்க வேண்டினான். விறகாளும் அவன் விருப்பப்படித் தன் பழைய யாழை முடுக்கிச் சுருதி கூட்டி மீண்டும் ஒருமுறை சாஸ்திர சம்மதமாகப் பாடினார். அந்த இசை நிலவுலகம் எங்கும் நிறைந்தது. அவ்விசையில் மயங்கிய பட்சிகளும், மிருகங்களும் தங்கள் பகைமையை மறந்து ஒன்றின்மீது ஒன்று வீழ்ந்து மயங்கின. காற்றும் அசையவில்லை. ஓடும் நதிகளும் நின்று விட்டன. எங்கும் இசை மயமாகி விட்டது.இவ்விசை தேலோகத்தையும் எட்டி அவர்களையும் தன் வசமாக்கி விட்டது. ஏமநாதன் அவனை மிகவும் பாராட்டினான். விறகாளாக வந்த பெருமான் விறகுச் சுமையோடு மறைந்தார். ஏமநாதனும் தள்ளப்பட்டவன் சங்கீதம் இப்படியிருக்குமானால் பாணபத்திரன் இசை எப்படி இருக்குமோ? என வியந்து பயந்து ஊரை விட்டு அவ்விரவிலேயே ஓடிவிட்டான். அவன் மாணவர்களும் தங்கள் சன்மானப் பொருள்களையும் இசைக் கருவிகளையும் விட்டுவிட்டு ஓடினர்.

அன்றிரவு பெருமான் பாணபத்திரன் கனவில் தோன்றி 'அன்பனே இன்று பத்திரன் அடிமை என்று பாடி வென்று பத்திரம் வாங்கி உன் வேண்டுகோளை நிறைவேற்றினேன்' என்றருளினார். பாணபத்திரர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விழித்து எழுந்து கோயிலுக்குப் போய் தான் செய்த அபசாரத்தை மன்னித்தருளும்படி வேண்டினார். இறைவனும் அவருக்கு அருள்புரிந்தார். இச்செய்தியை அறிந்த வரகுண பாண்டியனும் பாணபத்திரனுக்குத் தக்கபடி சன்மானங்கள் செய்து அவரைப் பெரிதும் பாராட்டினான்.

திருவிளையாடல் அம்மானை

திசையோர் பணிந்தேத்தும் தென்மதுரைச் சொக்கலிங்கர்
விசையாய் நடந்து விறகு விற்றார் அம்மானை
விசையாய் நடந்து விறகு விற்றார் ஆமாகில்
இசையார் விறகுவிலைக் கேலுமோ அம்மானை
ஏலுமதனை யெரிக்க வென்றால் அம்மானை.

42. திருமுகம் கொடுத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... பாணனுக்குச்
செந்தமிழாற் றீட்டும் திருமுகத்தைச் சேரனிடைத்
தந்தருளிச் செய்த தனம் போற்றி.



திருமுகம் கொடுத்தது

வரகுண பாண்டியன் சொன்னபடி பாணபத்திரன் வேறு தொழில் செய்யாமல் சோமசுந்தரக் கடவுளைக் குறித்துத் தினமும் இசையால் துதித்து வந்ததால் வேறு வகையால் பொருள் கிடைக்கவில்லை. வறுமை வந்தடைந்தது. தன் பக்தனுக்கு உதவி செய்யத் திருவுள்ளம் படைத்த ஆண்டவன் தினமும் அரசன் பொக்கிஷத்திலிருந்து பல பொருள்களையும்

செல்வத்தையும் கவர்ந்து கொடுத்து வந்தார். இப்படிச் சில நாட்கள் கழிந்தன. பிறகு சுந்தரேசர் கொடுப்பதை நிறுத்தி விட்டார். பாணபத்திரன் வருந்தினான். ஆண்டவன் அவன் கனவில் தோன்றி, 'அன்பனே!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இனிமேல் பாண்டியன் பொக்கிஷத்திலிருந்து ஒன்றும் கவர்ந்து கொடுக்க முடியாது. ஏனென்றால் காவலர் மீது அரசன் சந்தேகித்து அவர்களைத் தண்டிப்பான். ஆதலால் உன்னைப்போல என்னிடம் அன்பு கொண்டுள்ள சேரநாட்டரசனான சேரமான் பெருமாளுக்கு ஒரு திருமுகம் தருகிறோம். நீ அங்கு சென்று அவரைக் கண்டால் அவர் நிரம்பச் செல்வம் தருவார். அது கொண்டு உன் வறுமையைப் போக்கிக் கொள்க' என்றனர்.

சோமசுந்தரக் கடவுள் அளித்த திருமுகத்தை எடுத்துக் கொண்டு சேர நாட்டிற்குச் சென்றார் பாணபத்திரன். ஆண்டவனும் சேரமான் கனவிலும் இவர் வரவைப் பற்றி முன்னரே அறிவித்தார். சேரமான் பெருமாளும் பாணபத்திரனை வரவேற்று உபசரித்து மனம் மகிழ்ச்சியினால் தன் பொக்கிஷத்தைத் திறந்து பொருள்களை எல்லாம் எடுத்துச் செல்லுமாறு பணித்தார். பாணபத்திரன் தனக்கு வேண்டிய அளவு செல்வத்தைப் பெற்று மதுரைக்குத் திரும்பினான். இறைவனை வணங்கிப் பின் தான் கொண்டுவந்த செல்வத்தை அந்தணர்களுக்கும் புலவர்களுக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பகிர்ந்துகொடுத்துத் தானும் தன் வறுமையைப் போக்கிக் கொண்டார்.

திருவிளையாடல் அம்மானை

வாரணத்தை யீன்ற மதுரேசர் பாணனுக்காச்
சேரலன்பால் ஈந்தார் திருமுகமொன்று அம்மானை
சேரலன்பால் ஈந்தார் திருமுகமொன்று ஆமாகில்
ஆரணஞ் சொல் லைமுகமே லாறுண்டோ அம்மானை
ஆறுமுகம் பெற்றவரென் றாரறியார் அம்மானை.

43. பலகை இட்ட படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வந்திறைஞ்சி
அற்பொழிவு மாரிவெள்ளத் தாழ்ந்திசைக்கும் பாணனுக்குப்
பொற்பலகை இட்ட புகழ் போற்றி.

சங்க பலகை இட்டது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சேரனிடமிருந்து பொருள் பெற்றபின் பாணபத்திரன் வழக்கமாகச் சுந்தரேசப் பெருமான் கோயில் மூன்று வேளை பாடுவதுடன் நள்ளிரவிலும் கோயிலுக்குப் போய் யாழ் வாசித்து வருவது வழக்கம். ஒருநாள் நல்ல மழை பெய்தது. அன்றுகூட பாணபத்திரன் மழையில் நன்றாய் நனைந்து உடல் சிலிர்க்க நள்ளிரவில் நந்தி தேவருக்குப் பின் நின்று யாழ் வாசித்தார். அது கண்டு பரமன் அவருக்கு ஒரு பொற் பலகையைக் கொடுத்து, 'அன்பனே, நீ இப்பலகையைத் தரையில் இட்டு அதன்மேல் நின்று பாடுவாயாக, மழையில் உடல் சிலிர்க்காது' என்று அசரீரியாக அறிவித்து மறைந்தார். அன்று முதல் பாணபத்திரன் தினமும் நான்கு வேளைகளிலும் பரமனைப் பாடிப் பரவசமுற்றார்.

வரகுண பாண்டியன் பாணபத்திரனைப் பலகைமேல் இருத்தி 'இவரே எங்கள் சுந்தரேசப் பெருமான்' என்று பாராட்டிச் சன்மானங்களும் நிறையச் செய்தான். பாணபத்திரனும் அன்று முதல் தன் கடமையைச் செவ்வையாய்ச் செய்து வந்தார். வரகுண பாண்டியனும் சில நாட்கள் கழித்துச் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்து இன்புற்றான்.

திருவிளையாடல் அம்மானை

சொக்கன் மதுரேசன் சொல்லிசைவாய்ப் பாணரைமுன்
வைக்கும் பலகைமிசை வண்மையாய் அம்மானை
வைக்கும் பலகைமிசை வண்மையாய் ஆமாகில்
தைக்கும் பூப்பாணனை யேன்றாவையான் அம்மானை
தான்வைத்தான் பின்புசித்தர் தையலைக்கண்டு அம்மானை.

44. இசை வாது வென்ற படலம்

போற்றிக் கலிவெண்பா

.... கற்பதனால்
மாட்சிபெறு பாடினியை வாதுக்குத் தோற்றாள்தன்
தோட்சுமையாத் தாங்குவித்த சூள் போற்றி.

இசை வாது வென்றது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வரகுண பாண்டியன் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தபின் அவன் மைந்தன் ராஜராஜ பாண்டியன் பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். அவன் காமக்கிழத்தியர் பலர். அவருள் ஒருத்தி இசை வல்லாள். பாணபத்திரன் மனைவி பாடினிக்கும் அவளுக்கும் இசைபாடுவதில் பகைமை ஏற்பட்டது. இதனைப் பாண்டியன் அறிந்தான். ஈழ நாட்டிலிருந்து ஒரு இசை வல்லாளைத் தன் நாட்டிற்கு வரவழைத்துப் பாணபத்திரன் மனைவியுடன் போட்டியாகப் பாடச் செய்து தோற்றவரைத் தண்டிப்பது என்று எண்ணினான். ஒருநாள் ராஜ சபையில் இருவரையும் யாழ் வாசிக்க ஏற்பாடு செய்தான். இருவரும் பாடினர். சபையிலிருந்தவர்கள் பாண்டியன் கருத்தை அறியாது பாணபத்திரன் மனைவி பாடலை வியந்து பாராட்டினார்கள். அரசன் ஈழ நாட்டுப் பாடலைப் பாராட்டினான். உடனே சபையிலுள்ளவர்கள் மன்னன் கருத்தை அறிந்து அதனை ஒட்டி ஈழ நாட்டுப் பாடினி பாட்டைப் பாராட்டத் தொடங்கினர்.

மறுநாள் பாடல் போட்டியிலும் ஈழ நாட்டிலிருந்து வந்தவள் பாட்டு நன்றாயிருந்தது என்று சபையோர் பாராட்டினர். பாணபத்திரன் மனைவி தனக்கு நியாயம் கிடைப்பது அரிது என்று கண்டு இறைவனை வேண்டி, 'மறுநாள் போட்டி வெள்ளியம்பலவாணர் திருமுன் நடைபெற வேண்டும்' என்றாள். அரசனும் இசைந்தான். மறுநாள் சோமசுந்தரக் கடவுள் ஒரு புலவர்போல் சபையில் வந்தமர்ந்தார். போட்டி நடந்தது. அரசன் ஈழநாட்டாள் பாடல் நன்றாய் இருந்தது என்று சொல்ல எண்ணினான். ஆனால் தெய்வ சந்நிதியானபடியால் அவ்வாறு பட்சபாதமாகத் தீர்ப்புக் கூற இயலாதவனாகிப் பாணபத்திரன் மனைவி பாடலைப் பாராட்டினான். அவையோரும் அவ்வாறே தீர்ப்புக் கூறினர். சபை நடுவே அமர்ந்திருந்த புலவரான சுந்தரேசப் பெருமான், 'ஈது அற்புதம்! ஈது அற்புதம்!' என்று சொல்லித் திடீரென மறைந்தார். அரசனும் ஈழநாட்டுப்பாடகி தோள்மேல் பாணபத்திரன் மனைவியை இருத்தி சுமக்கச் செய்தான். பாணபத்திரன் மனைவிக்குப் பல பரிசுகளையும் வழங்கினான். சிலநாள் கழித்துச் சுகுண பாண்டியனைப் பெற்று அவனுக்குத் தக்க வயது வந்ததும் பட்டாபிஷேகம் செய்து சிவலோக பதவி அடைந்தான்.

திருவிளையாடல் அம்மானை

ஆற்றிமது ரேசரிசை யாழ்ப்பாணர் தேவிக்காச்
சாற்றுமிசை வாதெளிதாத் தான் வென்றார் அம்மானை
சாற்றிமிசை வாதெளிதாத் தான் வென்றார் ஆமாகில்
மாற்றரிதோ அன்பர் மறவாநம் அம்மானை
மறவாத அன்பருடன் வாதவற்கேது அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

45. பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... காட்சி பெற
மாயாமல் வெஞ்சுரத்து வல்லேனக் குட்டிகட்குத்
தாயாய் முலை கொடுத்த தாய் போற்றி.


பன்றிக்குட்டிகளுக்கு முலை கொடுத்தது

வைகை ஆற்றின் தெற்கே குருவிருந்த துறை என்னும் ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் சுகவன், சுகலை என்னும் வேளாளர் தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குப் பன்னிரண்டு மக்கள் உண்டு. செல்வச் செருக்கால் தம்மக்களை நல்வழியில் செலுத்தாமல் செல்லமாக வளர்த்தனர். தீயவழியில் சென்றாலும் கண்டிக்கவில்லை. இந்நிலையில் மக்களின் பெற்றோர் இறந்துவிட பிள்ளைகள் தங்களை வளர்ப்பாரின்றிக் காட்டிலுள்ள வேடர்களுடன் சேர்ந்து வாழ்ந்தனர்.

ஒருநாள் அங்கு தேவகுருவான பிரகஸ்பதி தவம் செய்து கொண்டிருந்தார். இவர்கள் அவர் மீது கற்களை வாரி எறிந்தனர். அவருக்குக் கோபம் வந்து இவர்களைப் பார்த்து, 'நீங்கள் பன்றிக் குட்டிகளாகப் பிறப்பீர்களாக!' என்று சாபமிட்டார். மக்கள் நடுங்கி வேண்ட, மனமிரங்கி ' சோமசுந்தரக் கடவுளே உங்களுக்குத் தாய்ப்பன்றியாக வந்து உங்களைக் காப்பாற்றுவார்.' என்று கூறினார். அவ்வாறே அக்காட்டிலுள்ள பன்றியரசனுக்குக் குட்டிகளாகப் பிறந்து வளர்ந்தனர். அவ்வூர் அரசன் அக்காட்டிற்கு ஒருநாள் வேட்டையாட வந்தான். பன்றியரசனும் பாண்டிய அரசனும் தங்கள் சைன்யங்களுடன் நெடுநேரம் போர் புரிந்து கடைசியில் பன்றியரசன் இறந்தான். பெண் பன்றியும் தன் கணவன் போனபின் தனக்கென்ன வேலை என்று அதுவும் போர் புரிந்து உயிர் நீத்தது. பன்னிரு குட்டிகளும் தாய் தந்தையின்றித் தவித்தன.

சோமசுந்தரக் கடவுள் தாய்ப்பன்றி வடிவத்துடன் அக்காட்டில் தோன்றி அக்குட்டிகளுக்குப் பால் கொடுத்து அதனுடன் ஞானத்தையும் நல்கி அருளினார். அவர் திருவருளால் அவைகள் உடம்பு மனித உருவமாகவும் முகம் மட்டும் பன்றி முகமாகவும் மாறின. தாம் ஏற்ற பன்றி உருவத்தை மாற்றி இறைவன் மறைந்தருளினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவிளையாடல் அம்மானை

நின்றெனையாளுங் கயற்கண்நேயர் சொக்கர் தாயெனப் போய்ப்
பன்றிமக்க ளுண்ணண்முலைப் பால் கொடுத்தார் அம்மானை
பன்றிமக்க ளுண்ணமுலைப் பால் கொடுத்தார் ஆமாகில்
மன்றமுலைப் பாலாண்பால் வந்ததென்னோ அம்மானை
வாராதோ பச்சை மதலை பெற்றார்க்கு அம்மானை.

46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வீயாத
ஏனமிரண் டாறனையும் ஈராறு மந்திரியா
மீனவனுக் கீந்த விறல் போற்றி.

பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கியது

காட்டில் வசித்து வந்த பன்றி முகமுடைய பன்னிருவரும் சோமசுந்தரக் கடவுள் திருவருளால் சகல கலைகளிலும் வல்லவர்களாய் வாழ்ந்திருந்தனர். ஒருநாள் சுந்தரேசப்பெருமான் பாண்டிய மன்னன் கனவில் தோன்றி, 'அரசனே! பன்றி மலையில் வசிக்கும் பன்னிரண்டு பேரையும் உன் மந்திரிகளாக ஏற்றுக் கொண்டு அரசாள்வீராக' என்று அருளி மறைந்தார். அவ்வாறே பாண்டியமன்னனும் அவர்களைத் தனக்கு அமைச்சர்களாக ஏற்றுக் கொண்டு ராஜ்யபாரம் செய்து வந்தான். அப்பன்னிருவரும் அரசன் கருத்தறிந்து மந்திரி வேலை பார்த்து வந்து பின் பரமன் அருளால் உயிர் நீத்துச் சிவலோகம் சேர்ந்து சிவகணங்களாக மாறி இன்புற்றனர். ராஜராஜ பாண்டியனும் சிவலோக பதவி அடைந்தான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

துன்னியசீர்த் தென்மதுரைச் சொக்கேசர் பன்றிகளைத்
தென்னவற்கு மந்திரியாய்ச் செய்தனர் காண் அம்மானை
தென்னவற்கு மந்திரியாய்ச் செய்தனரே ஆமாகி
மன்னுவர்க் கேதுபட்சம் பன்றிமேல் அம்மானை
பன்றியறி யாதவர்க்குப் பட்சமன்றோ அம்மானை.

47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... மானவ
எய்த்தெளியனான விரும்புட் குபதேசம்
வைத்து வலி தந்த வரம் போற்றி.



கரிக்குருவிக்கு உபதேசம் செய்தது

இராஜராஜ பாண்டியனுக்குப் பின் சுகுண பாண்டியன் நாட்டினை ஆண்டு வந்தான். அக்காலத்தில் ஒருவன் முற்பிறப்பில் நல்ல தானதர்மங்களைச் செய்து சிறிது பாவமும் செய்த காரணத்தால் கரிக்குருவியாய்ப் பிறந்தான். இக்குருவி மிகவும் எளிமையாய் இருந்ததால் காகம் முதலிய மற்ற பறவைகள் இதனைத் துன்புறுத்தின. துன்பம் பொறுக்காமல் வெட்கத்துடன் ஒரு மரத்தின் மீது மறைவாக உட்கார்ந்திருந்தது அக்குருவி. அங்கு ஒரு தீர்த்தமும் இருந்தது. சிவபக்தர்கள் அங்கு வந்து அத்தீர்த்தத்தில் நீராடி ஒருவருக்கொருவர், 'மதுரையம்பதி மூன்றுவித சிறப்புகள் உள்ள தலம் என்றும் அத்தீர்த்தத்தில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளைத் தினமும்வணங்கி வழிபட்டால் இம்மையிலேயே எல்லாப் பாவங்களும் நீங்கும், நினைத்த எண்ணமும் ஈடேறும்' என்றும் பேசிக் கொண்டார்கள். இதனைக்கேட்ட குருவிக்கு சிறிது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஞானம் தோன்றியது. முன் பிறப்பின் செய்கைகளை உணர்ந்தது. உடனே மதுரைக்குச் சென்று பொற்றாமரையில் நீராடி சுந்தரேசப் பெருமானை மூன்று நாட்கள் வழிபட்டது. அம்மையின் திருநோக்கு பட்டது. அம்மை கேட்க, இறைவன் அதன் பூர்வீக வரலாற்றைச் சொல்லி அக்குருவிக்கு மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்தருளினான். கரிக்குருவி ஆண்டவனைப் பலவகையில் பாராட்டியது. பின் திரியம்பகம் என்ற மந்திரத்தையும் உபதேசித்து கரிக்குருவியை வல்லவனாக மாற்றியருளினார். அக்குருவியும் ஆண்டவனிடம், 'வலியான் என்றது எனக்கு மட்டுமல்லாமல் என் இனத்தவர்களுக்கெல்லாம் ஆக வேண்டும்' என்று கேட்டுக் கொண்டது. ஆண்டவனும் அவ்வாறே ஆகுக என்று அருள் புரிந்தார்.

திருவிளையாடல் அம்மானை

உண்மை கரிக்குருவிக் கோதியெளி யார்வலியார்க்கு
எண்மடங் காக்கினர் மதுரை யீசனார் அம்மானை
எண்மடங் காக்கினர் மதுரை யீசனார் ஆமாகில்
அண்ணலெளி யார்க்கெளியா ராவதேன் அம்மானை
ஆவதுபோ லேனலைத்தார் ஆரூரில் அம்மானை.

48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... சித்தநெகிழ்
பத்தியினாற் சூழ்ந்து வழிபாடு செய்யும் நாரைக்கு
முத்தி கொடுத்த முறைபோற்றி.

நாரைக்கு முத்தி கொடுத்தது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

மதுரைக்குத் தெற்கில் ஒரு தடாகம் இருந்தது. அங்கு ஒரு நாரை வசித்தது. மழையின்றி அக்குளம் ஒருமுறை வற்றியது. உணவு இன்மையால் அந்நாரை வேறொரு குளமுள்ள இடத்திற்குச் சென்றது. அக்குளத்தில் நீராடும் முனிவர்கள் மீது அக்குளத்தில் வாழ்ந்த மீன்கள் புரளுவதைக் கண்டு இம்முனிவர்கள் மீது புரளும் மீனை நாம் உண்ணலாகாது என்றுணர்ந்து பசியால் வருந்தியது.

ஒருநாள் அம்முனிவர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புக்களையும் உடைய மதுரையின் சிறப்பை எடுத்துக்கூற புண்ணியத்தால் நாரை கேட்டு மதுரை சென்றது. பொற்றாமரையில் மூழ்கி ஆண்டவனை வழிபட்டது. அதற்கிரங்கிய இறைவன் காட்சி கொடுத்து, யாது வரம் வேண்டும்? எனக் கேட்க, நாரை, 'ஐயனே, என் பிறவி ஒழிந்து உன் சிவலோகம் சேர வேண்டும்' என்றது. இறைவனும் அவ்வாறே அருள, மேலும் அது, 'ஐயனே, தேவரீர் அருளால் இப்பொற்றாமரையில் வாழும் மீன்களை நான் உண்ணவில்லை. மற்றப் பறவைகளுக்கு இவ்விதமான அறிவு இருக்காது. ஆதலால் இத்தீர்த்தத்தில், உயிர் வாழும் ஜந்துக்கள் ஒன்றுமே இல்லாமல் இருக்குமாறு அருள் புரிக' என்றது. பெருமானும் அவ்வாறேவரம் கொடுத்தார். இன்றும் அக்குளத்தில் உயிர்கள் ஒன்றுமே வாழ்வதில்லை.

திருவிளையாடல் அம்மானை

மின்னார் மணிகயற்கண் மேவுசுந்தரேசர் வந்து
நன்னாரைக் கோர்வீடு நல்கினார் அம்மானை
நன்னாரைக் கோர்வீடு நல்கினார் ஆமாகில்
முன்னமனைக் கையால் முடிப்பாரோ அம்மானை
முடிக்கவல்லார் காலாலே முன்னமனை அம்மானை.

கூடற்காண்டம் முற்றிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாலவாய்க் காண்டம்

49. திருவாலவாயான படலம்

போற்றிக் கலிவெண்பா

.... சித்தரணி
கோளரவு நான்மாடக் கூடலை யாலவாய்
வாளகிரி போல்வளைத்த மாண்போற்றி.

திருவாலவாயானது

சுகுண பாண்டியனுக்குப் பிறகு சித்திர பரதன், சித்திர பூடணன், சித்திரத் துவஜன், சித்திர வர்மன், சித்திர சேனன், சித்திர விக்ரமன், ராஜ மார்த்தாண்டன், ராஜ சூடாமணி, ராஜ சார்த்தூலன், துவிசராஜ குலோத்துமன், ஆயோதன ப்ரவீணன், ராஜகுஞ்சரன், ராஜ பயங்கரன், உக்ரசேனன், சத்ருஞ்சயன், வீம பராக்ரமவழுதி, பிரதாப மார்த்தண்டன், விக்ரம கஞ்சுகன், சமர கோலாகலன், அதுல விக்ரமன், அதுல கீர்த்தி முதலிய அரசர் பாண்டி நாட்டை முறையாக ஆண்டு வந்தனர். இவர்களுக்குப் பின் கீர்த்தி பூடணன் நாட்டை அரசாண்டு வருகையில் ஒரு பிரளயம் வந்தது. மலைகளும் பிறவும் வெள்ளத்தில் அழிந்தன. மதுரைத் திருக்கோயிலும் பொற்றாமரைத் தீர்த்தமும் யானைமலை, ரிஷபமலை, பன்றி மலையும் அழியாமலிருந்தன.

வெள்ளம் வடிந்தபின் இறைவன் உலகத்தையும் உயிர்களையும் தோற்றுவித்தான். அப்போது வங்கிய சேகர பாண்டியனும் தோன்றினான். அவன் நாட்டை ஆண்டபோது குடிகள் பெருகினார்கள். இருக்கப் போதுமான இடம் இல்லாமல் தவித்தனர். அப்போது பாண்டியன் தங்கள் குல தெய்வமாகிய சுந்தரேசப் பெருமான் திருமுன் சென்று தன் நகரின் எல்லையை அளந்து காட்ட வேண்டினான். இறைவன் சித்த வடிவத்துடன் எழுந்தருளினார். உடலெல்லாம் பாம்புகளை அணிந்திருந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

விமானத்திலிருந்து வெளிவந்த அவர்தன் கையிலிருந்த ஒரு சிறுபாம்பை எடுத்து வெளியே விட்டு நகரின் எல்லையை அளந்து காட்டப் பணித்தார். அப்பாம்பு பெருமானை நோக்கி 'இந்நகரம் இன்று முதல் என் பெயரால் விளங்க வேண்டும்' என்று வரம் கேட்டது. விஷம் பொருந்திய வாயை உடைய பாம்பின் பெயரால் அன்று முதல் ஆலவாய் என்ற பெயர் வழங்கலாயிற்று. கிழக்குத் திசையில் தன் தலையை வைத்துத் தன் வாலை நீட்டி வளைத்து நகரைச் சுற்றித் தன் உடம்பை வளைத்து நகரின் எல்லையைக் காட்டி மீண்டும் பரமன் கரத்தில் சென்று அடங்கியது. அரசனும் அவ்வெல்லைப்படித் தன் நகரைச் சுற்றிச் சுவரெடுத்து நகரைக் காத்து வந்தான். நகருக்குத் தெற்கில் திருப்பரங்குன்றமும் வடக்கில் ரிஷப மலையும் மேற்கில் ஏடகமும் கிழக்கில் பூவணமும் எல்லைகளாக வைத்துக் கொண்டான். நல்ல முறையில் நாட்டை ஆண்டுவந்தான். மக்கள் சுபிட்சமாக வாழ்ந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

பண்டோர் சொக்கேசர் பணியாற்பல் கோடியண்டம்
கண்டோர் மதுரைஎல்லை காட்டினார் அம்மானை
கண்டோர் மதுரைஎல்லை காட்டினார் ஆமாகில்
கொண்டால வாயெனப்பேர் கூடுவதேது அம்மானை
கூடாதா கூடலெனக் கூறுநகர்க்கு அம்மானை.

50. சுந்தரப் பேரம்பு எய்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... கோளமரிற்
சுந்தரப்பே ரம்பெய்து சோழன் கடற்சேனைக்கு
அந்தரநா ளீந்த அருள் போற்றி.

வங்கிய சேகரன் நீதியுடன் நாட்டை ஆண்டு வந்தான். மக்கள் சுபிட்சமாக வாழ்ந்தனர். இவன் படைபலம் குறைவாக இருந்ததைக் கண்ட விக்கிரம சோழன் என்பான் கடல் போன்ற சேனையுடன் பாண்டியனுடன் போர் புரிய வந்தான். சோழன் சேனை பலத்தையும் தன் சேனையின் குறைவையும் கருதிப் பாண்டியன் சோழனை எவ்வாறு வெல்வது என்று கருதித் தன் குல தெய்வமாகிய சுந்தரேசப் பெருமானிடம் முறையிட்டான். பரமன் அசரீரியாய், 'அரசனே நீ சோழனுடன் பயப்படாமல் போர் புரிவாய். நாம் உனக்குத் துணையாக வந்து வெற்றி வாங்கித் தருகிறோம். கவலைப்பட வேண்டாம்' என்றார். இரு சேனைகளுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. கடைசியாக சோழனுக்குத் துணையாக வந்த வடதேசத்தவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சுந்தரப் பேரம்பு எய்தது

பலத்தால் பாண்டியன் சேனை உடைந்தது. சோழன் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற செருக்கால் வெற்றிச் சங்கை முழக்கினான். அப்போது ஒரு வேடவடிவத்துடன் சுந்தரேசப் பெருமான், பாண்டியன் சேனைக் காவலராக வந்து நின்று போர் புரிந்தனர். தம் பெயர் தீட்டிய ஒரு அம்பை வில்லில் மாட்டிச் சோழன் சேனை மீது விட்டார். ஒரு சரம் நூறு நூறு பகைவர் சேனைகளைக் கொன்றது. ஒரு அம்பிற்கு இவ்வளவு பலம் எப்படி வந்தது என்று எண்ணிய சோழன் அந்த அம்பைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதில் சுந்தரேசன் என்று எழுதப்பட்டிருந்ததால், பாண்டியனுக்குச் சுந்தரேசப் பெருமானே துணையாய் உள்ளார், தான் பாண்டியனை வெல்ல முடியாது என்று எண்ணிப் பயந்து ஓட ஆரம்பித்தான். சோழனுக்குத் துணையாக வந்த வடதேசத்தார் சோழனை மடக்கி நிறுத்திப் போர் புரியச் செய்தனர்.

சுந்தரேசர் ஒரு அம்பு விட்டு அநேக காலாள்கள், குதிரை, யஸனை, தேர்ப்படைகளைக் கொன்று குவித்தார். கடைசியாகச் சோழன் சேனை உடைந்து தோற்றுப் போனான். வேடனாக வந்த பெருமான் பாண்டியனைப் பார்த்துப் புன்னகை புரிந்து மறைந்தார். பாண்டியன் யானை மீதேறி வெற்றிச் சங்கை ஊதிக் கொண்டு நகர் திரும்பினான். பெருமானுக்கு நன்றி கூறினான்.

திருவிளையாடல் அம்மானை

மந்திர வேதத்தின் மதுரேசன் பாண்டியர்க்காச்
சுந்தரப் பேரம்பெய்தான் சோழன் மேல் அம்மானை
சுந்தரப்பே ரம்பெய்தான் சோழன்மேல் ஆமாகில்
வந்தெதிர்த்த போரின் மலையானோ அம்மானை
மலைவில்ல னென்றொருபேர் வாய்த்ததவற்கு அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

51. சங்கப் பலகை கொடுத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... செந்தமிழ்நூல்
ஆய்ந்தவர் கல்வி அளந்தறியும் பொற்பலகை
ஈந்த கருணை இசை போற்றி.



சங்கப் பலகை கொடுத்தது

வங்கிய சேகரன் காலத்தில் காசியில் கங்கைக் கரையில் பிரமதேவன் பத்து அசுவமேத யாகம் விதிப்படிச் செய்தான். யாகம் முடிந்த பின்னர், அவமிருத ஸ்நானம் செய்ய வேண்டி அவன் தன் தேவியர்களான சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரி என்பவர்களுடன் சென்றான். வழியில் ஒரு கந்தர்வப்பெண் பாடும் கானத்தில் ஈடுபட்டுச் சற்று சரஸ்வதி நின்றாள். பிரமதேவன் மற்ற இரு மனைவியருடன் நீராடிக் கரையேறும் போது சரஸ்வதி அங்கு சென்று தன் நாயகனான பிரமதேவனைப் பார்த்துக் குற்றம் தன்மேலிருக்க அதனை அறியாது, 'என்னை விட்டுத் தாங்கள் எப்படி நீராடலாம்' என்றாள். பிரமதேவன் கோபம் கொண்டு சரஸ்வதியைப் பார்த்து 'என்னுடன் வராமல் தாமதித்து வந்ததும் அன்றி என்மீது குற்றம் சுமத்துகின்றாய். ஆதலால் நீ பல மானுடப் பிறவிகள் எடுத்துப் பின்னர் என்னை வந்தடைவாய்' என்றான். சரஸ்வதி தன் குற்றத்தை உணர்ந்து, 'சுவாமி தங்களைப் பிரிந்து நான் எப்படி வாழ்வேன், எப்போது இச்சாபம் நீங்கும்?' என்று கேட்டாள். அதற்குப் பிரமதேவன் கோபம் தணிந்து, 'என் உடலாகிய முதல் எழுத்து ஐம்பத்தொன்றில் ஆகாரம் முதல்ஹாகாரம் ஈறாக உள்ள 48 எழுத்துக்களும் 48 புலவர்களாய்ப் பிறக்கட்டும். பின் அகரத்திற்கு முதல்வனான சோமசுந்தரக் கடவுள் தோன்றிச் சங்கப் பலகை மீதிருந்து தமிழை வளர்த்துப் பின் என்னை அடைவாய்' என்றனன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவ்வாறே தோன்றிய 48 புலவர்களும் பல மொழிகளிலும் நன்கு பயின்று தேர்ந்து பல நாடுகளைச் சுற்றிக் கடைசியாக மதுரையை நோக்கி வந்தனர். அப்போது அகரத்திற்குத் தலைவனான சுந்தரேசப் பெருமான் தான் ஒரு புலவராக அவர்முன் தோன்றி அவர்களை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்று தன்னை வழிபடுமாறு பணித்து மறைந்தார்.

பாண்டியன் அவர்களுக்கென ஒரு மண்டபததை ஏற்பாடு செய்து கொடுத்துத் தமிழை வளர்க்குமாறு பணித்தான். வெளி நாட்டவர்கள் வந்து இவர்களுடன் வாது செய்து தோற்றுத் திரும்பினார்கள். ஒருநாள் இப்புலவர்கள் ஆண்டவனைப் பார்த்து, 'சுவாமீ, எங்கள் புலமையை அளக்க அளவுகோலாக ஒரு பலகையைத் தர வேண்டும்' என்று கேட்டார்கள். பரமனும் அவ்வாறே அவர்களுக்கு ஒரு பொற்பலகையை ஈந்தான். புலவர்கள் அதனைப் பெற்றுப் பூசித்து முதலில் நக்கீரன் ஏறினான். ஒரு முழம் வளர்ந்தது. பின் கபிலன் ஏறினான். ஒரு முழம் வளர்ந்தது. பின்னர் மற்றப் புலவர்களும் ஏறினார்கள். புலவர்கள் தங்களுக்குள் கலகம் இன்றி ஒற்றுமையாய் வாழ்ந்தனர். நடு மையமாகச் சுந்தரேசப் பெருமான் ஒரு புலவராக வீற்றிருந்தருளினார். வங்கிய சேகரன் தன்மகன் வங்கிய சூடாமணிக்கு முடிசூட்டிச் சிவபதம் அடைந்தான்.

திருவிளையாடல் அம்மானை

கருணைநிறைகூடற் கயற்கண்மகிழ் சொக்கேசர்
ஒருகையிற்சங் கேந்திக் குயர்ந்தவர்காண் அம்மானை
ஒருகையிற்சங் கேந்திக் குயர்ந்தவரே ஆமாகில்
தருபவர் தங் கையினிற்பல் சங்கமுண்டோ அம்மானை
சங்கப் பல கையறத் தாமளித்தார் அம்மானை.

52. தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... வேந்தனிடைச்
சொற்சுவையால் பாடல்தொடுத்துத் தருமிக்குப்
பொற்கிழி தந்த புகழ் போற்றி.

தருமிக்குப் பொற்கிழி அளித்தது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வங்கிய சூடாமணிப் பாண்டியன் தன் நந்தவனத்தில் சுவாமிக்கு மிக நறுமணமுள்ள சண்பகப் பூக்களை அலங்கரிக்கும் பொருட்டு பல சண்பக மரங்களை வளர்த்து வந்தான். இதனால் சுந்தரேசப் பெருமானுக்கு சண்பக சுந்தரன் என்ற பெயரும் அரசனுக்குச் சண்பக மாறன் என்ற பெயரும் வழங்கலாயின. இளவேனிற் காலம். எங்கும் உஷ்ணம். மக்கள் குளிர்ந்த இடங்களைத் தேடிச் சென்றனர். அப்போது மன்னன் தன் நந்தவனத்தில் ஒருபக்கம் இருந்தான். பக்கத்தில் தேவியும் இருந்தாள். தென்றல் அசைந்து வந்தது. இதுவரை தான் அனுபவியாத ஒரு நறுமணத்தை அரசன் உணர்ந்தான். அரசனுக்கு ஓர் ஐயம் ஏற்பட்டது. 'இவ்வாசம் திவ்யமாக உள்ளது காற்றுக்கு இயற்கை வாசனையில்லை. பக்கத்திலுள்ள மனைவி கூந்தலிலிருந்து இவ்வாசனை வந்தது. கூந்தலுக்கும் இயற்கை வாசனையில்லை. இது வண்டாலும் அறிய முடியாத வாசனை.இது எங்கிருந்து வந்தது?' என்று வியந்தான். இந்தக் கருத்தை யாவராயினும் அறிந்து பாடல் செய்வோருக்கு ஆயிரம் செம்பொன் கொண்ட ஒரு கிழியைச் சங்க மண்டபத்தில் கட்டி விட்டான்.

எல்லாப் புலவர்களும் தங்கள் தங்கள் மனதில் தோன்றியதைப் பாடல்களாகப் பாடிக் காட்டினார்கள். அரசன் ஐயம் தீரவில்லை. ஒரு ஆதி சைவப் பிரமசாரி இறைவனிடம் வந்து, 'சுவாமி, யான் ஒரு பிரமசாரி, ஏழை உன்னைத் தொட்டுப் பூசிக்க ஆசை, ஆனால் பிரமசாரி உன்னைத் தொடக்கூடாது. ஆதலால் நான் திருமணம் செய்து கொண்டு உன்னைப் பூசிக்க விரும்புகிறேன். கையில் திருமணத்துக்குப் பணமில்லை ஆதலால் அரசன் மனத்தில் தோன்றிய ஐயத்தைத் தீர்த்து ஒரு கவி எழுதிக் கொடுத்தால் அதனைச் சங்கப் புலவர்களிடம் காட்டி அரசன் மூலம் அப்பொற்கிழியைப் பெற்று என் வறுமையைப் போக்கிக் கொண்டு திருமணம் செய்து கொண்டு உன்னை நாளும் பூசித்து வழிபடுவேன் என்றான். உடனே இறைவன்,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழியுமோ
பயிலியது கெழீஇயநட்பின் பயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தன்
நறியவு முளதோ நீ அறியும் பூவே".

என்ற செய்யுள் எழுதப்பட்ட சீட்டினை வழங்கினார். இச்சீட்டுடன் சங்கத்திற்குச் சென்று காட்டினான் தருமி. அனைவரும் பலவாறாகப் பாராட்டினர். அவர்கள் இவனை அரசனிடம் கொண்டு போய்விட்டனர். அரசனும் தன் ஐயம் தீர்ந்ததால் பொற்கிழியைத் தருமிக்கு அறுத்துத் தருமாறு உத்தரவிட்டான். அரசன் ஏவலர் அக்கிழியை அறுக்கும் போது நக்கீரன், 'நில்' என்றான். உடனே தருமி அச்சீட்டைக் கொண்டு இறைவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருமுன்னிலையில் சமர்ப்பித்து 'ஐயனே, உன் பாட்டில் குற்றம் கூறினால் யார் உன்னை மதிக்க வல்லவர்?' என்று புலம்பி வருந்தினான். இறைவன் ஒரு புலவ வடிவத்துடன் சங்க மண்டபத்திற்கு வந்த அங்கிருந்த புலவர்களை நோக்கி, 'யாரை நங் கவிக்குக் குற்றம் இயம்பினார்?' என்று கேட்கக் கீரன் அஞ்சாது எழுந்து, 'நான்தான்' என்றான். 'என்ன குற்றம்?' என்றார் பரமன். புலவனும் ' பொருட்குற்றம் என்றான். 'பொருட் குற்றம் என்ன?' என்றான் பரமன். கீரனும்'பெண்கள் கூந்தலுக்கு இயற்கையில் மணமில்லை' என்க. 'பதுமினிச் சாதிப் பெண்ணின் கூந்தலுக்கும் இயற்கை மணமில்லையா' என்றான் ஐயன். அதற்குமில்லை என்றான் புலவன். பின்னர் ஆண்டவன் 'நீ பலநாள் வழிபட்டேத்தும் ஞானப் பூங்கோதையம்மையின் கூந்தலுக்கும் வாசனையில்லையா' என்று கேட்க, 'அதற்குமில்லை' என்றான் கீரன். உடனே இறைவன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து சிறிதே காட்டப் புலவன் அஞ்சாது சுவாமியைப் பார்த்து, உம்பரான் பதிபோல் ஆகம்முற்று நீர் கண்ணானாலும் நும் பாட்டு குற்றம் குற்றமே' என்றான். வெப்பம் பொறாது நக்கீரன் பொற்றாமரைத் தடாகத்தில் போய் விழுந்தான். இறைவனும் மறைந்தார்.

திருவிளையாடல் அம்மானை

நல்கவெனப் பொற்கிழியை நற்றருமிக் கென்றுகவி
சொல்லிவிட்டார் தென்மதுரைச் சுந்தரனார் அம்மானை
சொல்லிவிட்டார் தன்மதுரைச் சுந்தரனார் ஆமாகில்
வல்லகவிக் கேன்வீரன் மாசோதும் அம்மானை
மாசோதி யாரடியார் வாயுள்ளார் அம்மானை.

53. கீரனைக் கரையேற்றிய படலம்

போற்றிக் கலிவெண்பா

"... நக்கீரன்
மெய்வெந் தழற்கண்ணால் வேந்தோடை வீழ்ந்தோனைக்
கைதந்தேறிட்ட கரை போற்றி.

கீரனைக் கரையேற்றியது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கழகப் புலவர்களுக்குள் மிகச் சிறந்தவனாக விளங்கிய நக்கீரன் பரமன் நுதற்கண் தீயினால் தடாகத்தில் வீழ்ந்து விட்டதால் ஏனைய புலவர்கள் வருந்தி இறைவன் முன்போய், 'சுவாமி, நக்கீரன் இல்லாத சபை சபையாக இல்லை. அவன் பிழையைத் தேவரீர் பொறுத்தருளி அவனைக் கரையேற்ற வேண்டும்' என்றனர். வேண்டுகோளுக் கிணங்கிச் சுந்தரேசப் பெருமான் மீனாட்சி சமேதராகப் பொற்றாமரைத் தடாகக் கரைக்கு வந்து அருட் கண்ணால் நக்கீரனை நோக்கினார். அவன் வெப்பம் தணிந்து அன்புருவாகி இறைவனை வணங்கி வழிபட்டான். கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதியால் தோத்திரம் செய்தான். பார்வதீ பரமேசுவரர் அருள் பாவித்து மறைந்தனர். நக்கீரனும் புலவர் மண்டபத்துள் சென்று பொற்கிழியை அறுத்துத் தருமிக்குக் கொடுத்தான். அரசனும் புலவனைப் பாராட்டினான்.

திருவிளையாடல் அம்மானை

சொக்கேசர் சங்கம் துதித்திடப் பொற் றாமரைவீழ்
அக்கீரனைக் கரையேற் றன்புவைத்தான் அம்மானை
அக்கீரனைக் கரையேற் றன்புவைத்தான் ஆமாகில்
தக்கனுக்காட்டுத் தலையேன்றான் வைத்தான் அம்மானை
தானுமன் னாட்டிற் தலையைத்தான் அம்மானை.

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

போற்றிக் கலிவெண்பா

....மைதவிர
ஏதமுறுங் கீரர்க் கியற்றமிழைத் தென்மலய
மாதவனாற் றேற்றுவித்த மாண் போற்றி.


கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது

இறைவனால் திருவருள் பெற்றுய்ந்த நக்கீரர் தன்னைக் காத்தது பொற்றாமரைத் தீர்த்தம் என்று தினமும் அதில் நீராடி இறைவனையும் அங்கயற் கண்ணியையும் வழிபட்டு வருவானானான்.

பரமன் அவன்மீது கருணை கூர்ந்து 'இவனுக்கு இன்னும் பொருளிலக்கணம் தெரிந்திலது' வழூஉச் சொல்லும் வழாநிலைச் சொல்லும் தெரிந்திலது என்று தனக்குச் சமானமான அகத்திய முனிவரை வரவழைத்து அவரைக் கொண்டு கீரனுக்குப் பொருள் இலக்கணத்தைப் போதிக்கச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
செய்தார். அவனும் நல்ல புலவன் ஆனான். உடனே தான் முன் பாடியுள்ள பாடல்களை எல்லாம் இவ்வறிவு கொண்டு திருத்தி அமைத்தான். அகத்தியருக்குப் பரமன் சிலவரங்களை நல்கி விடை கொடுத்தனுப்பினார். அன்று முதல் நக்கீரனும் பரமனிடம் பரம பக்தனானான்.

திருவிளையாடல் அம்மானை

தலத்துறைநக் கீரனுக்குத் தாமுரைத்தி பாது சொக்கர்
இலக்கணம் போதித்தார் இருந்தவரால் அம்மானை
இலக்கணம் போதித்தார் இருந்தவரால் ஆமாகில்
மலைத்தமி ழறிந்துரைக்க மாட்டாரோ அம்மானை
மாட்டார் அறிவரியார் மற்றறிவார் அம்மானை.

55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... போதணிந்த
மங்கல மண்டபத்து வந்துமன் சங்கத்தா
சங்கையறத் தேற்றுந் தமிழ் போற்றி.

திருவாலவாயான காண்டம்

சங்கப் புலவர்கள் நாற்பத்தெண்மரும் பல பாடல்களைப் பாடிச் செருக்குற்றனர். அவற்றுள் நல்லது, தீயது என்று தேறமாட்டாத புலவர்கள் சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டனர். சிவலிங்கத்தினின்றும் பெருமான் ஒரு புலவனாய் வெளி வந்த புலவர்களைப் பார்த்து, 'இவ்வூரில் தனபதி என்றொரு வணிகன் தன் மனைவி குணசானியுடன் வாழ்ந்து வருகிறான். அவர்களுக்கு ஒரு அறிவுடைய ஆனால் ஊமனாகிய மகன் உருத்திரசன்மன் என்பவன் உண்டு. அவனிடம் சென்றால் உமக்கு ஏற்பட்ட ஐயங்களைப் போக்குவான்' என்றார். புலவர்கள் பரமனை நோக்கி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
"சுவாமி,அவனோ ஊமன், எங்கள் பாடல்களை எவ்வாறு புரிந்து கொள்வான்? நல்லது, தீயது என்று எப்படிப் பாகுபாடு செய்ய அவனால் இயலும்' என்றனர். பரமன் 'உங்கள் பாடல்கள் நல்லனவானால், சொல்லாழம், பொருளாழம் உடையவைகளாயிருந்தால் அவ்வூமன் தலையை அசைப்பான், ஆனந்தக் கண்ணீர் உகுப்பான், உரோம புளகாங்கிதம் கொள்வான்' என்றார்.

அவ்வாறே புலவர்கள் அனைவரும் உருத்திர சன்மனை வரவழைத்து அவனை ஒரு ஆசனத்திருத்தி வணங்கி வழிபட்டுத் தங்கள் பாடல்களைச் சொன்னார்கள். பரமன் அருளியவாறு அவ்வூமன் நக்கீரர், கபிலர், பரணர் பாடல்களை மெச்சினான். கலகம் தீர்ந்து நன்கு வாழ்ந்தனர் புலவர்கள்.

திருவிளையாடல் அம்மானை

ஆசையமு தங்கயற்க ணன்பர் சொக்கர் வந்துதவ
நேசர்வினை தீர்ப்பது நிகழ்த்துமுலகு அம்மானை
நேசர்வினை தீர்ப்பது நிகழ்த்துமுலகு ஆமாகில்
பேசுசங்கத் தார்கலகம் வந்ததேன் அம்மானை
பெற்றவர் தீர்ப்பதுவாம் பேசுவதன்று அம்மானை.

56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... சங்கையாய்ப்
போனவிடைக் காடன்பின் போய்ப் பாடல் கேட்டரசன்
மானநிதி நல்குவிக்கு மாண் போற்றி.

இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது

சண்பக மாறனுக்குப் பின் பல பாண்டியர்கள் நாட்டை ஆண்டனர். பதினைந்தாவது அரசனாக விளங்கியவன் குலேச பாண்டிய மன்னன். இவன் ஒரு புலவனாய்த் திகழ்ந்ததால் தமிழ்ச் சங்கத்தில் உள்ள புலவர்கள் உடன் ஒரு புலவனாக வீற்றிருந்தான். கபிலர் நண்பன் இடைக்காட்டுப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புலவன் என்பான் அரசனிடம் ஒரு பாட்டு எழுதிக் கொண்டு போய் வாசித்து அரசனை மகிழ்விக்க எண்ணினான். பாடல் மிக நல்ல முறையில் அமைந்திருந்தது. பொறாமை காரணமாக குலேச பாண்டியன் அவனைப் பாராட்டவில்லை. உடனே அப்புலவன் கோயிலுக்குச் சென்று சுந்தரேசப் பெருமான் சந்நிதியில் வீழ்ந்து வணங்கி அரசன் செய்தியைச் சொல்லி வருந்தினான். பின் அவ்விடத்தை விட்டு நீங்கிக் கோபமாகச் சென்றான். சுந்தரேசப் பெருமான் மீனாட்சி அம்மையுடன் கோயிலை விட்டு நீங்கி வைகைக்கு வடக்கே ஒரு ஆலயத்தில் போய்த் தங்கி விட்டார். இவர்கள் பின்னர்ச் சங்கப் புலவரும் போய்விட்டனர்.

மறுநாள் காலை பூசைக்குக் கோயிலைத் திறந்து பார்க்கையில் இலிங்கம் அங்கில்லை. இச்செய்தி மன்னனுக்கு எட்டியது. அவன் அழுது புலம்பித் தான் ஏதேனும் தீங்கிழைத்தனனோ என்று வருந்தினான். சிலர் அப்போது அங்கு வந்து வைகை வடகரையில் ஓர் ஆலயத்தில் சிவபெருமான் சங்கப் புலவர்களுடன் எழுந்தருளியிருப்பதாகக் கூறினர். அரசன் மிக மகிழ்ந்து அவ்விடம் நடந்து சென்று பெருமானைக் கண்டு வணங்கித் தோத்திரம் செய்தான். அப்போது அசரீரியாக பெருமான், 'உன் தோத்திரங்களைப் பாராட்டுகிறோம். ரிஷிகள் முனிவர் முதலியோர் ஏற்படுத்திய பல தலங்கள் நமக்கு உண்டு. இவைகளுள் 64 சிறந்தவை. இவற்றுள் எட்டு மிக மேலானவை. எட்டுத்திக்குப் பாலகர்கள் பூசித்தவை இந்த எட்டும் இங்குள்ள இலிங்கம் எம் தோழன் குபேரனால் பூசிக்கப் பெற்றது. இத்தலத்திற்கு வடதிருவாலவாய் என்று பெயர். மதுரையை விட்டு நாம் ஒரு போதும் நீங்கினதில்லை. நீ இடைக்காடன் பாடலை இகழ்ந்ததால் அவன் நகரை விட்டு நீங்க நாமும் அவன் பின் வந்து இங்குத் தங்கினோம்' என்றார். அரசன் ஆண்டவனை வணங்கித் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டான். அவன் வேண்டுகோளுக் கிணங்கிப் பெருமான் பெருமாட்டியோடும் புலவர்களோடும் கோயிலுக்குத் திரும்பினார். அரசன் அந்த இடைக்காடனுக்கு உபசாரங்கள் பல செய்து அவனுக்கும் ஏனைய புலவர்களுக்கும் தக்க சன்மானங்களையும் செய்தான். தன் மகன் அரிமர்த்தனனுக்கு முடிசூட்டிச் சிவனடி சேர்ந்தான்.

திருவிளையாடல் அம்மானை

நின்றசொக்க னாலயத்தில் நீங்கிவட ஆலவாய்ச்
சென்றிடைக்கா டன்பிணக்குத் தீர்த்து வந்தான் அம்மானை
சென்றிடைக்கா டன்பிணக்குத் தீர்த்து வந்தான் ஆமாகில்
தன்னருத்தாள் வாடத் தருமமோ அம்மானை
தருமனைஅந் நாள்உதைத்த தாளன்றோ அம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

57. வலை வீசின படலம்

போற்றிக் கலிவெண்பா

.... மீன்மகனாய்ச்
செங்கையொரு நான்குடைய திண்மீன் பிடித்துவலை
மங்கையை வேட்ட மணம் போற்றி.

வலை வீசியது

சுந்தரேசப் பெருமான் ஒருசமயம் மீனாட்சி அம்மையாருக்கு வேதத்தில் உள்ள சில உண்மையான ரகசியங்களை உபதேசித்தார். யாது காரணத்தாலோ அம்மை அதனைச் சிறிது அசிரத்தையுடன் கேட்டாள். பரமன் அம்மை மீது கோபம் கொண்டு, 'நான் சொல்லும் போது முக்கியமான பொருளை ஆதரவு இல்லாதவள் போலக் கேட்டாய் ஆதலால் ஆசாரமில்லாத பரதவர் குலத்தில் பெண்ணாகப் பிறக்க வேண்டும்' என்று சபித்தார். அம்பிகை சற்றுப் பயந்தார். அதற்கிணங்கி ஐயன் அம்மையைப் பார்த்து, 'நீ பரதவர் தலைவன் மகளாய் வளர்க. நாம் வளர்ந்து உன்னைத் திருமணம் செய்து கொள்வோம்' என்றார்.

விநாயகப் பெருமானும் முருகப் பெருமானும் பரமன் சந்நிதியடைந்து சாத்திரங்களையும் சுவாமி திருக்கரத்திலிருந்த சிவஞானபோதத்தையும் வாங்கிக் கடலில் எறிந்தனர். சமயமறியாது தம் புதல்வர் இருவரையும் உள்ளே விட்ட குற்றத்திற்காக வாயில் காவலாளியான நந்திதேவர் மீது கோபம் கொண்டு 'நீ ஒரு சுறா மீனாகக் கடலில் கிடக்க' எனச் சபித்தார். முருகனை வணிகருக்கு ஊமைப்பிள்ளையாய் இருக்க என்றும் விநாயகரைச் சபிக்காமலும் விட்டார். பரமன் ஆணைப்படி அம்மை பரதவர் குலத்தில் பெண்ணாகப்பிறந்து அவர்களால் வளர்க்கப்பட்டு வந்தார். அவர்கள் குலத்திற்கேற்றபடி அலங்கரிக்கப்பெற்று அழகுடன் வளர்ந்தார். நந்திதேவரும் அங்குள்ள கடல்சுறா மீனாகப் பிறந்து கடலைக் கலக்கியும் பரதவர் தோணிகளைக் கவிழ்த்தும் அவர்கள் இட்ட வலையில் படாமலும் அவர்களை அச்சுறுத்தி வந்தார். பரதவர்கள் பெரிதும் வருந்தினர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பரதவர் தலைவன் இதனை உணர்ந்து, 'இக்கடலில் எங்களைத் துன்புறுத்தி வரும் சுறா மீனைப் பிடித்துத் தருபவனுக்கு என் மகளைத் திருமணம் செய்து கொடுப்பேன்' என்றான். பரமன் வலைஞன் போன்ற வேடத்துடன் வந்து ஒரு தோணியில் ஏறிக் கடலிற்குச்சென்று தன் தோளிலிருந்த வலையை எடுத்து விசையுடன் வீசினார். அதனுள் அச்சுறா மீன் வந்து அகப்பட்டுக் கொண்டது. இழுத்துக் கரையில் போட்டார். பரதவர்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் அதனை மொய்த்துக் கொண்டார்கள். தலைவனும் தான் கொடுத்த வாக்குப்படித் தன் மகளாக வளர்த்த அம்மையை அவ்வலைஞனுக்கு அவர்கள் குலாசாரப்படி

திருமணம் செய்து கொடுத்தான். உடனே வலைஞனும் வலைஞன் மகளும் பரமேசுவரன் பார்வதி வடிவில் ரிஷபாரூடராக விண்ணில் தோன்றிப் பரதவர்களுக்கு அருள் புரிந்தனர். சுறாமீனும் தன் பழைய உருவான நந்திதேவர் வடிவத்தைப் பெற்றது. அனைவரும் இவர்களை வீழ்ந்து வணங்கித் திருவருள் பெற்று உய்ந்தனர். அரிமர்த்தனன் ஆட்சி தொடர்ந்தது.

திருவிளையாடல் அம்மானை

வானோர் தொழுமதுரை வள்ளல் பராவனெனத்
தானே வலைவீசும் தண்கடல் வாய் அம்மானை
தானே வலைவீசும் தண்கடல் வாய் ஆமாகில்
மேனாள் விருப்பமுண்டோ மீனிலன்று அம்மானை
மீனே கண்ணான மனைவி மீனவன்றான் அம்மானை.

58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

போற்றிக் கலிவெண்பா

....துரங்கமறை
ஆன்றதிருவாதவூர் அந்தணருக்கு ஐந்தெழுத்தின்
மூன்றுபொருள் தேற்றும் முறைபோற்றி.

வாதவூரடிகளுக்கு உபதேசித்தது

மதுரைக்கு அருகிலுள்ள திருவாதவூர் என்னும் ஊரில்அமாத்தியப் பிராமண குலத்தில் அவதரித்தார் ஒருவர். அவர் தம் பதினாறு ஆண்டுகள் முடிவதற்குள் வேதாகமம் மற்றும் 64 கலைகளில் வல்லவராக விளங்கினார். இவர் புகழ் அரிமர்த்தன பாண்டியனை எட்டவே அவன் பல வரிசைகளை அனுப்பி அவரை வரவழைத்தான். 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டத்தை அளித்துத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தன் மந்திரி சபையில் முதல் மந்திரியாக அமர்த்திக் கொண்டான். அவரும் அமைச்சு காரியங்களை நன்கு கவனித்து அரசனுக்கு வெற்றியும் புகழும் சேர வைத்தார்.

அதே நேரத்தில் தன்னைக் கடைத்தேற்ற ஒரு நல்ல ஆசாரியரையும் தேடி வந்தார். நல்ல வேளை ஒன்றுவாய்த்தது. ஒரு நாள் குதிரைக் காவலன் அரச சபைக்கு வந்து 'அரசே, நம் குதிரைப் படையில் குதிரைகள் குறைவாக உள்ளன. அதனைப் பலப்படுத்த நல்ல புதிய குதிரைகளை வாங்க வேண்டும்' என்று முறையிட்டான். அரசனும் வாதவூரரை நோக்கி, 'நீர் நமது பொக்கிஷத்தைத் திறந்து வேண்டும் நிதியை எடுத்துத் திருப்பெருந்துறை சென்று நல்ல குதிரைகளை வாங்கி வரவும்' என்று ஆணையிட்டான். வாதவூர் அமைச்சரும் பொன்னை ஆள்கள் மீதும் ஒட்டகங்களின் மீதும் அனுப்பிவிட்டுத் தான் சுந்தரேசப் பெருமான் ஆலயம் சென்று

பொற்றாமரையில் நீராடி மீனாட்சி அம்மையையும் சுந்தரேசப் பெருமானையும் வணங்கித் திருநீறு தரித்து, உத்தரவு பெற்றுக் குதிரை வாங்கச் சென்றார்.

அவருக்கு அருள்புரிய எண்ணிய இறைவனும் திருப்பெருந்துறை என்னும் தலத்தில் குருந்த மரத்தடியில் ஆசாரிய கோலத்துடன் பல மாணவர் சூழ எழுந்தருளினார். வாதவூரர் ஆலயத்துள் சென்றதும் அவர்மீது திருக்கண் சார்த்தினார். வாதவூரரும் ஆசாரியன் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். பெருமான் அவருக்குத் தீக்கை செய்து சூக்கும பஞ்சாட்சரத்தை உபதேசித்து ஆட்கொண்டார். அன்பர் நாவினில் ஞானவாணி வந்து தங்கினாள். தித்திக்கும் மணி வார்த்தைகளால் பாடிப் பரமனை மகிழ்வித்தார். இதற்கு மகிழ்ந்த இறைவன் அவருக்கு மாணிக்கவாசகர் என்ற நாமத்தைச் சூட்டியருளினார். மாணிக்கவாசகர் உலகை மறந்தார். குதிரை வாங்க வந்த வேலையை மறந்தார். இறைவன் அருள் வயப்பட்டார். ஆதலால் தாம் கொண்டு வந்த செல்வத்தை எல்லாம், சிவப்பணிக்கும் சிவாலயத் திருப்பணிக்கும் சிவனடியார் திருப்பணிக்கும் செலவு செய்து வந்தார். இதனை அறிந்த அரசன் ஏவலர்கள் இச்செய்தியைத் தம் மன்னனிடம் தெரிவித்தனர். அரசன் திருமுகம் அனுப்பிக் குதிரைகளுடன் விரைவில் மதுரைக்கு வர ஆணையிட்டான். மாணிக்கவாசகர் திகைத்தார். என்செய்வது என்று ஆண்டவனை வேண்டினர். ஆண்டவனும் 'ஆவணி மூலத்தன்று குதிரைகள் வந்து சேரும்' என்று அரசனுக்குச் சொல்லியனுப்புமாறு அசரீரியாய் அருளினார். அமைச்சர் மதுரை திரும்பினார். அரசன் வரவேற்று புதுக் குதிரைகள் வந்தால் தங்குவதற்கு லாயங்களையும் தண்ணீர்த் தொட்டிகளையும் அமைக்கப் பணித்தான். வேலைகளும் நடந்தன. ஆவணி மூலமும் சமீபித்தது. குதிரைகள் வரவில்லை. அரசன் கோபம் கொண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாணிக்கவாசகரைப் பலவாறாகத் தண்டிக்கச் செய்தான். சரீர அபிமானம் அற்ற மாணிக்கவாசகர் அரசன் தண்டனையால் வருந்தவில்லை. இறைவனை எண்ணிக் கொண்டே தண்டனையை அனுபவித்தார். இறைவன் அவருக்கு அருள் புரியத் திருவுளம் கொண்டான்.

திருவிளையாடல் அம்மானை

வாதவூரற்கு மதுரேசர் பெருந்துறையில்
போத வுபதேசம் புகன்றனர்காண் அம்மானை
போத வுபதேசம் புகன்றனரே ஆமாகில்
காதலரைத் தங்குருவாக் காண்பரோ அம்மானை
காணார்யார் தங்குருவாக் காதலரை அம்மானை.

59. நரி பரியாக்கிய படலம்

போற்றிக் கலிவெண்பா

....தேன்ததும்பும்
வேம்புநறுந் தாரான்முன் வெவ்வாய் நரித்திரளை
வாம்பரியாத் தந்த வரம் போற்றி.

நரியை பரியாக்கியது

அன்பர் மாணிக்கவாசகரை அரசன் ஏவலாளர் தண்டனை கொடுத்ததைக் கண்டு பொறாத ஆண்டவன். நந்திதேவர் முதலிய பிரதம கணங்களை அழைத்தார். அவர்களும் வந்தனர். காட்டிலுள்ள நரிகளை எல்லாம் நல்ல பரிகளாக மாற்றினார். ஒவ்வொரு குதிரை மீதும் ஒவ்வொரு சிவகணத்தைக் குதிரைப் பாகராக அமரச் செய்தார். தான் வேதமாகிய ஒரு குதிரையின் மீது ஏறிக் கொண்டு அந்தக் குதிரைகளைச் செலுத்திக் கொண்டு மதுரையை நோக்கி வந்தார். இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர் மக்கள். அரசனும் குதிரையின் வரவறிந்து மகிழ்ந்தான். மந்திரியை அழைத்துப் பலவகையாகப் புகழ்ந்து பாராட்டினான். குதிரைத் தலைவராக வந்த இறைவனுக்கு மரியாதைகள் செய்தான்.அவரும் குதிரைகள் இலக்கணங்களை எல்லாம் தெளிவாகச் சொன்னார். குதிரைகள் ஓடும் ஐந்து வகையான ஓட்டங்களையும் ஓட்டிக் காட்டினார். குதிரைகளைக் கயிறு மாற்றி அரசனிடம் கொடுத்து மறைந்தார். யாவரும் மகிழ்ந்தனர். அமைச்சரும் ஆண்டவனைப் பலவாறு துதித்தார். இரவு வந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெரியமது ராபுரியில் பேரானோன் பாண்டியன்முன்
நரியைப் பரியாக்கு நற்றொழிலோ அம்மானை
நரியைப் பரியாக்கு நற்றொழிலான் ஆமாகில்
அரிய வித்தை கற்றவனுக் கன்னமரிது அம்மானை
அன்னமொரு பக்கத் தமருமவற்கு அம்மானை.

60. பரி நரியாக்கிய படலம்

போற்றிக் கலிவெண்பா

....வாம்பரிகள்
நின்றபரிகள் நிணம் பிடுங்கி யூளையிட்டுத்
தின்றுநரி யாகும் செயல் போற்றி.

பரியை நரியாக்கியது

இறைவன் நல்ல குதிரைகளைக் கொண்டு வந்து அரசனுக்குக் கொடுத்துத் தன் கவலையைப் போக்கினார் என்று மாணிக்கவாசகர் சிவபெருமான் கருணையை நினைந்து அவனைத் துதித்து வணங்கி வழிபட்டார். இரவு வந்தது. காலையில் குதிரைகளாக மாறி வந்த நரிகள் இறைவன் திருவிளையாட்டால் நரிகளாக மாறிக் காட்டிற்குப் போய் முன்போல சுதந்திரமாக வாழவேண்டும் என்று எண்ணி நகரை நள்ளிருளில் துன்பப்படுத்தி ஏற்கெனவே இருந்த குதிரைகளைக் கொன்று ஓடிவிட்டன. நகரம் கலங்கியது. மக்கள் அவதிப்பட்டனர். இதனை அறிந்த அரசன் தம் மந்திரி தன்னை ஏமாற்றி விட்டார் என்று எண்ணி ஆட்களைக் கொண்டு அவரை தண்டிக்கச் செய்தான். மாணிக்கவாசகர் இறைவனை நினைந்து அழுது பாடி வணங்கினார்.

அடியார்படும் துன்பத்தைக் கண்டு பொறாத பெருமான் வைகை நதியை வெள்ளமாய் ஓடி வரப் பணித்தார். பயங்கரமான வேகத்துடனும் நதி பெருகி நகரை அழிக்க வருவது போல வந்தது. மக்கள் பயந்தனர். தண்டலாளர் மாணிக்கவாசகரை விட்டுவிட்டு உயிர் பிழைக்க ஓடினர். அன்பரும் ஆண்டவனை நினைந்து துதித்துத் தம்மை மறந்திருந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விரித்தபுக ழாலவாய் மேவு சுந்த ரேசர்பெரும்
பரித்திரளை தூநரியாப் பண்டு செய்தார் அம்மானை
பரித்திரளைத் தூநரியாப் பண்டு செய்தார் ஆமாகில்
மரித்தலா வாசியையேன் மாய்வித்தார் அம்மானை
மாயந்தான் யாவும் வகுத்தனர் காண் அம்மானை.

61. மண் சுமந்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... அன்றொருத்திக்கு
ஆளாய் முதுகிலடிபட்டு மண்சுமந்து
தாளாண்மை செய்த சயம் போற்றி.



மண் சுமந்தது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அரசன் அமைச்சர்களை அழைத்து வைகைக் கரையை அடைத்து வெள்ளத்தை நிறுத்தி ஊர் மக்களைக் காப்பாற்ற ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்டான். ஊரிலுள்ள குடிமக்கள் அனைவருக்கும் வைகைக் கரையை அளந்து கொடுத்து அவரவருக்கு விடப்பட்ட பங்கை அடைத்து விட வேண்டுமென்று அதிகாரிகள் ஆணையிட்டனர். தங்கள் தங்களுக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைக்க இயலாதவர்கள் ஆட்களை ஏவினார்கள். சிலர் தாங்களே அவ்வேலையில் ஈடுபட்டனர்.

மதுரைக்குத் தென்கீழ்த் திசையில் பிட்டு விற்றுப் பிழைக்கும் ஆயிரம் பிறைகண்ட நரை மூதாட்டி வந்தி என்பாள் ஒருத்திக்கு மட்டும் ஆள் கிடைக்கவில்லை. அரசன் ஆணைக்குப் பயந்து சுந்தரேசப்பெருமானை வேண்டினாள். அவரும் இவள் வேண்டுகோளை ஏற்று மீனாட்சி அம்மையாருக்குத் தெரியாமல் கூலியாள் வேடத்துடன் தலையில் கூடையும் தோளில் மண்வெட்டியும் சுமந்து 'கூலி கொடுத்து என்னை வேலை கொள்வாருளரோ' என்று கூவிக் கொண்டு வந்தி இருக்குமிடத்திற்கு வந்தார். வந்தி மிகவும் மகிழ்ந்தாள். ஆளை அழைத்துத் தன் பங்கை அடைக்கக் கேட்டாள். சுவாமியும் சம்மதம் தெரிவித்து முதலில் பசியைத் தணிக்க கொஞ்சம் பிட்டை வாங்கி உண்டு கொஞ்சம் கையிலும் எடுத்துக் கொண்டு வைகைக் கரையை அடைந்தார். அதிகாரிகளிடம் வந்தியின் ஆள் என்று பெயரைப் பதிவு செய்து கொண்டார். கரையை அடைக்காமல் பல ஆடல்களைப் புரிந்து கொண்டு திரிந்தார். அரசன் ஏவலாளர் அரசனிடம் சென்று குடிமக்களுக்கு அளந்து விடப்பட்ட பங்கெல்லாம் அடைபட்டு விட்டன. ஆனால் வந்திக்கு விடப்பட்ட பங்கு மட்டும் அடைபடவில்லை என்றனர்.

அரசன் நதிக்கரைக்கு வந்து பார்வையிட்டான். வந்தியாளைத் தன்னிடம் அழைத்து வருமாறு ஆட்களை அனுப்பினான். தலையில் ஒரு கூடை மண்ணுடன் நின்றிருந்த ஆளை அரசன் ஆட்கள் இழுத்துக் கொண்டு போய் விட்டனர். அரசனும் கோபம் கொண்டு ஆளின் முதுகில் தன் கைப்பிரம்பால் ஒரு அடி அடித்தான். ஆளாக வந்த இறைவன் அக்கூடை மண்ணை வந்தி கரையில் கொட்டி மறைந்தார். வெள்ளம் நின்றது. இறைவன் முதுகில் பட்ட அடி சகல ஜீவ ராசிகளின் முதுகிலும் பட்டது. இறைவன் உயிருக்குயிராய் எங்கும் யாவரிடத்தும் கலந்து நிற்கிறான் என்ற உண்மையைக் காட்டியது. அரசன் வியந்தான்.அப்போது அசரீரி, 'அரசனே நீ தர்ம வழியில் ஈட்டிய பொருளை மாணிக்கவாசகர் மூலம் குதிரை வாங்க அனுப்பினாய், அவர் அப்பொருளைச் சிவாலயத்திருப்பணிக்கு செலவு செய்தார். நீ குதிரை வேண்டும்போது நரிகளைப் பரிகளாக்கி உம்மிடம் ஒப்புவித்தோம். திருவிளையாடல் காரணமாய் அவைகள் காட்டில் ஓடி மறைந்தன. நீ அமைச்சரைத் தண்டித்தாய். அது பொறுக்காமல் வெள்ளம் வரச் செய்தோம். வந்தி என்ற பிட்டு வாணிச்சிக்காக மண் சுமந்து உன்னால் அடி பட்டு அவளுக்குச் சிவலோக பதவி அளித்தோம். மாணிக்க வாசகரின் பெருமையை நீ உள்ளவாறு உணரவில்லை. இத்தனையும் செய்தது அன்பன் வாதவூரன் பொருட்டு' என்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அரசன் பயந்து மாணிக்கவாசகரைத் தேடிச் சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து தன்னை மன்னித்தருளுமாறு வேண்டினான். அன்பரும், 'இவ்வளவும் உன்னை அடைந்ததால் எனக்குக் கிடைத்தது' என்று அரசனுக்கு ஆசி கூறி இறைவனை வணங்கினார். பின் அவர் கட்டளைப்படி தில்லையை அடைந்து பல அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார். புத்தர்களை வாதில் வென்று சைவ சமயத்தை நிலைநாட்டினார். தாம் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் ஆண்டவனே ஓர் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதப்பெருமை பெற்றார். ஆனி மகத்தன்று தம் 32வது வயதில் நடராஜப் பெருமான் திருவடி நீழலை அடைந்தார். சிலநாள் கழித்து அரிமர்த்தன பாண்டியன் தன் மகனான ஜகந்நாத பாண்டியனுக்கு முடிசூட்டிச் சிவபதம் அடைந்தான்.

திருவிளையாடல் அம்மானை

மண் சுமந்த வையைதனில் சார்ந்து மது ரேசனன்னீர்ப்
பெண்சுமந்தோன் மண் சுமந்தான் பிட்டுக்காய் அம்மானை
பெண்சுமந்தோன் மண் சுமந்தான் பிட்டுக்காய் ஆமாகில்
மண் சுமந்து மாற்றடியேன் வாய்ந்தவன்காண் அம்மானை
மாவினைத்தீ மேலாக்கு வந்ததினால் அம்மானை.

62. பாண்டியன் சுரந்தீர்த்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... கோளமணர்
வீறுகெடக் கூன் நிமிர்ந்து வெப்பொழித்துப் பாண்டியனை
நீறு புனைவித்த நிலை போற்றி.

பாண்டியன் சுரம் தீர்த்தது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சகந்நாத பாண்டியனுக்குப் பின் பல பாண்டியர்கள் நாட்டை ஆண்டனர். கடைசியாகக்கூன் பாண்டியன் என்னும் அரசன் நாட்டினை ஆண்டான். இவன் சோழ அரசன் மகளான மங்கையர்க்கரசியாரை மணந்தான். அவருடன் வந்த குலச்சிறையாரைத் தன் மந்திரியாக்கிக் கொண்டான். அரசன் ஊழ்வினை காரணமாகச் சமண சமயத்தைச் சார்ந்தார். குடிமக்களும் சமணர்களானார்கள். அரசியாரும் மந்திரியாரும் அரசன் அநுமதி பெற்றுச் சைவர்களாக இருந்தனர். இவ்விருவரும் தினந்தோறும் சுந்தரேசப் பெருமானை வணங்கிக் கொண்டு வந்தனர். நாடு சைவ நாடாக வேண்டும். அரசனும் குடிகளும் சைவர்களாக வேண்டும். திருநீற்று நெறி பரவ வேண்டும் என்று இறைவனை வேண்டி வந்தனர்.

ஒருநாள் இறைவனை வணங்கச் செல்லும் போது சோழ நாட்டிருந்து வந்த அந்தணரைக் கண்டனர். அந்த அந்தணர். 'எங்கள் நாட்டில் சீகாழிப் பதியில் அவதரித்த ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டு சகல கலைகளிலும் வல்லவராக விளங்குகிறார். தலங்களை எல்லாம் பாடிக் கொண்டு வருகிறார். இத்தலத்திற்கும் வருவார்' என்று கூற மகிழ்ந்தனர். அவரைத் தம் நாட்டிற்கு வரவழைத்து சமண இருளைப் போக்கி சைவத்தை நிலைநாட்ட வேண்டும் என்று விரும்பி ஒரு திருமுகம் எழுதி அனுப்பினர். அவரும் மதுரைக்கு வந்தார். அமைச்சர் அவரைவரவேற்று ஆலயத்தில் இருந்த அம்மையாரை அறிமுகப்படுத்தி வாகீச முனிவர் திருமடத்தில் தங்க ஏற்பாடு செய்தார். இதைக் கேள்விப்பட்ட எண்ணாயிரம் சமணர் அவர் தங்கியிருந்த மடத்தில் தீயிட்டனர். அத்தீ வெப்பு நோயாக அரசனைச் சென்று பற்றற்றும் என்று சுவாமிகள் ஆணையிட அவ்வாறே அரசனும் சுரநோயால் பீடிக்கப்பட்டான். சமண வைத்தியர்கள் மந்திரம் ஓதினர். மயிற்பீலிகளால் தடவினர். ஆனாலும் சுரம் அதிகமாயிற்று. அரசியாரும் அமைச்சரும் அரசன் அனுமதி பெற்று சம்பந்தரை அரசன் சபைக்கு எழுந்தருளி சுரநோயைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஞானசம்பந்தர் அவ்வாறே வந்தார். பதிகம் பாடித் திருநீறு தடவி அரசன் வலப்பாகத்தில் இருந்த சுரத்தை தணிவித்தார். மீண்டும் அரசன் வேண்டுகோளுக்கிணங்க இடப்பாகத்திலும் திருநீறு பூசி அங்குள்ள சுரத்தையும் நீக்கினார். அரசன் உய்ந்தான். சுவாமிகள் பார்வையால், பரிசத்தால், வாசகத்தால் பேறு பெற்றான்.

திருவிளையாடல் அம்மானை

தேகமது ரேசன்கூன் தென்னவனும் கன்றுதவப்
பூசுரனா லே சுரநோய் போக்கினான் அம்மானை
பூசுரனா லேசுரநோய் போக்கினா னாமாகில்
மாசுரநோய் தீர்த்தவன்கூன் மாற்றானோ அம்மானை
மாற்றினான் கூனிலா வழிசமென் றம்மானை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

63. சமணரைக் கழுவேற்றிய படலம்

போற்றிக் கலிவெண்பா

.... சீறமணர்
அங்கனலும் வேகவதி யாறும் தமிழுறிய
வெங்கழுவி லேற்றும் விறல் போற்றி.

சமணரைக் கழுவேற்றியது

அரசன் உய்ந்ததும், அரசியும் அமைச்சரும் ஞானசம்பந்தர் திருவடியில் வீழ்ந்து வணங்கித் தங்கள் நாட்டினைச் சைவமாக்க வேண்டும் என வேண்டினர். சுவாமிகளும் கோயிலுக்குச் சென்று சமணருடன் வாது செய்யப் பரமன் சம்மதம் பெற்று வந்து சபையில் அமர்ந்தார்.

சமண அடிகள்மார், மற்றும் அவர்தம் பெண்டிர் பல தீய கனாக்களைக் கண்டு பயந்து தங்கள் தலைவர்களை வாதிற்குச் செல்ல வேண்டாம் என்று தடுத்தனர். அவர்கள் செவி சாய்க்காது அரசன் சபைக்கு வந்தனர். ஞானசம்பந்தரைப் பார்த்து பல இகழ்ச்சியான வார்த்தைகளைச் சொல்லித் தம்முடன் வாதுக்கு அழைத்தனர். 'உங்கள் மந்திரம் ஓர் ஏட்டில் எழுதி நெருப்பில் இடுங்கள். நாங்களும் எங்கள் மந்திரத்தை எழுதி இடுவோம். எரியாமலிருக்கும் ஏடு வெற்றி பெற்றது' என்றனர். அவ்வாறே எண்ணாயிரம் பேரும் தங்கள் மந்திரம் எழுதிய ஏட்டை எரியவிட்டனர். அவை வெந்து சாம்பலாயின. பின் சம்பந்தர் தாம் ஒரு பாடல் எழுதி எரியிட்டார். அது எரியாமல் பச்சையாயிருந்தது. மீண்டும் சமணர்கள் சுவாமிகளைப் புனல் வாதத்திற்கு அழைத்தனர். அப்போது தாங்கள் தோற்றால் தங்களைக் கழுவில் ஏற்றுவீர்களாக என்று சொல்லி அனைவரும் வைகையை அடைந்தனர். சமணர்கள் எழுதியிட்ட ஏடுகள் அனைத்தும் வெள்ளத்தில் போயின. சம்பந்தர் ஒரு பாசுரம் எழுதி இட அது வெள்ளத்தை எதிரேறிச் சென்று சைவமே சிறந்த சமயம் என்ற உண்மையை நிலைநாட்டித் தங்கியது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். ஏடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தங்கிய இடம் திருவேடகம் என்னும் தலமாயிற்று. அங்கே அரசன் தன் சேனையோடு வந்தான். பரமனும் திருஞானசம்பந்தருக்கு நீறு சாத்தி அருள் சுரந்து மறைந்தார். சமண இருள் தீர்ந்தது. சைவ ஒளி எங்கும் பரவியது. ஞானசம்பந்தர் அனைவரிடமும் விடைபெற்று ஏனைய தலங்களை வணங்கச் சென்றார். அரசன், அரசி, அமைச்சர் முதலியோர் நாட்டை நல்ல முறையில் ஆண்டு பரமன் திருவடி நிழலை அடைந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

அன்று சொக்கர் மெய்யருள்கண் டஞ்சிக் கழுவேறிப்
பொன்றினர் எண்ணாயிரம் பேர் பொய்யமணர் அம்மானை
பொன்றினர் எண்ணாயிரம்பேர் பொய்யமணர் ஆமாகில்
நின்ற அமணருடல் நீறாமே அம்மானை
நீறானார் நஞ்சுண்டார் நிச்சயித்தில் அம்மானை.

64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

போற்றிக் கலிவெண்பா

.... அங்கொருத்தி
மன்றற்குச் சான்றாக வன்னி கிணறிலிங்கம்
அன்றழைத்துக் காட்டும் அருள் போற்றி.

வன்னியும், கிணறும் இலிங்கமும் அழைத்தது

கடற்கரை ஓரத்திலுள்ள ஒரு பட்டினத்துள் ஒரு செல்வந்தன் தன் மனைவியுடன் தவம் செய்து ஒரு பெண் மகவைப் பெற்றான். திருமணமான தன் மருமகனுக்கே தன் பெண்ணைத் தருவதாகச் சுற்றத்தாருக்குத் தெரிவித்தான். ஊழ்வினையினால் வணிகனும் அவன் மனைவியும் இறந்தனர். இதனை அறிந்த அவன் சுற்றத்தார் மதுரையிலிருந்த மருமகனுக்கு ஓர் ஓலையனுப்பினர். அதனைக் கண்ட மருமகன் வீழ்ந்து புரண்டு அழுது வருந்தினான். தன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாமன் ஊருக்கு வந்தான். சுற்றத்தார் ஆறுதல் கூறிமாமன் விருப்பத்தை அறிவித்து செல்வத்தையும் கன்னியையும் ஒப்படைத்தனர். அவன் அவளை அழைத்துக் கொண்டு மதுரை நோக்கி வரும்போது புறம்பயம் என்னும் ஊரை நெருங்கினான். இரவு வந்தது. அங்குள்ள வன்னி மரத்தடியில் கிணற்று நீரைக் கொண்டு கன்னி சமைக்க இருவரும் சாப்பிட்டு ஓய்வு எடுத்தனர். ஊழ்வினையால் ஒரு பாம்பு தீண்ட மருமகன் இறந்தான். கன்னி அழுது புரண்டாள். திருமணம் ஆகாததால் அவனைத் தீண்டாமல் ஆலயத்திலுள்ள பெருமானை வேண்டிப் புலம்பினாள்.

அப்போது அத்தலத்தைத் தரிசிக்க வந்த ஞானசம்பந்தர் இவள் செய்தி அறிந்து வருந்தி ஒரு பதிகம் பாடி இறைவனை வேண்டினார். மருமகன்உயிர் பெற்றான். கன்னி மகிழ்ந்தாள். அவள் கற்பினை வியந்த சம்பந்தர் இருவருக்கும் திருமணம் செய்வித்து ஆசி கூறி வழியனுப்பினார். ஊர் வந்த இருவரும் வணிகனின் மூத்த மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்தனர். சில நாட்களில் இளையவளுக்கும் ஒரு மகன் பிறந்தான். ஒருமுறை சிறுவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டனர். அப்போது மூத்தவள், 'நீ என் கணவனுக்கு ஆசைப்பட்டு வந்தவள் தானே! அக்னி சாட்சியாய் மணந்தவளா? உனக்கேன் இந்த கர்வம்' என்று இழித்துப் பேசினாள்.

அதற்கு இளையவள் தன் வரலாற்றைச் சொல்லி 'எனக்கு அக்னி சாட்சியாக ஞானசம்பந்தர் திருமணம் செய்து வைத்தார். அதற்குச் சான்றுகள் நாங்கள் தங்கியிருந்த வன்னிமரம், கிணறு, எங்களைக் காத்த சிவலிங்கம்' என்றாள். உடனே மூத்தவள், 'அச்சான்றுகளை இங்கு வரவழைத்தால் நீ கற்புடையவள்' என்றாள். இளையவள் சுந்தரேசப் பெருமானை வேண்டிக் கொள்ள, அம்மூன்றும் கோயிலின் வடகிழக்கு மூலையில் வந்தன. மூத்தவள் கண்டு வியந்தாள். இளையவள் கற்பு நிரூபிக்கப்பட்டது. அனைவரும் சுகமாய் வாழ்ந்தனர்.

திருவிளையாடல் அம்மானை

சொன்னவணி கக்கொடிக்காச் சொக்கேசர் அங்கழைத்தார்
வன்னி கிணறிலிங்க மாமதுரைக்கு அம்மானை
வன்னி கிணறிலிங்க மாமதுரைக்கு ஆமாகில்
மன்னினார் தூதேனோ பரவைமுன் சென்று அம்மானை
பரவையே ஜோடி வரப் பார்த்ததுமுண்டு அம்மானை.

திருவாலவாய்க் காண்டம் முற்றிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருச்சனைப் படலம்

போற்றிக் கலிவெண்பா

.... அன்றிறைவன்
ஆற்றிய ஆடல் அறுபத்து நான்கனையும்
சாற்றியதென் முனிவன் தாள் போற்றி சாற்றிய
வண்ணம் கேட்டார் சித்த மாமுனிவர் தாள் போற்றி
தண்ணங்கயற்கண்ணி தாள் போற்றி அண்ணலருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணைமுகப் போது.

காசி கங்கைக் கரையில் முத்தி மண்டபத்திலிருந்து அகத்திய முனிவர் திருவிளையாடல் புராண வரலாறுகளைச் சொன்னதும், ரிஷிகள், முனிவர்கள் யாவரும் நீராடி விசாலாட்சி அம்மை சமேதரான விசுவநாதப் பெருமானை வணங்கிவிடை பெற்றுக் கொண்டு தவ பலத்தால் ஆகாய வழியாகப் பல தலங்களை வணங்கிக் கொண்டு மதுரைக்கு வந்து பொற்றாமரையில் நீராடி சித்தி விநாயகர், மீனாட்சி அம்மையார் சுந்தரேசப்பெருமான், வெள்ளியம்பலவாணர் யாவரையும் வணங்கி வழிபட்டுச் சில நாள் தங்கிப் பேறு பெற்றனர்.

'ஆடலேற்றினான், கூடலாலவாய்
பாடியே மனம், நாடி வாழ்மினே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூற்பயன்

திங்களணி திருவாலவாய் எம்மண்ணல் திருவிளையாட்டு
இவையன்பு செய்துகேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
வாழ்நாளு நனிபெறுவர் வானா டெய்திப்
புங்கவராய் அங்குள்ள போக மூழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

வாழ்த்து

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்ப
நல்குக உயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக உலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta.



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தெய்வானை உடனமர் ஸ்கந்தகுரு நாதன்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின் வெள்ளிவிழா நினைவாக
சமர்ப்பிக்கப்பட்ட ரத்னக்கிரீடம் மற்றும் தங்க சிம்மாசனத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவிளையாடற் புராணத்தின் பெருமை

சைவர்கள் விரும்பிப் பாராயணம் செய்யும் புராணங்கள் மூன்று. பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்பனவே அம்மூன்றும். இபெரியபுராணம் தொண்டர்சீர்பரவுவது; தமிழிலே தோன்றிய மூலபுராணம். கந்தபுராணம் முருகன் பெருமையைக் கூறுவது; மகா புராணங்களில் ஒன்று திருவிளையாடற்புராணம். மதுரைப்பெருமான் புரிந்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் சொல்லும் தலபுராணம். திருவிளையாடற்புராணத்துக்கு உள்ள மதிப்பும், அதை மக்கள் பக்தியுடன் பாராயணம் செய்வது போன்ற சிறப்பும், பிற புராணங்களுக்கு உண்டாகவில்லை.

இதற்குக் காரணம் மதுரைப் பெருமானுடைய திருவிளையாடற் கதைகள் மனம் உருக்கும் தன்மையை உடையன. சிவபெருமானுடைய பெருமையைக் கூறும் எந்த நூலானாலும், துதியானாலும் திருவிளையாடற் கதைகளைச் சொல்லாமல் இருப்பதில்லை. திருவிளையாடற் கதைகளை தெரிந்து கொள்ளாதவர்கள் சிவபெருமானுடைய புகழை முற்றும் தெரிந்தவர்களாக மாட்டார்கள். சைவ சமய ஆசாரியர்களாகிய திருஞான சம்பந்தருடைய வரலாற்றில் முக்கியமானது, அவர் சமணர்களோடு வாதிட்டு வென்ற பகுதி. அதனோடு தொடர்புடைய பல நிகழ்ச்சிகள் திருவிளையாடற் புராணத்தில் வருகின்றன. மாணிக்கவாசகருடைய வரலாற்றின் பெரும்பகுதி, மதுரையிலே நிகழ்ந்தது. அதனோடு தொடர்புடைய பல நிகழ்ச்சிகள் இப்புராணத்தில் பல திருவிளையாடல்களாக உருப்பெற்று நிற்கின்றன.

சங்ககாலத்துப் புலவராகிய நக்கீரரையும், முனிவர் பெருமானாகிய அகத்தியரையும் திருவிளையாடற் கதைகளிலே காண்கிறோம். தமிழ்ச் சங்கமும், அங்குள்ள புலவர்களும் காட்சி தருகிறார்கள். சிற்பத்திலும், ஓவியத்திலும், காப்பியத்திலும், தோத்திரத்திலும் படர்ந்து மணக்கின்றன திருவிளையாடற் கதைகள்.

இந்தப் புராணத்தைப் பாராயணம் பண்ணுகிறவர்களும், இராமாயண பாரதத்தைப் போலத் தொடர்ந்து பல நாட்களாக உரை விரித்துப் பக்தியை வளர்க்கிறவர்களும், புனித நூலென்று கயிறு சார்த்திப் பார்க்கிறவர்களும் இருக்கிறார்கள்.

வானதி பதிப்பகம் வெளியிட்ட திருவிளையாடல் நூலுக்கு
கி.வா.ஜகந்நாதன் எழுதிய முன்னுரையிலிருந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection